Registered as a News Paper

# ஈழநாதம்

Eelanatham வெள்ளி நாதம்

விலை: 12.00



உங்கள் எண்ணம் போல்
கண்கவர் தங்க நகைகளுக்கு
உத்தரவாதம் தருபவர்கள்

சிறி கருமாரி நகையகம்

177–D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

வன்னியில் நாச்சிக்குடாச் சந்தியில் செயற்பட்டு
வந்த எமது நிறுவனம் தற்போது
யாழ்ப்பாணத்தில் செயற்படுகின்றது.
(சி-7411)

நாதம் –13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | ஐப்பசி –29 | 15-11-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 270



## உயர் பாதுகாப்பு வலய ஆராய்வுக்கான முதற்சந்திப்பு



## வன்னி வந்த ஜப்பானிய உயர் மட்டக் குழு



இடைக்கால நிர்வாக சபைக்கு என்ன நடந்தது?

பக்கம் – 03



அறிவின் வேர்களைத் தேடி ....

பக்கம் – 06

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 15.11.2002

# சர்வதேச உதவிகளின் வருகையும் அதற்கான உலகின் எதிர்பார்ப்பும்

இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை திருப்திகரமாகவும் நம்பிக்கையூட்டும் வகையிலும் அமைந்ததன் எதிரொலியாக உலகளாவிய ரீதியில் எதிர்கால சமாதான நகர்வுகளுக்கு ஆதரவுக் கரங்கள் நீள ஆரம்பித்துள்ளன.

பொருளாதார ரீதியில் மிகவும் மோசமான நிலையில் இருக்கும் சிறிலங்காவை காப்பாற்ற வேண்டுமெனில் எந்த நெருக்கடியையும் அச்சுறுத்தலையும் எதிர்கொண்டு சமாதானச் செயற்பாடுகளை முன்னெடுத்தே தீரவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது என்பது தெளிவான விடயமாகும்.

நீண்ட கால யுத்தத்தில் கடந்தகால சிங்கள அரசுகள் தமது நிதிவளத்தையும் மனித வளத்தையும் இழந்துள்ள நிலையில் மேலும் போரைத் தொடரும் தீவிரத்தை கைவிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டமையும், போர் முனைப்புக்கொண்ட சந்திரிகாவின் அரசை தென்னிலங்கை மக்கள் தூக்கியெறிந்தமையும், ரணிலின் புதிய அரசு சமாதான வழியை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தையும் ஏற்படுத்தியது.

சர்வதேசத்தின் உதவியின்றி ஆட்சியைத் தொடரமுடியாத சூழலில் தான் அரசு விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் தீவிரமும் துரிதமும் காட்ட ஆரம்பித்தது.

அதன் பலாபலன்களாகவே இன்று சிறிலங்காவுக்கான உதவிக்கரங்கள் உலகெங்குமிருந்து நீள ஆரம்பித்துள்ளன.

இந்த உதவிக்கரங்கள் மீதான நம்பிக்கையில் தான் சிறிலங்காவின் எதிர்கால வளர்ச்சி குறித்து அரசு ஒரு நம்பிக்கையான நிலையை உருவாக்கத் தலைப்பட்டுள்ளது எனலாம்.

உதவி வழங்க முன்வரும் நாடுகள் சமாதானம் குறித்த நம்பிக்கையின் அடிப்படையில் அவற்றை வழங்கப் போகின்றன என்பதுதான் முக்கியமான விடயமாகும்.

சமாதானம் என்று அவர்கள் கருதுவதும் தமிழ் மக்கள் நினைப்பதும் நிரந்தரமான போர்நிறுத்தம் மட்டுமே என்று அரசு கருதிவிடக்கூடாது. இயல்பு வாழ்க்கை என்ற பெயரில் பொருளாதாரத் தடையை நீக்கிவிட்டால் போதும் என அரசு எண்ணிவிடக்கூடாது.

புனர்வாழ்வு புனரமைப்பு என்ற பெயரில், இராணுவ உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் அவற்றை மேற்கொள்ளலாம் என்று தப்புக் கணக்குப் போட்டுவிடக்கூடாது.

தென்பகுதிப் பேரினவாத சக்திகளையும் சமாளித்து, பௌத்தமதவாதிகளையும் திருப்திப்படுத்தி ஒரு சம்பிரதாயபூர்வ அமைதியை உருவாக்கிக் கொண்டால் சமாதானம் நிலைத்துவிடும் என கனவு காணக்கூடாது.

தமிழ் மக்கள் விரும்பும் சமாதானம் உரிமையுடன் சம்பந்தப்பட்டது.

தமிழ் மக்களுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் யாவும் அவர்களின் பாரம்பரிய தாயக மண்ணில் எந்தவித இராணுவ அச்சுறுத்தல்களும் அற்றநிலையில் மேற்கொள்ளப்படவேண்டியது.

எனவேதான் சர்வதேசம் உதவிக்கரங்களை நீட்டும் அதே சமயத்தில் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற விடயத்திலும் அதிக அக்கறை கொள்ளவேண்டும் என்பதை இங்கு வலியுறுத்திக்கூற வேண்டியதாக உள்ளது.

உலக உதவிகள் குவிவது சிறிலங்காவுக்கு மகிழ்ச்சியும் நம்பிக்கையையும் ஊட்டும் விடயம் என்பதில் ஐயமில்லை.

சிறிலங்காவின் இந்த நம்பிக்கை தமிழ் மக்களின் நம்பிக்கைகளை சிதைக்காத வகையில் நிரந்தர சமாதானத்திற்கான அரசியற்தீர்வு என்ற விடயத்தில் விசுவாசமாகவும் உறுதியாகவும் செயற்படவேண்டும் என்பதே மிகமிக முக்கியமான விடயமாகும். இந்த விடயத்தில் விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களும் விட்டுக் கொடுப்புக்களை செய்து சிறிலங்காவின் பேரினவாத சக்திகளை திருப்திப்படுத்த முன்வரவேண்டும் என அரசு எதிர்பார்க்கக்கூடாது.

உரிமைகளை சமாதான வழியில் பெறமுடியும் என்ற நம்பிக்கையுடன் தான் இன்றைய அரசுடன் பேச்சுகளில் விடுதலைப்புலிகள் இறங்கியுள்ளார்கள் முன்னெடுக்கிறார்கள்...

இந்த முன்னெடுப்புத்தான் இன்றைய சர்வதேச ஆதரவினதும், உதவிகளினதும் வருகைக்கான ஆதாரம் என்பதை அரசாங்கம் மட்டுமல்ல தென்பகுதி மக்களும் புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ஏனெனில் சமாதானத் தீர்வுக்கான தடைகளை ஏற்படுத்த முனையும் தீயசக்திகளை இனங்கண்டு நிராகரிக்க வேண்டியவர்கள் அவர்களே.



# தூரனின் பார்வையில்...




# மன்னனின் தீர்ப்பு மனிதனின் தீர்ப்பு மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு...

தமிழீழ தேசியத்தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் மீதான சிறிலங்கா நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கண்டித்து தமிழீழமெங்கும் மக்கள் திரண்டெழுந்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்து வருகிறார்கள்.

ஒரு நீதிமன்றத் தீர்ப்புக்கு இந்தளவு மக்களின் எதிர்ப்பு குமுறி எழுவதானது, அந்தத் தீர்ப்பின் நியாமின்மையையும் அதன் உள் நோக்கம் கொண்ட தன்மையையும், குறிப்பிட்ட அந்த வழக்கு விசாரணையின் பக்கச்சார்பு அணுகுமுறையையும் தான் காட்டுகின்றது.

சிறிலங்காவின் நீதி மன்றங்கள் கடந்த காலங்களில் எவ்வாறெல்லாம் தமிழ்மக்களுக்கு எதிரான வழக்குகளில் அரசியல் எஜமானர்களின் அபிலாஷைகளுக்கேற்ப தீர்ப்புகளை வழங்கி வந்துள்ளார்கள் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

அப்பாவித் தமிழ்மக்களை சந்தேகங்களின் பேரில் கைது செய்து அவர்களைச் சித்திரவதை செய்து, மிரட்டி அச்சுறுத்தி ஏன், பலவேளைகளில் கொன்றுவிடும் அளவுக்கு பலாத்காரத்தை பிரயோகித்து செய்யாத குற்றங்களைச் செய்தோம் என ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்று வழக்குகளைச் சோடித்து போலிச் சாட்சிகளையும், சாட்சிய ஆதாரங்களையும் கூட உருவாக்கி குற்றப்பத்திரிகைகளைத் தாக்கல் செய்து, சிறிலங்காவின் தலைநகரில் வைத்தே விசாரணைகளையும் மேற்கொண்டு, அவ்வப்போதைய அரசியல் ஆட்சியாளர்களின் அபிலாஷைகளுக்கும் தேவைகளுக்கும் மேற்ப தீர்ப்புகளை வழங்குவதை சிறிலங்காவின் நீதிமன்றங்கள் கடந்த சில தசாப்தங்களாக ஒரு கலையாகவே செய்து வருகின்றது.

இத்திட்ட மிட்ட நடவடிக்கையில் சிறிலங்கா அரசின் கடந்த கால ஆட்சியாளர்கள் - படைத்தரப்பினர்- பொலிஸ்பிரிவினர் நீதிமன்றங்கள் - சட்டமா அதிபர் திணைக்களம் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதன் மூலம் பல்லாயிரக் கணக்கிலான அப்பாவித் தமிழ் மக்கள் மிகவும் அநீதியான முறையில் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் பாதிக்கப்பட்டும் வருகின்றனர்.

நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படவேண்டும் என ஒவ்வொரு அரசாங்கமும் பெயரளவில் புலம்பிக் அநீதிக்கு ஆதரவாகவும் நடந்து கொண்டு தமிழ் மக்களுக்கு எதிரான வழக்குகளில் மனோ தர்மத்திற்கும் மனிததர்மத்திற்கும், ஏன் வரையறை செய்யப்பட்ட அரசியல்- சட்ட விதிமுறைகளுக்கும் எதிராக தீர்ப்புகளை வழங்கிய சம்பவங்கள் சிறிலங்காவின் நீதிமன்ற வரலாற்றில் ஏராளம் உண்டு.

இதனை பலர் மறுக்கலாம்.. மறுப்பதன் மூலம் உண்மைகள் மறைக்கப்பட்டுவிடும் என அவர்கள் நினைப்பது தவறு சட்டம், சிறிலங்காவின் சனாதிபதியை- அவர் எந்தளவு மோசமான இனவெறியாளராக- சர்வாதி காரியாக- ஊழல் மோசடி பேர்வழியாக இருந்தாலும் அவர் மீது எந்தவகையிலும் நீதிமன்ற நடவடிக்கைகளை எவரும் மேற்கொள்ள முடியாத வகையில் பாதுகாப்பளிப்பதே இந்த நாட்டின் மிகமோசமான நிர்வாகக் கட்டமைப்பிற்குச் சான்றாகும்.

கிடப்பில் போடவேண்டிய வழக்கு விசாரணைகளையும், உடனடியாக விசாரித்து தண்டனை வழங்க வேண்டிய வழக்கு விசாரணைகளையும் அரசாங்கமே தீர்மானிக்கிறது. சட்டமா அதிபர் பெரும்பாலும் நீதி- மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களினதும், நிறைவேற்று அதிகார சனாதிபதியினதும் அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படும் நபராகவே அவர் கருதப்படுகிறார்.

சுயாதீனமாக இந்த அமைப்புகள் செயற்படுவதாக கூறிக் கொண்டாலும் யதார்த்தம் அப்படியானதல்ல.

**காகம் கத்தி நம்மூரில் மாடு சாவதில்லை**
**-இந்தக்**
**கையாலாகாதவரை நாம் கணிப்பதில்லை**
**ஜெயபாலனின் கவிதையிலிருந்து**

இவர்கள் அனைவரினதும் ஒன்றிணைந்த கூட்டு நடவடிக்கைகளின் அநீதியான செயற்பாடுகளுக்கு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் காரணமின்றி, சாட்சிய ஆதாரங்கள் ஏதுமின்றி, வழக்குகள் ஏதுமின்றி, நீதி விசாரணைகள் ஏதுமின்றி, சந்தேகத்தின் பேரில் கைதாகி பல ஆண்டுகளாக சிறைகளில் வாடும் நூற்றுக்கணக்கான தமிழ் அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் மற்றும் குடும்பஸ்தர்களே சிறந்த உதாரணமாகும்.

'தாமதிக்கப்படும் நீதி மறுக்கப்படும் நீதியாகும்' என்பது ஒரு பொதுவான கருத்து. இது

கொண்டாலும் நீதிபதிகளை நியமிக்கும் தன்மையிலே நேர்மையீனமும், ஊழலும், நிலவி வந்துள்ளமை ஒன்றும் ரகசியமான விடயமல்ல.

பெருமளவிலான நீதிபதிகள் அரசுக்கு அனுசரணையாகவும், சிறிலங்கா நீதி இலாகாவின் செயற்பாட்டுத் தத்துவமாகவே உள்ளது.

அரசு செய்யும் குற்றங்களையும், ஆட்சியாளர்களின் ஊழல் மோசடி நடவடிக்கைகளையும், அரச பயங்கரவாதச் செயல்களையும், கவனத்தில் எடுக்காது அவற்றிற்கு மௌன அங்கீகாரம் அளிப்பதையும், அல்லது அவற்றை மூடி மறைத்து அவற்றின் அடையாளங்களை இல்லாமல் செய்வதிலும் மேலும் அதனையும் மீறி ஏதாவது விசாரணைக்கெடுக்க வேண்டிய நிலை ஏற்படின் அதனை கிடப்பில் போட்டு விசாரணையை இழுத்தடித்து குழப்புவதிலும், சிறிலங்காவின் நீதி நிர்வாகம் மற்றும் காவல்துறையின் சாதனைகள் தமிழ் மக்களுக்கு புரியாத ஒன்றல்ல.

ஆளும் அதிகார வர்க்கத்தின் அறிவுறுத்தல்களை ஏற்று அவர்களின் அபிலாஷைகளைப் பாதுகாத்து, அதேவேளை தங்களின் பதவிகளையும் தற் கொள்வதிலேயே சிறிலங்காவின் நீதித்துறை சார்ந்த சகல அமைப்புகளினதும் திணைக்களங்களினதும் தலைமைகள் குறியாக இருந்துள்ளன.

உயர்- மற்றும் உச்சநீதிமன்ற- மற்றும் சிறப்பு நீதிமன்ற நீதிபதிகளும் தமது சுயாதீனமான செயற்பாடுகளின் அரசியல் அழுத்தங்களும் தலையீடுகளும் இருப்பதை பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியுமுள்ளனர்.

இந்த அழுத்தங்களை புறக்கணித்து நியாயமாகவும் கண்ணியமாகவும் நடக்க- கடமையாற்ற முனையும் அதிகாரிகளும் ஏன் நீதிபதிகளும், கூட அரசியல் பழிவாங்கல்களுக்குள் சிக்கிய சம்பவங்களையும் நாடு நன்கு அறியும்.

சிறிலங்கா சுதந்திரமடைந்தது முதல் இன்றுவரை ஆட்சியில் இருந்தோர் செய்த சமூகவிரோத, தேசவிரோத, இனவிரோத செயற்பாடுகள், ஊழல் மோசடிக் குற்றங்கள், மனிதஉரிமை மீறல் நடவடிக்கைகள், அரசு பயங்கரவாதச் செய்பாடுகள், பாலியல் தொடர்பான குற்றங்கள், கொலைகள், மற்றும் குறிப்பாக போரின் பேரால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட- நன்கு திட்டமிட்ட மிகவும் கொடூரமான- பலவகைப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கை கள் குறித்து- அவர்கள் கூறிக்கொள்ளும் சுயாதீன முறையிலான நடவடிக்கைகள்- விசாரணைகள் - போன்றவற்றை சிறிலங்காவின் நீதிநிர்வாகக் கட்டமைப்புகளும் நீதிமன்றங்களும் உரிய காலத்தில், உடனுக்குடன் செய்திருக்குமானால் சிறிலங்காவின் தொண்ணூறு சதவீதத்திற்கும் அதிகமான அரசியல்வாதிகளும், தலைவர்களும் பலநூற்றுக்கணக்கான ஆண்டுகள் சிறைவாசத்தில் இருக்க வேண்டியவர்களாகவே இருந்திருப்பர். இது மிகைப்படுத்திக் கூறப்படும் ஒன்றல்ல.

சிறிலங்காவின் இன்றைய சனாதிபதியும் அவரது பொதுசன ஐக்கிய முன்னணிப் பரிவாரங்களும் கடந்த ஆட்சிக்காலத்தில்

(15ம் பக்கம் பார்க்க)

தொழில் இல்லாத வாழ்வு குற்றம்: கலை இல்லாத தொழில் மிருகத்தனம் -கமபர்லண்ட்

# இடைக்கால நிர்வாக சபைக்கு என்ன நடந்தது?

நிலாந்தன்



**சனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் தமது விசுவாசத்தை நிரூபிக்கச் சமாதானத்தைப் பலியிடத் துணிந்தமையென்பது அபகீர்த்திக்குரிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பாதுகாக்கும் ஒரு பாரம்பரியத்தில் எதிர்பார்த்திருக்கப்பட வேண்டிய ஒன்றே.**

ஆங்கிலத்தில் ஒரு வசனம் உண்டு **No Justice No Peace** என்று. இதன் அர்த்தம் நீதி இல்லை என்றால் சமாதானமும் இல்லை என்று வரும்.

அண்மையில் சிறிலங்காவின் நீதித்துறை சமாதான முயற்சிகளுக்கு எதிராக இரண்டு தீர்ப்புக்களை வழங்கியிருக்கிறது.

முதலாவது 19வது திருத்தச் சட்டத்தின் மீதான தீர்ப்பு மற்றது மத்திய வங்கிக் குண்டுக் தாக்குதல் வழக்கின் மீதான தீர்ப்பு.

கடந்த சுமார் 10 மாதகால சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை அதன் எதிரிகள் மேற்கொண்ட எல்லாவித சதி முயற்சிகளோடும் ஒப்பிடுகையில் மேற்படி தீர்ப்புக்கள் பாரதூரமானவை. குறிப்பாக 19 ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிரான தீர்ப்பு யதார்த்தத்தில் சமாதான முயற்சிகளுக்குள்ள வரையறைகளை உணர்த்திவிட்டது.

கடந்த 10 மாத காலத்திலும் சமாதானத்துக்கு எதிரான சக்திகளை மிகவும் சந்தோசப்படுத்திய அவர்களுக்கு புத்துணர்ச்சியூட்டிய ஒரு தீர்ப்பு அது. தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் யுத்த வியாபாரிகளைப் பொறுத்தவரை ஒரு நன்நாள்.

அச்சட்டத்திருத்தம் கொழும்பில் அதிகமதிகம் புலிகளோடு சேர்த்தே கதைக்கப்பட்டது. புலிகள் கேட்பதை எல்லாம் ரணில் விக்கிரமசிங்க கொடுப்பதற்குத் தடையாகக் காணப்படும் சனாதிபதியைப் பலவீனப்படுத்த புலிகளும் அரசாங்கமும் சேர்ந்து வகுத்த திட்டம் இதுவென்ற அபிப்பிராயம் படித்த சிங்களவரில் ஒரு பகுதியினர் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது.

மேலோட்டமாகப் பார்த்தால் மேற்படி தீர்ப்பு சனாதிபதியின் அதிகாரங்களைப் பாதுகாப்பது போலத் தோன்றும். ஆனால் ஆழமாகப் பார்த்தால் அது சமாதானத்தின் வழியில் காணப்படும் ஒரு கெட்ட சகுனமே.

சனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் தமது விசுவாசத்தை நிரூபிக்கச் சமாதானத்தைப் பலியிடத் துணிந்தமையென்பது அபகீர்த்திக்குரிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பாதுகாக்கும் ஒரு பாரம்பரியத்தில் எதிர்பார்த்திருக்கப்பட வேண்டிய ஒன்றே.

இத்தனைக்கும் இத்திருத்தச் சட்டத்தை வளர்த்தது சட்ட மற்றும் அரசியலமைப்பு விவகாரங்களில் நிபுணர்கள் என்றழைக்கப்பட்ட பேராசிரியர் G.L. பீரிஸ் போன்றோரே.

இச்சட்டத்திருத்தம் இப்படியொரு முடிவை அடையக்கூடும் என்பதை ஏனிந்த நிபுணர்கள் ஊகிக்காமல் விட்டார்கள்?

இத்தீர்ப்பு சமாதானத்தை அதன் அடுத்த கட்டங்களுக்கு நகர்த்துவதற்குரிய தளத்தைப் பலவீனப்படுத்திவிட்டது.

இது சமாதானத்துக்கான நிகழ்ச்சி நிரலை மாற்றி வரையும்படி செய்து விட்டது.

முதற்கட்டப் பேச்சுக்களின் நிகழ்ச்சி நிரலில் இடைக்கால நிர்வாகசபை பற்றிய உரையாடல் தவிர்க்கப்பட்டதற்குரிய பின்னணி இதுதான் என்று கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

அதாவது இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவுவதானால் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மை ஆதரவு அவசியம். ஏனெனில் ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை சாதாரண சட்டங்களின் கீழ் கொண்டுவர முடியாது.

அதற்கு விசேட சட்டமூலம் கொண்டுவரப்பட்டு அது நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். சில சமயம் விவகாரம் நீதிமன்றத்திடமும் விடப்படலாம்.

ஆனால் 19 வது திருத்தச் சட்டத்தை நீதிமன்றம் நிராகரித்து விட்டிருந்த ஒரு பலவீனமான பின்னணியில் இடைக்கால நிர்வாக சபைக்காக 2/3 பெரும்பான்மை ஆதரவைக் கோரும் வாக்கெடுப்பை நடாத்துவது • விவேகமானது அல்ல என்று அரசாங்கம் கருதியதாக கூறப்படுகிறது.

இதனால் சமாதானம் செய்பவர்கள் நேர்வழியில் சிந்திப்பதைத் தவிர்த்து அரசியலமைப்பில் முட்டுப்படாத விதத்தில் குறுக்கு வழியில் மாற்று ஏற்பாடுகளைக் குறித்துச் சிந்திக்கவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் உண்டாகியது.

இதன் விளைவே கூட்டுச் செயலணிகள்.

இங்கேயும் தாம் நீதிமன்றம் போகப்போவதாக யுத்த வியாபாரிகள் கூச்சலிட்டார்கள்.

செயலணிகள் அரசியலமைப்புக்கு உட்பட்டவைகளாயிருக்க வேண்டும் என்று சந்திரிகா கூறலானார்.

முஸ்லிம்கள் கிழக்கில் ஏற்கனவே தமது விவகாரங்களைக் கவனிப்பதற்கென்று ஒரு அமைச்சரைப் பெற்றிருக்கிறார்கள்.

இந்த அமைச்சின் கீழ் இதுவரை காலமும் அவர்கள் பெற்றுவரும் நன்மைகளைப் பாதுகாக்கும் விதத்திலேயே செயலணிகளுக்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்.

இதெல்லாம் இப்படியிருக்க செயலணிகள் யாருக்குப் பதில் கூறும் அமைப்புக்களாயிருக்க வேண்டும் என்பதில் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் அபிப்பிராய பேதங்கள் தோன்றியதாகவும் கூறப்பட்டது.

செயலணிகள் பிரதமரின் அலுவலகத்துக்குப் பதில் கூறும் அமைப்புக்களாயிருக்க வேண்டும் என்று அரசாங்கம் கேட்டது. புலிகளோ அவை சுயாதீனமான அமைப்புக்களாயிருக்க வேண்டும் என்று கேட்டார்கள்.

தற்சமயம் புனர்வாழ்வு புனரமைப்பு போன்ற பணிகளை பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருக்கும் திட்ட அமுலாக்கல் அமைச்சே மேற்கொண்டு வருவதால் செயலணிகளைப் பிரதமரின் அலுவலகத்திற்குப் பதில் கூறும் அமைப்புக்களாக உருவாக்கினால் சட்ட மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள் வராது என்று அரசாங்கம் கருதியதாகக் கூறப்படுகிறது.

ஆனால் செயலணிகள் அதிகாரப் பகிர்வின் கருக்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் இதில் ஆகக் குறைந்த பட்சம் பலஸ்தீன மற்றும் கோசோவா மாதிரிகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும் தமிழர் தரப்பில் வற்புறுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

முடிவில் செயலணிகளுக்குப் பதிலாக உபகுழுக்களை அமைப்பது என்று சமரசம் காணப்பட்டது.

உபகுழுக்கள் புலிகள் கேட்டபடியே சுயாதீனமாக இயங்கும். அரச அமைப்புக்கள் எதற்கும் அவை பதில்கூற வேண்டியதில்லை. பதிலாக, பேச்சுக்களில் கலந்து கொள்ளும் இருதரப்புப் பிரதிநிதிகளும் அடங்கிய குழுவுக்கே அவை பதில் கூற வேண்டியிருக்கும்.

இது ஒப்பீட்டளவில் சுயாதீனமானது. தனித்துவமானது. உத்தேச இடைக்கால நிர்வாக சபையின் கருக்கள் இதில் காணப்படுகின்றன.

இதில் வரும் Sub - உப என்ற சொல் யுத்த வியாபாரிகளின் கவனத்தை அதிகம் ஈர்க்காத அல்லது அவர்களின் கவனத்தை திசை திருப்பும் ஒன்றாயிருக்கலாம்.

உபகுழுக்கள் என்பதெல்லாம் நடைமுறையில் ஒரு நடமாடும் இடைக்கால நிர்வாக சபைதான் என்று யாரேனும் ஒரு யுத்தவியாபாரி கனவு கண்டு விழித்தெழுந்து கூச்சல் போடலாம். கோர்ட்டுக்கும் போகலாம்.

ஆனால் இடைக்கால நிர்வாக சபையிலிருந்து உபகுழுக்கள் வரை படிப்படியாக நிகழ்ந்து வரும்உருவ மற்றும் உள்ளடக்க மாற்றங்கள் ஒன்றைக் காட்டுகின்றன. அது - கொழும்பில் ரணில் எவ்வளவு பலவீனமாக இருக்கிறார் என்பது.

சமாதானத்தைப் பொறுத்தவரை அவர் நியூயோர்க்கிலும் லண்டனிலும் பலசாலிபோலத் தோன்றலாம். ஆனால் கொழும்பில் அவர் மிகவும் பலவீனமானவராகத் தோன்றுகிறார்.

இந்நிலையில் - வெற்றிகரமாகச் சமாதானம் செய்வது என்பது வெற்றிகரமாகச் சந்திரிகாவைக் கையாள்வது தான்.

ஒரு கனவான் அரசியலுக்குரிய விழுமியங்களை மதித்து விட்டுக் கொடுத்துப் பேரம் பேச சனாதிபதி சந்திரிகா தயாராக இருப்பதாகத் தெரியவில்லை.

எனவே அவரைத் தனிமைப்படுத்தும் ஒரு வியூகத்தில் புலிகளையும் பங்காளிகளாக்குவதைத் தவிர ரணிலுக்கு வேறு தெரிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை.

சந்திரிகாவை விடவும் புலிகளுடன் ஒரு கனவான் அரசியலைச் செய்ய அவர் தயாராகி விட்டது போலத் தெரிகிறது.

இது விசயத்தில் புலிகள் ரணிலை அனுசரித்துப் போவதன் மூலம் • சிங்களவர்களை பிரித்தாள எத்தனிப்பதாக ஒரு பகுதி படித்த சிங்களவர்கள் கூச்சலிடுகிறார்கள்.

பிரித்தானியப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற அன்ரன் பாலசிங்கம் பிரித்தானியரின் அதே பிரித்தாளும் உத்தியைப் பாவித்து இரு பிரதான சிங்களக் கட்சிகளையும் பிரிக்கப் பார்க்கிறார் என்று சம்பிக்க லியனாராயச்சி என்ற பத்தி எழுத்தாளர் டெய்லி மிரரில் எழுதுகிறார்.

சந்திரிகாவுக்கு எதிராக ரணிலைப் பலப்படுத்துவதன் மூலம் புலிகள் ரணிலிடம் இருந்து எதையோ இரகசியமாக பெற முயல்வதாக ஒரு சந்தேகம் படித்த சிங்களவரில் ஒரு பகுதியினர் மத்தியில் பரவி வருகிறது.

19 ஆவது திருத்தச் சட்டத்தின் மீதான தீர்ப்பை ஊக்குவித்த அபிப்பிராயப் பின்புலம் இதுவே என்று ஊகிக்கப்படுகிறது.

ஆனால் இடைக்கால நிர்வாக சபையிலிருந்து செயலணிகள் என்றும் உபகுழுக்கள் என்றும் நிகழ்ந்து வரும் பெயர் மற்றும் உருவ உள்ளடக்க மாற்றங்கள் எல்லாவற்றுக்கும் பின்னால் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து பேரம் பேசும் ஒரு பாரம்பரியம் மெல்லத் துளிர்த்து வளர்ந்து வருகிறது.

இது யுத்த வியாபாரிகளின் முகவர்கள் போலத் தொழிற்படும் மீடியாக்காரர்களுக்கு தெரிவதேயில்லை.

அவர்கள் பரப்பும் வதந்திகளால் வசியஞ் செய்யப்பட்ட ஒரு பகுதி படித்த சிங்களவருக்கும் தெரிவதில்லை.

இம்முறை சமாதானம் செய்வதில் உள்ள மிகவும் கவர்ச்சியான மிகவும் முதிர்ச்சியான மிகவும் நம்பிக்கையூட்டும் ஓரம்சமே இதுதான். பரஸ்பரம் விட்டுக்கொடுத்து பேரம் பேசும் ஒரு வித கனவான் அரசியல்.

யுத்த வியாபாரிகளுக்குத் தலைமை தாங்கிவரும் ஒரு சனாதிபதியைப் பாதுகாக்கும் அரசியலமைப்பின் வரையறைக்குள் சர்வதேச அளவில் பலமாகவும் தனது சொந்தத் தலை நகரில் பலவீனமாகவும் காணப்படும் ஒரு பிரதமரும் சிறுபான்மை மக்களும் சேர்ந்து செய்யக் கூடிய ஆகக் கூடிய பட்ச விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையும் இது தான்.

◆




மனிதன் உருவாக்கும் போலிப்பணத்தை விட பணம் உருவாக்கும் போலி மனிதரே அதிகம். -சிட்னி ஹாரிஸ்

# சமாதானத்தை அடைய வேண்டப்படும் விழிப்புணர்வு

> குடாநாட்டில் ஆயுதங்களுடன் நடமாடிய குழுக்களின் ஆயுதங்கள் முற்றாக களையப்படவில்லை. இப்போது அந்த ஆயுதங்கள் வன்முறைகளுக்கு உதவத்தொடங்கியிருப்பது புலனாகின்றது. குடாநாட்டில் இப்போது இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்கள் ஆயுதமுனையிலானவையாக இருக்கின்றது.

**தீ**பாவளி கொண்டாட்டங்கள் சமாதானத்துக்கான சூழலில் மிகக் கூடிய களிப்புணர்வோடு இடம்பெற்றுவிட்டன. கடந்த வாரம் இப்பண்டிகை தினத்துக்கு பல நாள்கள் முன்னதாகவே ஏற்பாட்டு ஆரவாரங்கள் தொடங்கி ஆர்முடுகல் வேகத்தில் ஏற்றங்கண்டிருந்தன.

பல வருடங்களுக்குப் பின்னர் மகிழ்ச்சிகரமானதாக வரவேற்கப்பட்ட தீபாவளி தினம் அதிர்ச்சி தரும் நிகழ்வுகளையும் கொண்டிருந்தது. அன்றைய தினம் குடாநாட்டில் பரவலாக இடம்பெற்ற ரௌடித்தனங்கள் இன்னும் ஏமாற்றமளிக்கும் ஒன்றாகவே அமைந்துள்ளன.



குடாநாட்டில் விரும்பத்தகாத செயல்கள் தீபாவளி தினத்தில் மட்டும் தான் நடந்தன என்பதல்ல இதன் அர்த்தம்.முன்னரும் அடிதடிகளும் மிரட்டல்களும் துன்புறுத்தல்களும் பெண்கள் மீதான இம்சை (முயற்சிகளும்) இடம்பெற்றுள்ளன. இப்போதும் இடம்பெறுகின்றன.

ஆனால் தீபாவளி தினத்தில் பரவலாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் மக்களிடம் இயல்பாக இருந்த ஒரு நம்பிக்கையையும் அக்கும்பல்கள் மீது இருந்ததாகக் கருதப்பட்ட எச்சரிக்கைகளையும் தகர்த்தெறிந்து விட்டனவோ என்றுபலரும் எண்ணத் தலைப்படுகின்றனர். அன்று மட்டும் மதுபோதை தலைக்கு ஏறியவர்கள் வீதிகளிலும் சனநடமாட்டம் நிரம்பிய நகர்ப்பகுதிகளிலும் செய்த அட்டகாசங்களில் கண்ணியமானவர்கள் கூட காயங்களுக்கு உள்ளாகினர். பாதிக்கப்பட்டனர்.

ஐந்து சந்திப் பகுதியில் இருவேறு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் பலர் காயமடைந்தனர். இதில் 18 வயது இளைஞர்ஒருவர் தாடைப் பகுதி கண்இமைப் பகுதிகளில் மோசமான கத்திக் குத்துக்கு ஆளாகினார். தாவடியில் இடம்பெற்ற கைகலப்பில் ஒருவர் நெஞ்சுப்பகுதியில் போத்தல் குத்துக்கு இலக்காகினார்.

இதேபோன்று மீசாலையிலும் கலவரமொன்றில் இளைஞன் படுகாயமடைந்தான். யாழ்-மத்திய பேருந்து நிலையத்தில் ஒரு கும்பல் குழப்பம் விளைவித்ததோடு பேருந்தையும் சேதப்படுத்தியது. வெளிவந்தவற்றில் ஒரு சிலவே இந்தச் சம்பவங்கள். இதை விடவும் இக்கைகலப்புக்களால் போக்குவரவில் ஈடுபட்டிருந்த பெண்கள் உட்பட பலரும் வாய் வீச்சுக்களுக்கு ஆளாகியிருக்கின்றனர்.

வழமையாகவே இலங்கைத் தீவு முழுவதும் பண்டிகை தினங்களில் இடம்பெறும் சம்பவங்களின் வகைகளே இவை என்றாலும் கூட இன்றைய சூழ்நிலையில் குடாநாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டே இவை பேசப்படுகின்றன குறிப்பாக விடுதலைப்புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களோடு ஒப்பிட்டு வரையறுக்கப்படுகின்றன.

இந்த ஒப்பீடு இப்போதுதான் புதிதாக மேற்கொள்ளப்படுகின்றது என்றில்லை ஆயினும் குடாநாட்டு மக்கள் புலிகளின் பிரவேசத்தை மிகத்தீவிரமாக எதிர்பார்த்து இருந்ததன் காரணங்களில் ஒன்று வன்னி யில் உள்ள இத்தகைய சம்பவங்கள் அற்ற சமநிலை ஏற்பட வேண்டும் என்பது ஆகும். சமூக கலாச்சார சீரழிவு முயற்சிகள் கணிசமான அளவு புலிகளின் வருகைக்குப் பின்னர் குறைவடைந்து விட்டாலும் இத்தகைய ரௌடித்தனங்கள் மக்களுக்கும் புலிகளுக்கும் தமிழர்களின் அரசியல் பரிமாணத்துக்கும் ஒரு சவாலாகவே இருப்பது போல் தெரிகின்றன. இதற்கு காரணங்களும் இருக்கின்றன.

இத்தகைய வன்முறை முயற்சிகளுக்கு எதிராக நடவடிக்கையை எடுக்கவோ தண்டனைகளை வழங்கவோ விடுதலைப் புலிகள் மறுக்கப்பட்டு இருப்பதுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கைகள் கூட அரசியல் நோக்கூடாக திரிபுபடுத்தப்பட்டு பிரச்சாரம் ஆக்கப்படுகின்றன: தனிப்பட்டவர்கள் புலிகளால் மிரட்டப்படுகிறார்கள் என்ற ஒற்றைக் கருத்தாக மட்டும் அது சில சக்திகளால் முன்வைக்கப்படுகின்றது.இதனைக் கொண்டு விடுதலைப்புலிகளுக்கு எதிரான ஒரு பிரச்சாரமே முன்னெடுக்கப்படுகிறது. குறிப்பாக தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் சிங்கள மக்கள் மத்தியில் இத்தகைய பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது. புலிகள் மனித உரிமைகளை மீறுவதாகவும் மக்களை அவசியமற்றுத் துன்புறுத்துவதாகவும் சிறந்த மொழி ஆற்றலோடு அவர்களுக்குக் கூறப்படுகின்றன: இதை கடந்த வாரம் சௌமிய இளைஞர் அமைப்பு பலரது கவனத்துக்கும் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

சௌமிய இளைஞர் அமைப்பு யார் அதிலஈடுபடுகின்றனர் என்று தெரிவிக்காவிட்டாலும் தமிழ் விரோத சக்திகளே அதில் தீவிரமாக உள்ளன என்பது வெளிப்படையானது. தவிரவும் மற்றயவர்களின் பாதிப்புக்கள் ஊடாக நம் பொருளாதாரத்தை கடந்த சில வருடங்களில் மேம்படுத்திக் கொண்டவர்களும் இதில் அடங்குகின்றனர்.

இவர்களின் ஊக்குவிப்போடும் பின்னணியோடும் தான் இத்தகைய சமூக விரோத செயல்கள் இப்போதும் இடம் பெறுகின்றன என்பதை ஊகித்துணரலாம். இவர்களால் தமது முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை இடுபவர்களுக்கு எதிராக வன்முறைகளும் பிரயோகிக்கப்படுகின்றன.

குடாநாட்டில் ஆயுதங்களுடன் நடமாடிய குழுக்களின் ஆயுதங்கள் முற்றாக களையப்படவில்லை. இப்போது அந்த ஆயுதங்கள் இந்த வன்முறைகளுக்கு உதவத் தொடங்கியிருப்பது புலனாகின்றது. குடாநாட்டில் இப்போது இடம்பெறும் கொள்ளைச் சம்பவங்கள் ஆயுதமுனையிலானவையாக இருப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

கடந்த 2ஆம் திகதி இரவு நகைக்கடை ஒன்றில் பணிபுரியும் இளைஞர் சிலரால் துப்பாக்கியால் சுடப்பட்டு அவரிடம் இருந்த நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன. மயிரிழையில் உயிர் தப்பிய அவர் சிகிச்சை பெறுகின்றார். மறுநாள் இந்து மதகுரு ஒருவர்நகரில் வைத்து தாக்கப்பட்டு அவர் கொள்வனவு செய்திருந்த பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. புலிகளின் வருகைக்கு முன்னர் ஆயுதப்படையினரதும் தமிழ்க் குழுக்களினதும் உறவுகளோடு பொது நிறுவனங் கள் பாடசாலைகள் அலுவல கங்கள் போன்றவற்றின் அதிகாரிகளைக் கைப்பொம்மைகள் ஆக்கிய சக்திகளால் இப்போது அவ்வாறு செய்யமுடிவதில்லை. இதற்குப்பழிவாங்கும் முகமாக அவர்களைக் கடத்திச் சென்று தாக்குவதும் வீட்டினுள் கும்பலாகப் புகுந்து தாக்குவதும் தொடங்கியுள்ளன.

சிறிலங்கா இராணுவத்தினர் உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறும் பகுதிகளுக்கு உள்ளேயே இவை நிகழ்கின்றன என்பது கவனிக்கப்படவேண்டும். அவற்றின் ஒரு வெளிப்பாடே கடந்த மாதம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அதிபர் தாக்கப்பட்டமை ஆகும்.

கடந்த காலங்களில் மக்கள் துன்புறுத்தப்பட்டமை சுரண்டப்பட்டமை தொடர்பாக வெளிப்பாடுகளை மேற்கொள்பவர்களும் மிரட்டப்படுகிறார்கள். தொலைத்தொடர்பு சாதன வசதிகள் பெருகிய நிலையில் மிரட்டல்களை விடுப்பவர்களுக்கும் சாதகமாகி விடுகின்றது. அதன் வழியாக பழைய அடாவடித்தனங்களை அம்பலமாக்குவதைத் தடுக்க மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன.

இவை தெளிவாக ஒரு செய்தியை உணர்த்துகின்றன. சமாதானத்தை விரும்பாத சக்திகள் தீவிரமாக இயங்கிவருகின்றன என்பதும் அவற்றுக்கு முகம் கொடுத்து வெற்றியடைய மக்கள் எல்லோரும் தயாராகவும் விழிப்பாகவும் இருக்க வேண்டும் என்பது தான் அது. போராயினும் அமைதியானும் அது எல்லோரதும் தீவிர விழிப்புணர்வு இன்றி வெல்லப்பட முடியாததாகவே இருக்கும்.

# குடாநாட்டுக் குறிப்புகள்



## உயிர் பெறும் துயிலும் இல்லங்கள்

யாழ்.மாவட்டத்தில் உள்ள வலிகாமம், வடமராட்சி,தென்மராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைப்பு பணிகள் வெகுவிரைவாக இடம்பெற்று வருகின்றன. கடந்த கால யுத்தங்களின் போது அரச படைகளால் அநாகரீகமான முறையில் உடைத்து சேதமாக்கப்பட்ட மேற்படி துயிலும் இல்லங்கள் சிறப்பான முறையில் எழுச்சியாக கட்டப்பட்டு வருவதுடன் பொதுமக்களும் தமது அன்பளிப்புக்களை வழங்கி வருகின்றனர்.

## மாணவர்களின் கோரிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள தொழில் நுட்பக் கல்லூரி மற்றும் உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பல்வேறு பிரச்சினைகளும் இடர்பாடுகளும் உள்ளன தளபாடப் பற்றாக்குறையில் இருந்து சகலவளங்களும் பற்றாக்குறையாக உள்ளன.

இப்பிரச்சினைகளை நிவர்த்தி செய்துதருமாறு கோரி மேற்படி மாணவர்கள் ஆர்ப் பாட்டம் ஒன்றைக் கடந்த வாரம் யாழ்.நகரில் நடத்தி இருந்தார்கள். இம்முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## பெற்றோர்களின் கவலை

யாழ்ப்பாண மாணவர்களின் கல்வித்தரம் வீழ்ச்சியடைவதற்கு தொலைக்காட்சி மற்றும் வானொலி கேட்டல் பெரும் காரணிகளாக அமைந்துள்ளதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர். தொடர்ச்சியாக மாணவர்கள் கிரிக்கெற் போட்டி பார்த்தல் பொதிகையில் இடம்பெறும் தொடர்நாடகங்கள் பார்த்தல் மற்றும் வானொலியில் சக்தி F.M இருபத்தி நான்கு மணித்தியாலங்களும் ஒலிபரப்பப்படுவதனால் இவற்றை கேட்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனால் கல்வியில் ஆர்வம் குறைவதுடன் பரீட்சைகளின் பெறுபேறுகள் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளன. 24 மணிநேரம் மின்சாரம் கிடைத்ததனால் மாணவர்கள் தொடர்ச்சியாக வானொலி தொலைக்காட்சி நிகழ்வுகளுடன் பொழுதைப் போக்குவதாக பெற்றோர்கள் பெரும்கவலை தெரிவிக்கின்றனர். தற்போது யாழ்ப்பாணத்தில் வாகனங்கள், தேனீர்கடைகள் பட்டி தொட்டி எங்கும் சக்தி (F.M)மயம்தான். இதனால் கல்விப் பொதுதராதர சாதாரணதர இறுதிப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களினது கற்றல் தொடர்பாக பெற்றோர்கள் பெரும் கவலையும் அச்சமும் கொண்டுள்ளார்கள்.

## மக்களின் எச்சரிக்கை

வலிவடக்கு மக்கள் புரிந்துணர்வு ஒப்பந்தப்படி தமக்கு இயல்பு வாழக்கை அமைய வேண்டும் என கோரிக்கை விடுத்து எழுச்சிப் பேரணி ஒன்றை நடாத்தி இருந்தனர். பல்வேறு மகஜர்களை கொடுத்தும் பல்வேறு வடிவங்களில் போராடியும் எந்தவித பயனும் கிடைக்காத மேற்படி வலிகாமம் வடக்கு மக்கள் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதான பேச்சு வார்த்தை நடைபெறும் சூழ்நிலையில் தமக்கும் மீளக்குடியமர்வதற்கான அனுமதியை மேற்படி பேச்சு வார்த்தையூடாக முன்வைத்து தீர்வை பெற்றுக் கொள்ள கடந்த வாரம் இவ் எழுச்சிப் பேரணியை நடத்தினர். மீளக்குடியமர அனுமதி கிடைக் காவிடின் தொடர்ந்து போராட்டங்கள் பல்வேறு வடிவங் களில் இடம்பெறும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## விளம்பரமும் வியாபாரமும்

அண்மையில் யாழ். நகர் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. தீபாவளி தினத்தை முன்னிட்டு மக்கள் துணிமணிகளையும் பொருட்களையும் கொள்வனவு செய்வதற்கு நகரத்தை நோக்கி படையெடுத்தனர். இவ்வருடம் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டதன் காரணமாக ஏ-9 பாதை திறக்கப்பட்டதை அடுத்து தென்பகுதி வியாபாரிகள் நேரடியாக வந்து தமது உற்பத்தி பொருட்களை விளம்பரப்படுத்தி விற்பனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதோர் விடயமாகும்.

ஈழமைந்தன்

☞ வருங்காலத்தில் மனிதன் செய்யப்போகும் தவறுகளுக்கு போதும் அடிக்கல்லே மன்னிப்பு. -அம்பிரோஸ் பிளாஸ்

# நறுக்கென...



## இராணுவத்தளபதிக்கு நீதிமன்றம் அழைப்பாணை

சிறிலங்கா இராணுவத் தளபதி லயனல் பலகல்லேவுக்கு கண்டி மாஜிஸ்ரேட் நீதிமன்றில் சமுகமளிக்குமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டிருப்பது பாதுகாப்பு வட்டாரங்களில் பலவிதமான கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பவைத்துள்ளது.

சனாதிபதி சந்திரிகாவுக்கு அனுசரணையானவர் என்று பரவலாக அறியப்பட்ட பலகல்லேவுக்கு மேலும் ஒரு வருட சேவை நீடிப்பை சனாதிபதி தன்னிச்சையாக வழங்கியதன் மூலம் இராணுவ சிரேஷ்ட உயர் அதிகாரிகள் மத்தியில் குழப்பமும் விரக்தியும் ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

இவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட பதவியுயர்வின் மூலம் இருவருக்கு அடுத்தடுத்த நிலைகளில் இருந்த பல சிரேஷ்ட அதிகாரிகள் தமது அடுத்த பதவியுயர்வினைப் பெறாமலேயே சேவையிலிருந்து ஓய்வு பெறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பலகல்லேவை இராணுவத்தளபதி என்ற நிலையிலிருந்து பாதுகாப்பு தலைமை அதிகாரி என்ற தரத்திற்கு உயர்த்த பாதுகாப்பு அமைச்சு முன்வைத்த சிபார்சினை சந்திரிகா நிராகரித்து விட்டே அவருக்கு சேவை நீடிப்பை வழங்கியுள்ளதுடன், அதனை எக்காரணத்தைக்கொண்டும் மாற்றவோ மீளாய்வு செய்யவோ முடியாது என்று சந்திரிகா பிடிவாதமாக கூறியும் விட்டார்.

இதேவேளை சந்திரிகா தனக்கு அனுசரணையானவர்களுக்கு சேவை நீடிப்பையும், பதவியுயர்வுகளையும் வழங்குவதன் மூலம் முப்படைகளினதும், பொலிஸ் படையினதும் கட்டுபாட்டினை தனக்குள் வைத்திருக்கவே விரும்புகிறார் என்பது தெரிவாகிறது.

இதற்கு வலுவான சில அரசியல் காரணங்களும் உண்டு. ஆட்சி மாற்றமோ, அரசியல் குழப்பமோ ஏற்பட்டால் படைத்தரப்பை தன்னிஷ்டப்படி செயற்படுத்த சந்திரிகா தொலைநோக்குடன் மேற்கொள்ளும் மூலோபாயம் தான் இந்த நடவடிக்கைகளாகும்.

இதனை முறியடிக்க ரணிலின் அரசும் சவாலுக்கு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தொடங்கியுள்ளது.

அத்துருகிரிய பாதுகாப்பு மறைவிட விவகாரம் தொடர்பாக ஏதோ ஒரு வகையில் பலகல்லேவை நீதிமன்றில் நிறுத்தி வழக்கில் சிக்கவைத்தால் அவரது பதவி நிலைக்கு சிக்கல் ஏற்பட்டுவிடும். அதன் மூலம் அவரை பதவியிலிருந்து நீக்கவோ மாற்றவோ முடியும்.

பலகல்லே மீதும் அவரது இராணுவ புலனாய்வுப் பிரிவுத் தலைவர் மற்றும் ஏனைய சில இராணுவத்தினர் மீதும் தொடரப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பில் தான் பலகல்லேயின் எதிர்காலம் தங்கியுள்ளது எனலாம்.

♦♦



## அதிகரிக்கத்தொடங்கும் அமைச்சர்கள் எண்ணிக்கை

அரசில் குழப்பங்கள் நெருக்கடிகள் வரும்போதெல்லாம் அரசுக்கு நெருக்கடி கொடுத்து குழப்பங்களை ஏற்படுத்தும் நபர்களை சமாளித்து அடக்க அல்லது திருப்திப்படுத்தி அமைதியாக்க அவர்களுக்கு மந்திரிப்பதவிகளை, உதவிமந்திரிப்பதவிகளை வழங்குவது என்பது சிறிலங்காவின் சனநாயக அரசியல் மரபாகவே ஆகிவிட்டது.

கடந்த, சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது - அவ்வாட்சி ஆட்டங்காணத் தொடங்கிய இறுதிக்கட்டத்தில் பெரும்பாலும் அனைத்து உறுப்பினர்களையும் அமைச்சர்களாகவும், அரை அமைச்சர்களாகவும் நியமித்து உலகிலேயே அதிக அமைச்சர்கள் உதவி அமைச்சர்களைக்கொண்ட நாடு என சிறிலங்காவுக்கு பெருமை தேடித்தந்தவர் சந்திரிகா.

அப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சியினர் இது குறித்து கடுமையாக விமர்சனம் செய்தது தெரிந்ததே. இதேவேளை தாம் ஆட்சிக்கு வந்தால் மிகக்குறைந்தளவு அமைச்சர்களைக் கொண்ட அரசையே தான் அமைப்பேன் என ரணில் பிரச்சாரம் செய்தார்.

தேர்தலில் வென்றதும் சொன்னது போல் செய்தார்.

ஆனால் காலம் போகப்போக மரபியல் வியாதி அவரையும் தொற்றிக்கொள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரித்தது.

இப்போது புதிதாக ஏழு அமைச்சர்களையும் பிரதி அமைச்சர் ஒருவரையும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவந்துள்ளது.

இதுஅரசுக்குள் ஏதோ குழப்பம் ஏற்பட்டுள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாக உள்ளது. இந்த புதிய அமைச்சர்களின் விபரங்கள் சனாதிபதியின் அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப்பட்டியலில் சேர்க்கப்படாதவர்கள், தங்களுக்கும் பதவிகள் தருமாறு அரசை நிர்பந்திக்கலாம், அல்லது கட்சி மாறப்போவதாக அச்சுறுத்தலாம்.

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள நினைக்கும் அரசியல்வாதிகள் பதவிப்பதர்களாகத் தான் இருப்பார்கள்.

அவர்களைச் சமாளித்து திருப்திப்படுத்தவேண்டிய அவசியம் ரணிலுக்கு இருக்கவே செய்கிறது. அவரது அரசு அறுதிப்பெரும்பான்மை அதிகம் இல்லாத அரசு.

எனவே எதிர்காலத்தில் அவரது அரசியல் அமைச்சர்கள் பிரதியமைச்சர்களின் எண்ணிக்கை இன்னமும் அதிகமாகக் கூடும்.

மரபுகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் தானே!

♦♦



## ராஜதந்திர யுத்தமும் மூலோபாய நகர்வுகளும்

அரசியலமைப்புக்கான 19வது திருத்தச்சட்டமூலம் தொடர்பான உச்சநீதிமன்றத் தீர்ப்பானது ரணிலின் அரசுக்கு ஒரு பின்னடைவாகவும், சந்திரிகாவுக்கு உற்சாகமூட்டும் வகையிலும் அமைந்து விட்டதையடுத்து, சிறிலங்காவின் அரசியலில் மற்றுமோர் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

ஐக்கியதேசிய முன்னணிக்கும், பொதுசன ஐக்கிய முன்னணிக்குமிடையேயான பலப்பரீட்சையின் அடுத்த கட்ட நகர்வுக்கான மூலோபாயம் குறித்து இருதரப்பிலும் தீவிரமாக ஆராயப்பட்டுவருவதாக அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு அரசியலமைப்பு மற்றும் சட்டரீதியாக என்னென்ன வழிவகைகளைக் கையாண்டு சனாதிபதிக்கு நெருக்கடிகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்தலாம் என்பது குறித்து ஐக்கிய தேசிய முன்னணி தரப்பில் ஆராயப்பட்டுவரும் அதேநேரம், ரணில் பதவியேற்று ஓராண்டு முடிய இன்னும் சிலவாரங்களேயுள்ள நிலையில் ரணிலின் ஆட்சியை தனது நிறைவேற்று அதிகார வலுவை பயன்படுத்தி கலைக்க சந்திரிகாவால் முடிந்தாலும் அதனைச்செய்து விட்டுத் தேர்தலை எதிர்கொள்ளும் துணிச்சலும் அதன் மூலம் தேர்தலில் வெற்றி பெறமுடியும் என்ற நம்பிக்கையும் இப்போது சந்திரிகாவுக்கு கிடைக்கவே கிடையாது.

ஆனால் வேறுவகைகளில் ரணிலுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து அவராகவே பதவியை விட்டு விலக வைத்து, வேறு வகையிலான அரசியல் யுக்திகளைக் கையாண்டு, மாற்று அரசொன்றைபொ.ஐ.முன்னணி அமைப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்தே சந்திரிகா சிந்திப்பதும் தெரிகிறது.

பொ.ஐ.முன்னணியின் சார்பில் சந்திரிகாவின் சகோதரமும் ஆலோசகருமான அநுரா கடந்தவாரத்தில் ஒரு பத்திரிகையில் பொ.ஐ.முன்னணி தனக்கு சாதகமான சூழ்நிலை வரும் போதுதான் தேர்தலை நடத்தும் அதுவரையில் ரணில் தானே ஆட்சியைக்கலைத்து பதவிவிலகினாலும் கூட உடன் தேர்தலை சனாதிபதி நடத்தப்போவதில்லை என்று இறுக்கமாகக் கூறியிருந்தார்.

இது தேர்தலை சந்திக்க சந்திரிகா பயப்படுவதையே காட்டுகிறது. இந்த நிலையில் ரணிலுக்கும் சந்திரிகாவுக்கும் இடையே மிகவும் இறுக்கமானதும், புதிய வியூகங்களுடன் கூடியதுமான ஒரு நிழல் ராஜதந்திர யுத்தம் தீவிரமாகியுள்ளது. இந்த யுத்தத்தில் அதிகார வலு சந்திரிகா பக்கமும், மக்கள் ஆதரவு வலு ரணில் பக்கமும் இருக்கிறது என்பது வெளிப்படை.

இந்த நிலையில் இந்த ராஜதந்திர யுத்தத்தில் யாருடைய வியூகத்தில் யார் சிக்கினாலும் சிறிலங்காவின் அரசியல் குழ ப்பம் மிகுந்ததாகவே தொடரப்போகிறது.

விடாக்கண்டனமும் தொடாக்கண்டனமும் போட்டியென்றால் வெல்வது யாராக இருக்கும்? இதுவே இப்போதுள்ள கேள்வி.

இன்னும் ஓரிரு மாதங்களில் இதற்கான விடையொன்று தெரிந்தாக வேண்டிய அவசியம் ஏற்பட்டே தீரும்.

♦♦

# ஊர்கோலம்

புதுக்குடியிருப்பு சந்தியிலிருந்து முல்லைத்தீவு செல்லும் பிரதான வீதியில் ஒரே கிடங்கும், பள்ளமும், சேறும் சகதியுமாய் மழை காலத்தில் ஒரே நரகம் தான்...

அதுவும் வாகனப் போக்குவரத்து அதிகமாகிவிட்டதால் வீதி நாளொரு கோலம் காட்டி நிற்கிறது.

வாகனாதிபதிகளுக்கு கவலை இல்லை. பாதசாரிகள் பாடுதான் பரிதாபம்..சேறு சகதி படாமல் தப்ப ஒதுங்கி நடப்பதென்றால் வேகமாக வரும் வாகனம் சர்வ சாதாரணமாக வாரியிறைத்து விட்டு போகும் சேற்றிற்கு தப்பவேமுடியாது.

வாகனாதிபதிகள் நடந்து செல்வோர் குறித்து கவலையே படுவதில்லை அவர்களின் சொகுசும், வேகமும், பலவேளைகளில் மனித நேயமற்ற பண்பாடும் பெரும்பாலான சமயங்களில் அத்து மீறி அவர்களை செயற்படவே வைத்துவிடுகின்றன.

கடந்த வாரத்தில் ஒரு மழை நாளன்று புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரிக்கு முன்னால் இந்தச்சம்பவம் நடந்தது.

ஒரு வ்யதான அம்மா ஆஸ்பத்திரியில் மருந்தெடுத்துவிட்டு மெல்ல வெளியே வந்து எதிரே இருந்த கடையொன்றில் பாண் வாங்கிகொண்டு மெதுவாக பாஸ் அலுவலகப்பக்கமாக நடந்து கொண்டிருந்தார்.

அது காலை நேரம்.. பாடசாலைப் பிள்ளைகள், அலுவலம் செல்வோர், தொழில் நிமித்தம் விரைவோர் என சன சந்தடி மிகுந்த நேரம்.

இரவு பெய்த மழையில் வீதியில் சேறும் சகதியும் நுதம்பிக்கிடந்தது.

மந்துவில் பக்கமிருந்து வேகமாக வந்த அந்த புதிய வாகனம் அந்த வீதியில் -அந்த வேகத்தில்-அந்த நேரத்தில் செல்லவேண்டிய அவசியம் ஏதும் இருந்திருக்குமோ ஆண்டவனுக்கும் அதன் சாரதிக்கும் தான்தெரியும்.

அந்த அவசர மந்த புத்திச் சாரதி சக மனிதர்கள் குறித்த அக்கறைகொண்டவராகத் தெரியவில்லை. வேகமாக வீதியில் தேங்கி நின்ற சேற்று நீரை இருபுறமும் வாகனத்தால் அள்ளித்தெளித்தபடி....

அந்த முதிய அம்மா சேற்று நீரால் குளிப்பாட்டப்பட்டவரானார்

இருபாடசாலைச் சிறுமிகளின் வெள்ளைச்சீருடை செங்காவி நிறமாக... அவர்கள் விக்கித்து நின்றார்கள். வாகனம் போயேவிட்டது.

இன்றும் எத்தனைபேர் பாதிக்கப்பட்டார்களோ.....

கெட்டவார்த்தையால் யாரோ பலமாக திட்டுவது கேட்டது. அந்த வார்த்தைகள் அசிங்கமானவை... அந்த வாகனாதிபதியின் தாயை அவமதிப்பதாக இருந்தது சுருக்கென்றது...

இதுவும்.... அதாவது அடுத்தவரின் துன்பத்தில் ரசனை காண்பதும், ஒரு விதமான மனநோயின் உச்ச வெளிப்பாடுதான்...

வாகனதாரிகளுக்கு இது சமர்ப்பணம்.

---

கிளிநொச்சி

ஒரு கடையில் சாப்பிட்டுவிட்டு, தேனீர் குடித்துக் கொண்டிருந்த சமயம் மேசையில் 'கை' துடைக்க வைத்திருந்த கடதாசி அடுக்கில் ஒரு பேப்பரை எடுத்துப் பார்த்தபோது அதில் அழகான எழுத்தில் இப்படி எழுதியிருந்தது.

இந்த நள்ளிரவில்
வெறுமையான தெருவின் அமைதி
ரம்மியமாக இருக்கிறது.
உழைத்துக் கழைத்தவன் உறங்குவதுபோல்
நெடுஞ்சாலை மல்லாந்து கிடக்கிறது.
காலடி வைக்க மனம் நடுங்குகிறது
தூக்கம் கலைந்து விட்டால்.....
மேலும்-
எனது தனிமைக்கு துணையாக
இந்த அமைதியை விடவும், அதன் மீதான
ரசனையை விடவும்
இப்போது எதுவுமேல்லை.... எனில்
நானும் அசைதலற்று.....

அதற்கு கீழ் வரிகள் கிழிக்கப்பட்டு விட்டது.. மேசையில் இருந்த ஏனைய பேப்பர்களுள் மீதி வரிகளை படிக்கும் ஆர்வத்துடன் தேடினேன் கிடைக்கவில்லை.

-யார் இந்தக் கவிஞர்....?

-அந்த அரைகுறைக்கவிதையின் வரிகள் மனதை ஆக்கிரமிக்க.. கையைத்துடைக்காது அதனை மடித்து பொக்கற்றில் வைத்துக்கொண்டு வெளியேறினேன்.

-மனதில் அந்த முகமறியாக் கவிஞனின் வரிகள் எழுப்பிய அலைகள்......

---

கடந்தவாரம் 'ஏன்' ஊர்கோலம் வரவில்லை என்றார் அவர்

'ஒரே மழை தானே.... பாதசாரி வீதியில் இறங்காமல் வீட்டிலேயே இருந்திருப்பார்.. அதாலை ஊர்க்கோலம் எப்படி இருக்கென்று தெரிந்திருக்காது' என்றார் மற்றவர்

-(புதுக்குடியிருப்பு 'அறிவுஅமுது' கடையில் இருவர் கதைத்தது)

---

கொழும்பிலிருந்து வந்த ஒருவர் சொன்னார் - 'சிலர் கண்ணியமாக தங்கடை தொழிலைச் செய்ய விருப்புகிறார்கள்'

கொழும்பில சுவீப் ரிக்கெற் விற்கும் வாகனம் ஒன்றில் மும்மொழிகளிலும் கீழ்காணும் வாசகம் எழுதப்பட்டிருந்ததை அவர் குறிப்பிட்டார்.

'கஷ்டப்பட்டு உழைப்பவன் அதிஷ்டத்தை எதிர்பார்க்கமாட்டான் - அதிஷ்டம் உன்னை சோம்பேறியாக்கி விடும்... அதிஷ்டத்தை நம்புவது தான் உன் வாழ்வில் மிகப்பெரிய துரதிஷ்டம்...

இது குறித்து அந்த வியாபாரியிடம், இப்படி எழுதியிருப்பது உன் வியாபாரத்தை பாதிக்காதா என்று கேட்டபோது அவர் இப்படிக் கூறினாராம்...

'அதிஷ்டத்தை நம்பி வாழ்பவனுக்கு இதையெல்லாம் படித்துணர பொறுமையும் இருக்காது அறிவும் இருக்காது...'

- ஆயிரத்தில் ஒரு வார்த்தையல்லவா?

பாதசாரி

---

கடமைக்கான அடிப்படைக்கொள்கை சரியில்லாவிட்டால் செயலும் சரியானதாக இருக்கமுடியாது. -டி.எட்வர்ட்ஸ்

அன்ரன் அன்பழகன்



# அறிவின் ஆழங்களைத் தேடிச் செல்லும் வேர்களென வாசிப்புப் பழக்கம்

கடந்த மாத இறுதியில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் பாடசாலை நூலக வார நிகழ்வுகள் சிறப்புடன் நடந்தேறியுள்ளது.

நூலக வாரத்தைக் கொண்டாடி, மாணவர்களை ஊக்குவிக்கும் நிலைக்கு மாணவர்களின் பரந்துபட்ட வாசிப்புப்பழக்கம் வழக்கிழந்து போய்விட்டது என்பது ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய உண்மையாகிவிட்டது. வாசிப்புப் பழக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய காரணிகள் பலவுண்டு. அவற்றுள் முதன்மையானது புத்தகங்களின் சஞ்சிகைகளின் விலைகள் தனி மனிதன் கொள்வனவு செய்ய முடியா உயரத்திற்கு இறக்கை கட்டிப் பறந்து விட்டது என பலர் குறிப்பிட்ட போதும் அதனைவிட முக்கியமான தொன்று எம் மனங்களில் உணர முடியாதபடி தனது மாயக் கவர்ச்சி வலைகளை விரித்தபடி வளர்ந்து வருகிறது.

இன்று உலகமெங்கும் தனது இருப்பினை விஸ்தரித்து வரும் 'உலக மயமாதல்' கோட்பாட்டின் ஊடே வளர்ந்து வரும் திறந்த சந்தைப் பொருளாதார முறமையின் நுகர்வுக் கலாச்சார பண்பாடொன்று உலகில் வேகமாக பரவி வருவதேயாகும். இது தனிமனித சிந்தனை ஆற்றலையும், தேசிய இனங்களின் தனித்துவங்களின் ஆன்மாக்களையும் வேகமாகத் தின்றபடி வளர்ந்து வருகிறது. Idiot box எனப்படும் தொலைக்காட்சி வலையமைப்பில் நூற்றுக்கு மேற்பட்ட அலை வரிசைகளைப் பார்க்கும் வசதியை மூன்றாம் உலக நாட்டின் மத்திய தரவர்க்கம் கூடப் பெற்று விட்டது. தமிழில் கூட நாள் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு திரைப்படங்களையும் ஏராளமான சின்னத்திரை தொலைக்காட்சி நாடகங்களையும் பார்க்க முடிகிறது. டிஸ்க் அன்ரனா, கேபிள், சற்றலைற் என வளர்ந்து விட்ட இலத்திரனியல் ஊடகங்களினூடே வழங்கப்படும் அனைத்துப் படைப்புக்களுமே வெறும் மகிழ்வூட்டும் (Romantic) மளினமான படைப்புக்களாகி விட்டன. இவை இளையவர்களின் சிந்திக்கும் ஆற்றலை, பகுக்கும் ஆற்றலை, பிரச்சினைகளை தீர்க்கும் வல்லமையை அழித்து விடுவதன் மூலம் மனிதத்தின் (Mankind) ஆன்மாவையே அழித்து விடுகின்றன.

சிங்களப் பேரினவாதிகளான "சிகல உறுமய" உறுப்பினர்களான சம்பிக ரணவக்க, சோபித தேரர் ஆகியோர் இந்த இலத்திரனியல் ஊடகங்கள் பற்றிக் குறிப்பிடும் போது "எமது மக்களை (சிங்கள் மக்களை) தமது இனத்தையும், பௌத்தத்தையும் பற்றியும் சிந்திக்கும் ஆற்றலை இந்த அலைவரிசைகள் தின்றுவிடுகின்றன. இவற்றின் அன்ரனாக்கள் சிங்கள மக்கள் மீதே குவிக்கப்பட்டுள்ளது. இவற்றை வடக்கு கிழக்கு நோக்கித் திருப்பி விட்டிருந்தால் பயங்கரவாதப் பிரச்சினை எப்போதோ தீர்ந்திருக்கும். சிங்கள மக்களும் நின்மதியாக வாழ்ந்திருப்பர் என்றனர்.

கணனி, இன்ரநெற், என்பன வாசிப்புப் பழக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் என பலர் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் இவை வாசிப்பை மேலும் நவீனப் படுத்தியுள்ளது. இலத்திரனியல் புத்தகம் (Electronic book) இப்போது புழக்கத்திற்கு வந்து விட்டது. உலக அகல வலைப்பின்னல் ஊடே (W.W.W.) உலகின் எந்தப் பகுதியில் உள்ள புத்தகத்தையும் இந்த இலத்திரனியல் புத்தகத்தில் பதிவிளக்கிக் கொள்ள முடியும். Home Personal computer. Lap top. Palm top ஆகிய கணனிகள் கூட இலத்திரனியல் புத்தகங்களாக செயற்படுகின்றது. இவற்றுக்கான புத்தக விற்பனையாளர்களாக, W.W.W open book. org, W.W.W. Xlibris Com உட்பட இருபதுக்கு மேற்பட்ட வலைப்பின்னல் புத்தக விற்பனையாளர்கள் உள்ளனர். உலகில் அச்சில் வந்த நூல்களை விடவும் அதிகமான நூல்கள், தகவல்கள் இன்ரநெற்றில்தான் உண்டு. இதன் காரணமாகத் தான் தற்போது எழுத்தறிவின் குறிகாட்டியுள் கணனி அறிவும் அவசியமானதொன்றாக கருதப்பட்டு உள்வாங்கப்பட்டுள்ளது.

வாசிப்பே ஆராயும் ஊக்கத்தைத் தரும் என்றார் காந்தியடிகள். கருத்துக்கள் மக்களைச் சரியான படி பற்றிக் கொண்டால் அது மாபெரும் சக்தியாக உருவெடுக்கும் என்றார் சமதர்ம சமூகத்தின் சிந்தனைச் சிற்பியான கார்ல்மாக்ஸ். கற்றலே மனிதனின் முதன்மையான செயற்பாடாக அமைய வேண்டும் என்றார் ரஸ்சியப் புரட்சியின் வித்தகர் லெனின், வாசிப்பு சிந்தனைத் தெளிவை ஏற்படுத்தும், ஒரு நூலகம் திறக்கப்படும் போது நூறு சிறைகள் மூடப்படும் என்றார் நவ சீனச் சிற்பியான மாவோ சேதுங். உலகின் புரட்சித் தலைவர்கள் அனைவரின் சிந்தனைகளும் வாசிப்பு மூலம் மெருகு பெற்றதை வரலாறு சான்று பகர்கிறது.

வாசிப்பு என்பது பலருக்கு மேலெழுந்த வாரியாக அமைகிறது. (இதனையே நுகர்வுக் கலாச்சாரம் வளர்க்க விரும்புகிறது.) பொழுது போக்கிற்கான இந்த வாசிப்பு முறையை விட சிந்தனை மற்றும் கோட்பாடு சார்ந்த ஆழமான வாசிப்பு என்பது அறிவின் பரப்பை விசாலமாக்கி நிபுணத்துவத்தை ஏற்படுத்துகிறது. என்பதற்கு தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனின் வாழ்வு சான்றாக அமைந்ததை இவருடனான சந்திப்பில் உணரமுடிந்தது.

"என்னுடைய தந்தையர் ஒரு அரசாங்க அதிகாரி, ஆனால் என்னுடைய அம்மாவோ முதலாம் வகுப்பு மட்டும் படித்து எழுத வாசிக்க தெரிந்து கொண்ட ஒருவர். முதலாம் வகுப்பு படித்த என்னுடைய அம்மாவிடமிருந்தே நான் வாசிக்கும் பழக்கத்தைப் பெற்றுக் கொண்டேன். அம்மாவின் வாசிப்பு ஆர்வத்துக்காகவே எங்களுடைய வீட்டிற்கு பத்திரிகைகள், சஞ்சிகைகள் எடுக்கப்பட்டன. அவரே என்னுள் வாசிக்கும் ஆர்வத்தை விதையாய் ஊன்றியவர்.

சிறுவயதில் நான் நினைக்கிறேன் என்னுடைய ஏழு அல்லது எட்டு வயதில் 'தங்க மாம்பழம்' 'மாயப்பந்து' எனும் சிறுவர்களுக்கான கதைகளை வாசித்துள்ளேன். அவை இன்னும் என்னுடைய மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. அந்த கதைகளில் வரும் பாத்திரங்களில் ஒன்றே இந்தப் பிரபாகரன்" என தனது நெஞ்சைத் தொட்டுச் சொன்னார் தமிழீழ தேசியத் தலைவர்.

தனது சத்திய சோதனைகள் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும் உளத் திண்மையைத் தந்தது தன்னுடைய சிறுவயதில் தன் அன்னை வாசித்துக் காட்டிய அரிச்சந்திர வரலாறு என்பதை தனது சுயவரலாற்று நூலான 'சத்திய சோதனை'யில் குறிப்பிட்டிருந்தார் மகாத்மா காந்தியடிகள்.

வாசிப்புப் பழக்கம் இன்றைய இளைய தலைமுறையினரிடம் அருகிப் போவதை சுட்டிக் காட்டிய தேசியத் தலைவர் அவர்கள்

பாடசாலைகளில் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும் எனவும், இவ்வேலைத் திட்டங்களில் கலை இலக்கியப் படைப்பாளிகளும் பங்கு பற்ற வேண்டும் எனவும் அப்போது கேட்டுக் கொண்டார்.

அனுபவம் அறிவின் முகம் பார்க்கும் கண்ணாடி என்பார்கள். தன் அனுபவப்பட்டறிவையும் வாசிப்பையும் இணைத்து எப்படி போரியல் நிபுணத்துவத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது எமது எதிர்காலத் தலைமுறையினருக்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். உலகின் தலைசிறந்த இராணுவக் கல்லூரிகளில் போரியல் விஞ்ஞான பாதுகாப்புக் கற்கைகளில் முதுகலைமானிப் பட்டம் பெற்றவர்கள். இவரை முறியடிக்க முடியாது. பலமுறை அடிவாங்கியபோது உலகம் இவருடைய சாதனைகளை வியப்போடு பார்த்தது.

இழந்து போன ஆணையிறவை மீட்பதற்காக மேற் கொள்ளப்பட்ட "அக்கினிச் சுவாலை" சிறிலங்கா இராணுவ வரலாற்றில் மிகப் பிரமாண்டமான இராணுவ தயாரிப்புக்களுடனான யுத்த முன்னெடுப்பாக அமைந்தது. அமெரிக்க முறையிலான War game ஒன்றை தாக்குதலுக்கு முன் நிகழ்த்தியது. இலங்கை இராணுவ வரலாற்றில் இதுவே முதற் தடவையாக அமைந்தது. சதுரங்க ஆட்டம் போல் அமைந்த இந்த ஆட்டத்தில் பிரபாகரன் பாத்திரமேற்றவர். அப்போதைய 55 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன். பாதுகாப்புக் கற்கைகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர் என்பதுடன் முன்னாள் இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் பணிப்பாளராகவும் இருந்தவர். இவரின் போரியல்அறிவு குறைந்தது 50 - 60 இராணுவ வீரர்களின் உயிரிழப்புடன் 600 பேர் வரை காயமடைவர் என முன்மொழிய வைத்தது. ஆனால் உண்மைக் களநிலவரம் இரண்டாயிரம் துருப்பினரை யுத்த அரங்கில் இருந்து அகற்றி அக்கினிச் சுவாலையையும் அணைத்து விட்டது.

இந்த முறியடிப்பு சமரின் திட்டமிடல் வழிநடத்தல் என்பன தேசியத் தலைவரின் நிபுணத்துவத்துக்கு சான்று பகர்கிறது. இந்த நிபுணத்துவத்தை வளர்த்துக் கொள்வதற்கு வாசிப்புப் பழக்கமும் தன்பங்களிப்பை செலுத்தியிருக்கிறது

---

# குதூகலம்



## முன்னேற்றமில்லாத தொழில்



அமெரிக்க சனாதிபதியாக ட்ரூமன் என்பவர் இருந்தபோது வெள்ளை மாளிகையில் விருந்தொன்றை தனது நண்பர்களுக்கு நடத்தினார்.

விருந்தினிடையே நண்பர்களுடன் பேசும் போது சொன்னார்:

"எனக்கு இந்த சனாதிபதி உத்தியோகமே பிடிக்கவில்லை"

நண்பர்கள் அதிர்ந்து போனார்கள்.

உலகிலேயே உயர்ந்த, கௌரவமான, உத்தியோகத்தைப் பிடிக்கவில்லை என்கிறாரே என்று நினைத்தனர்.

'ஏன் உங்களுக்கு இந்த உத்தியோகம் பிடிக்கவில்லை?' என்று கேட்டார் ஒருவர்.

'என்ன உத்தியோகம் இது... எவ்வளவு காலம் உழைத்தாலும் பதவியுயர்வே கிடைக்காத வேலை... என்ன முன்னேற்றம் இதில் இருக்கப் போகிறது' என்றார் ட்ரூமன்.

## யார் போக்கிரி



அவர் ஒரு நீதிபதி- கடுமையானவர்- அகங்காரி- அது மட்டுமல்ல மற்றவர்களை ஆணவத்துடன் கிண்டல் செய்வதில் பிரசித்தமானவர்.

ஒரு நாள் அவர் தன் கைத்தடியால் கைதி ஒருவரைச் சுட்டிக்காட்டி 'என் கைத்தடியின் ஒரு முனையில் ஒரு போக்கிரி இருக்கிறான் என்றார்.

உடனே அந்தக் கைதி கேட்டான்-

'பிரபுவே... எந்த முனையில்?...'

நீதிபதியின் முகத்தில் ஈயாடவில்லை.

## பழசும் பழமும்...



கி.வா.ஜகந்நாதன் ஒரு தமிழ் அறிஞர்.

அவர் சிலேடையாகப் பேசுவதில் வல்லவர்.

ஒரு சமயம் ஒரு சிறுமி தீபாவளித் தினத்தன்று புதுப்பாவாடை சட்டை அணிந்து கொண்டு தன் தந்தையாருடன் அவரிடம் ஆசீ பெறவந்திருந்தாள்.

ஆசீர்வாதம் வழங்கிய கி.வா.ஜ... 'என்னம்மா தீபாவளி நாளில் பழம் பாவாடை கட்டி வந்திருக்கிறாயே' என்றார்.

திடுக்குற்ற சிறுமியின் தந்தை 'இது பழம்பாவாடையில்லை நேற்றுத்தான் தைத்த புதுப்பாவாடை' என்றார்.

'இல்லை... இல்லை... நன்றாகப் பாருங்கள் இது பழம்பாவாடையே தான்' என்றார் கி.வா.ஜ.

அப்போது தான் அந்தப் பாவாடையில் பல்வேறு பழங்களின் உருவங்கள் பதிக்கப்பட்டிருப்பது அவர்களுக்கு புரிந்தது.

## ஓ... அப்படியா



பாகிஸ்தானின் தேசியக்கவியான மகாகவி இக்பால் சிறுவனாக இருந்த காலத்திலும் மிகுந்த புத்தி சாதுரியமுள்ளவராகத்தான் இருந்தார்.

ஒரு சமயம் அவர் பாடசாலைக்கு தாமதமாகச் சென்று வகுப்பறையில் நுழைந்த போது வகுப்பாசிரியர்- 'என்ன இக்பால் இப்படித் தாமதமாக வரலாமா?' என்றார்.

உடனே இக்பால்- 'என்ன செய்வது இக்பால் தாமதமாகத்தான் வரும்... விரைவாக வராது' என்றார்.

ஒரு கணம் திகைத்த ஆசிரியர் பின்னர் புன்முறுவலுடன் அவரது அறிவாற்றலை தட்டிக் கொடுத்து பாராட்டினார்.

ஆமாம் உருதுமொழியில் இக்பால் என்றால் புகழ் என்றுதான் அர்த்தம்.

புகழ் தாமதமாகத் தானே வரும்...!

## ஓ... அந்த அனுபவம்...!



'என்னப்பா இவ்வளவு தொகையான உடுப்புகள், பொருட்கள் எல்லாவற்றையும் எப்படி இந்த சின்ன 'சூட்கேஸினுள்' வைத்தாய்...'

'நான் எங்கை வைத்தது... எல்லாம் அண்ணன் தான் வைத்தவன்...'

'எப்படி அவனாலை முடிந்தது... எனக்கெண்டா நாலு சூட்கேஸ் தேவைப்பட்டிருக்கும்'

'அவர் பஸ் கொண்டக்டராக இருந்தவர்... அவருக்கு இதெல்லாம் சின்ன வேலை எப்படியும் அடைஞ்சு தள்ளிவிடுவார்...'

## நான் வேறு இடம் போகிறேன்



அபு நவாஸ் என்பவர் ஒரு ஆஸ்தான விதூஷகர் அறிஞர்- நகைச்சுவை அவருக்கு கை வந்த கலை.

அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தபோது அவருடைய நண்பர் ஒருவர் அவரைப் பார்க்கச் சென்றார். அவரும் நகைச்சுவையுணர்வு கொண்டவர்-

அபு நவாஸைப் பார்த்து- 'பயப்படாதீர்கள் நீங்கள் பிழைத்துக் கொள்வீர்கள்' என்றார்.

அபுநவாஸ் கையசைவாலேயே... 'இனிமேல் தப்ப மாட்டேன்... சாகப் போகிறேன்' எனக் குறிப்பிட்டார்.

'சரி அப்படியாயின் அங்கு இறந்த என் தந்தையைக் கண்டால் எனது அன்பைத் தெரிவித்து விடுங்கள்' என்றார் நண்பர்.

அவ்வளவுதான் முகத்தில் குறுநகை மின்ன அபுநவாஸ் சொன்னார்... 'நான் சொர்க்கத்திற்கல்லவா போகப் போகிறேன்'.

---

எல்லாம் வேடிக்கை தான் ! நமக்கு நடக்காமல் மற்றவர்களுக்கு நடக்கும் வரை -வில் ரோஜர்ஸ்

# பரீட்சைக்கு மாணவர்கள் எப்படி தயாராக வேண்டும்?



இன்றைய அறிவியல் யுகத்தில் எவராவது எந்த ஒரு செயலை யாவது குறித்த நேரத்திற்கு, குறிபிட்டபடி திட்டமிட்டுச் செய்யவேண்டும் அல்லது தயார்படுத்த வேண்டும் அல்லது ஒழுங்கு செய்யவேண்டும் என்ற எண்ணம் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானவர்களுக்கு இருப்பதில்லை. அப்படியோர் எண்ணம் தோன்றினாலும் அதன் மீது மனம் வைத்து அதன் படி நடக்கவும் விரும்புவதில்லை.

இன்றைக்கு ஒவ்வொருவரும் எந்த ஒரு சின்ன விடயமாக இருந்தாலும் அதனை ஆழமாக நோக்க வேண்டிய கட்டாயத் தேவையுள்ளது. ஏனென்றால், உலகின் வேகத்திற்கு ஓரளவாவது உங்களால் ஈடுகொடுக்கமுடியும். போர் என்றாலும் சரி, சமாதானம் என்றாலும் சரி, கற்றல் என்றாலும் சரி , கற்பித்தல் என்றாலும் சரி, திருமண வைபவத்திற்கு செல்வதென்றாலும் சரி, மைதானத்தில் ஓடுவதென்றாலும் சரி,உணவைச் சாப்பிடவென்றாலும் அவசியமும் உள்ளது.

பரீட்சைக்குத் தயார்படுத்துகின்ற ஆசிரியர்கள் என்றாலும் சரி, பெற்றோர்கள் என்றாலும் சரி, உறுதுணையாளர்கள் என்றாலும் சரி, பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் என்றாலும் சரி எப்போது,எப்படி, எவ்வாறு தயாராக வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும். அப்போது தான் உங்களால் குறிப்பிட்ட படி பரீட்சைக்கு முகங்கொடுக்கமுடியும்.

பரீட்சை எப்போது நடைபெறும் என்பது அனைவருக்கும் பரீட்சைக்கேற்றவாறு உங்களுக்குத் தேவையான பொருட்களை நீங்களே தான் பரீட்சைக்குச் செல்லும் முதல் நாளோ அல்லது அதற்கு முந்திய நாளோ சேமித்து வைத்துக் கொள்ளவேண்டும். அப்படியில்லாமல், பரீட்சை காலை 8.30 மணி என நேர அட்டவணை வைத்திருப்பீர்கள். ஆனால்,8.25 ற்கு பேனையைத் தேடுவீர்கள். அப்படித் தேடுகின்ற பலர் உங்களைப் போன்று இருக்கத்தான் செய்கின்றார்கள்.

ஒரு மாணவன் பரீட்சையில் வீழ்ந்து விடுகிறான் என்றாலும் சரி, மாணவர்களாலும் முடியாத காரியம். அத்துடன் பரீட்சைக்கு புறப்படும் அவசரத்தில் அடையாள அட்டை, ஏன் சுட்டிலக்கத்தை கூட மறந்தும் விடுவார்கள். இத்தனை யும் சரிபார்த்து பரீட்சைக்கு அதாவது பரீட்சை நடைபெறும் இடத்திற்கும் உங்களது அமைவிடத்துக்கும் ஏற்றவாறு நேரத்தைக்கணித்து, பரீட்சை தொடங்குவதற்கு அரைமணி முன்பாக பரீட்சை வளாகத்தை ஒவ்வொரு மாணவனும் சென்றடைய வைக்க வேண்டியது பெற்றோர்களது அண்மைய ஆகியிருக்கலாம். ஆனால், நீங்கள் பரீட்சை மண்டபத்தினுள் காலடி வைக்க...

அங்கு கடமை புரியும் பரீட்சை மேற்பார்வையாளர்கள் இப்படிக் கஸ்ரப்பட்டு வரும் மாணவர் களுடன் அன்பாக ஆறுதலாகக் கதைப்பார்களா என்றால், நிச்சயமாக இல்லை. சுடு நீர் குடித்து விட்டு நிற்பவர்கள் போல, என நான் கூற சில கடமையாளர்கள் என் மீது கோபப்படலாம். ‘ ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்பார்கள். அதற்காக அனைவரையும் ஒரே மாதிரியும் எடை போடமாட்டேன். மாணவர்கள் வியர்த்து விறுவிறுத்து வந்தமர ‘ உன்ர அடையாள அட்டை எங்கே’ ‘உன்ர சுட்டிலக்கத்திலதான் இருக்கிறியா’ ‘ஏன் இவ்வளவு நேரம்’ எனப் பல கேள்விகள் கேட்டு, பரீட்சைக்கு முகங்கொடுக்க வந்தவர்களின் மனதைக்குழப்பி, பரீட்சை மீது தீராவெறுப்பும் ஏற்படக் காரணமாய் அமைந்து விடுகிறார்கள். அவர்களுக்குத் தெரியாது ஒவ்வொரு மாணவனும்

> “ஒரு மாணவன் பரீட்சையில் வீழ்ந்து விடுகிறான் என்றாலும் சரி, வென்று விடுகிறான் என்றாலும் சரி இதற்கு பெற்றோர்களும் அடித்தளமாகவே இருக்கின்றார்கள். ஏனென்றால் அன்றுதான் முதன்முதலாகப் பரீட்சைக்கு முகங்கொடுக்கத் தயாராகும் மாணவராக உங்களது மகளோ அல்லது மகனோ இருக்கலாம். அதில் எந்தவிதப்பிரச்சினையும் இல்லை. ஆனால், அவர்களுக்கு பயமாயிக்கும் பதட்டமிருக்கும். இவற்றுக்கெல்லாம் பக்கபலமாக நின்று கல்விக் கடலை கொஞ்சமாவது பருக வேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு”.

சரி இப்படி எதை எடுத்தாலும் திட்டமிடல், அதற்கேற்றவாறு நகர்த்துதல், நீங்களும் நகர்தல் என்பன முக்கிய அம்சங்களாக இருக்கின்றன. அப்படி ஒவ்வொரு திட்டமிடலாளனும் திட்டமிட்டுச் செயற்பட்டதால் தான் உலகில் வெற்றியாளர்களாக மிளிந்துள் ளார்கள். வெற்றிகளையும் தமதாக்கிக்கொண்டுள்ளார்கள்.

மாணவர்களாகிய நீங்கள் வெற்றியாளர்களாக மாறவேண்டும் எனின், பல பரீட்சைக்களங்களை கடக்கவேண்டியிருக்கும். இவை சில வேளை பாலைவனமாகவும் இருக்கலாம்.பசுந்தரையாகவும் இருக்கலாம். இத்தனைக்கும் அனைத்துமே உங்களது கையில் தான் உண்டு. பரீட்சையில் எப்படி வெல்வது என்று தெரிந்து கொண்ட நீங்கள், பரீட்சையில் எப்படி விடையளிப்பது என்றும் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இவ்வளவும் தெரிந்தால் போதுமென எவருமே எல்லைக்கோட்டை வரைந்து அதனுள் முடங்கி விடக்கூடாது. பரீட்சையை வெல்லத்தெரிந்த நீங்கள், பரீட்சையில் விடையளிக் கத்தெரிந்த நீங்கள், பரீட்சைக்குச் செல்வது எப்படியென்பதை தெரிந்து வைத்திருக்கவேண்டிய தெரிந்திருக்கும். ஆனால், எவராவது அதற்கேற்றவாறு உங்களைத்தயார்படுத்துகின்றீர்களா...? உங்களது மனச்சாட்சியை ஒரு கேள்வி கேட்டுப்பாருங்கள். தகுந்த விடை கிடைக்கின்றதா..? ஏனெனில், மாணவர்கள் சிலரைப்பார்த்தால் “எப்ப மச்சான் ரெஸ்ற்”, “ வாறமாசமாம்” என அலட்சியமாக தனக்கும் பரீட்சைக்கும் எந்தத்தொடர்பும் இல்லாத மாதிரிப் பேசுவார்கள். எவ்வளவு அலட்சியம் உங்களைச் சூழ்கின்றதோ , அவ்வளவுக்கு நீங்கள் தாழ்வை நோக்கி நகர்த்தப்பட்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை மறவாதீர்கள்.

பரீட்சைக்கு ஆயத்தமாகும் ஒவ்வொரு மாணவனும், முதலாவதாக எந்தப்பரீட்சையை எதிர்கொள்ளப்போகிறீர்கள், அதற்கு எப்படியான தயார் படுத்தலை மேற்கொள்ள வேண்டும். என்பதைக் கவனிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக கணிதப் பரீட்சை என்று வைத்துக்கொண்டால் அன்று கணித உபகரணப் பெட்டியை கொண்டு செல்லாது, தமிழ்ப் பாடப் பரீட்சைக்கு அதனை கொண்டு செல்வதால் என்ன பயன் உண்டு..?

வென்று விடுகிறான் என்றாலும் சரி இதற்கு பெற்றோர்களும் அடித்தளமாகவே இருக்கின்றார்கள். ஏனென்றால் அன்றுதான் முதன்முதலாகப் பரீட்சைக்கு முகங்கொடுக்கத் தயாராகும் மாணவராக உங்களது மகளோ அல்லது மகனோ இருக்கலாம். அதில் எந்தவிதப்பிரச்சினையும் இல்லை. ஆனால், அவர்களுக்கு பயமாயிக்கும்; பதட்டமிருக்கும். இவற்றுக்கெல்லாம் பக்கபலமாக நின்று கல்விக் கடலை கொஞ்சமாவது பருக வேண்டிய கடமை பெற்றோருக்கு உண்டு.

நாளைய தினம் பரீட்சை யென்றால், அம்மாணவனுக்குக் காலையுணவு தயாரித்துக் கொடுப்பதிலிருந்து அவனைப் பரீட்சை மண்டபம் வரைகொண்டு சென்று விடவேண்டிய வரை கவனித்தே ஆகவேண்டும். பரீட்சைத்தினத்தன்று மாணவர்கள் பரபரப்பாகி கொண்டிருப்பார்கள். ஆனால், வீட்டில் சமையல் முடிந்திருக்காது. அப்படி சாப்பிடாது சென்று பரீட்சைக்கு இரண்டு மூன்று மணித்தியாலங்கள் தாக்குப் பிடிப்பதென்பது அனைத்து முக்கிய வேலைகளில் ஒன்றாகும்.

நாளைக்குத்தானே பரீட்சை, விடிந்ததும் எவ்வளவு நேரம் கிடக்கு, இதுக்குப் போய் இப்பவே ஏன் அவசரப்படுவான்’ எனச் சிந்திக்கும் தன்மை யிருந்தால், மாணவர்களே அதனை நடுவீதியில் போட்டுக் கொளுத்தி விடுங்கள். ஏனென்றால், எமது சூழலை எடுத்து நோக்கும் போது பெரும்பாலான மாணவர்கள் சைக்கிளை நம்பியே பாடசாலை சென்றாலும் சரி, பரீட்சைக்குச் சென்றாலும் சரி அதை நம்பித்தான். பரீட்சைக்குப் பதினைந்து நிமிடம் முன்பதாக புறப்படுகின்றீர்கள் என வைத்துக்கொண்டால், செல்லும் வழியில் உங்களது சைக்கிள் பழுதடைந்து விட்டால் என்ன செய்வீர்கள். அப்போது உங்களது துர் அதிஷ்டம் அண்மையாக சைக்கிள் திருத்தகம் கூட இருக்காது போய்விடின், அன்றைய பரீட்சையைப் பற்றி சற்று சிந்தியுங்கள். அப்போது உண்மை நிலை துலங்கும். அப்படியில்லையென்று அரக்கப் பறக்க ஓடி பரீட்சை மண்டபத்தை அணுகும் போது, உங்களுக்கு குறிப்பிட்டிருந்த நேரத்தைக் கடந்து ஒன்றிரண்டு நிமிடங்கள் தான் சிரமத்தின் மத்தியில் தான் பரீட்சைக்கு முகங்கொடுக்கிறார்கள் என்பது. அதற்காக ஒவ்வொரு மாணவனும் பரீட்சைக்குப் பிந்திச் செல்லலாம் எதையாவது காரணத்தை முன்வைக்கலாம் என இதற்கு மாத்திரம் திட்டமிடாதீர்கள் . அப்படியான சூழலில் பரீட்சை மேற்பார்வையாளர்கள் அப்படி நடப்பது ஒரு வகையில் சரியாகத்தான் தென்படுகிறது.

எந்த மாணவனும் பரீட்சைக்கு ஏற்றவாறு புறப்படுகின்றானோ அவனே மகிழ்ச்சியாகப் பரீட்சையை எதிர்கொள்கிறான். இலகுவாக மனஞ்சலிப்பின்றி மற்றவர்களுக்கு இடையூறின்றி பரீட்சையை வென்று விடுகின்றான். அவன் நாளைய பரீட்சையையும் வெல்வான். அதற்குப்பிறகு, வரும் எந்தப்பரீட்சையையும் வெல்வான், காரணம், முதற்பரீட்சைக்கு எப்படிச்செல்ல வேண்டும் எனத் திட்டமிடுகின்றானோ அதே போன்று இனி எதிர்கொள்ள போகும் எந்தப் பரீட்சையாயினும் திட்டமிட்டு எதிர்கொள்வான். அவனே பரீட்சையின் பல படிகளையும் இலகுவாகத் தாண்டிவிடுவான்: தாண்டியே தீருவான். ◻◻

**தேவபாலு**



## மதவடி மயிலர்

செய்தி:- தீயசக்திகளின் தூண்டுதல்களுக்கு மக்கள் பலியாகிவிடக் கூடாது... கலவரங்கள் குறித்து சனாதிபதி

மயிலர்:- உதுக்கு பெயர்தான் நடிப்பு எண்டு சொல்லுறது பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டி விடுகிற கதைதான் இது பாருங்கோ... தியசக்திகள் யார்...? தூண்டி விடுகிறது யார்...? இதெல்லாம் அம்மணிக்கு தெரியாத விடயமல்ல... எல்லாம் அரசியல்தான்... ஊர் குழம்பினா கூத்தாடிக்கு கொண்டாட்டம் எண்ட மாதிரி... நாடு குழம்பினா அரசியல்வாதிக்கு லாபம் பாருங்கோ... கலவரங்கள் ஏற்படுத்தி அதிலை அரசியல் குளிர் காயுறது அம்மணீன்ரை அப்பன் காலத்திலிருந்து தொடர்ந்து வரும் பாரம்பரியக்குணம்... மக்கள் பலியாகக் கூடாது எண்டுமெல்லே சொல்லியிருக்கிறாவாம்... இதுதான் புதிய மிலேனியத்தின் மிகப்பெரிய ‘பகிடி’ என்ன... நான் சொல்லுறதிலை ஏதும் பிழையே... சொல்லுங்கோ...

செய்தி:- ஈராக்கின் ஆகாயப் பரப்பில் அமெரிக்க யுத்த விமானங்கள் பயிற்சி...

மயிலர்:- உதைத்தான் சொல்லுறது சொறி தேய்க்கிற வேலையெண்டு. அமெரிக்க யுத்த விமானங்கள் ஈராக் வான் பரப்பிலை தான் பயிற்சி எடுக்க வேண்டுமோ... இல்லை கேட்கிறன் அமெரிக்காவின்ரை வான்பரப்பிலை அதுக்கு இடம் காணாதோ... அடுத்தவன்ரை காணிக்கே போய் சேட்டைவிட்டா, அவனும் உன்ரை காணிக்கை வந்து சேட்டை விடுவான் தானே... இதெல்லாம் ஒரு விதமான மனவிகாரத்தின் வெளிப்பாடு பாருங்கோ... யுத்தவெறி மந்த புத்தியைத்தான் வளர்க்கும்... புஷ்ஷின் நடவடிக்கைகள் அமெரிக்க மக்களின் தூக்கம் நிரந்தரமாகக் கெடத்தான் தான் வழிவகுக்கும் என மேற்குலக ஆய்வாளர் சொல்லுறது சரியாய்த்தான் இருக்கும் போலிருக்கிறது...

செய்தி:- சமாதானப் பேச்சுக்களில் புலிகளின் ஈடுபாட்டை பெருமளவு சிங்கள மக்கள் நம்புகின்றனர் ..

மயிலர்:- நம்பினார் கெடுவதில்லை... ஆனால் சமாதான பேச்சுக்களில் சிங்கள மக்களின் நம்பிக்கையை குழப்புற ஆட்கள் பற்றித்தான் அவை எச்சரிக்கையாக இருக்க வேணும் பாருங்கோ... உந்த சிகல உறுமய, ஜே.வி.பி, பொதுசன ஐக்கிய முன்னணி எண்டு ஒரு பட்டாளமே சிங்கள சமாதானம் விரும்பிகளின் எதிர்பார்ப்பை குழப்பத் தெண்டிக்கினம் பாருங்கோ... அந்தப் பட்டாளத்திற்கு நல்ல பாடத்தை சிங்கள மக்கள் தான் படிப்பிக்க வேணும் பாருங்கோ...

செய்தி:- 20 வருட காலப் போரில் வெற்றி பெற முடியாமல் போனமைக்கு அரசியல் வாதிகளே காரணம், ஊனமுற்ற படைவீரர் சங்கம் குற்றச்சாட்டு.

மயிலர்:- உதைக் கண்டுபிடித்துச் சொல்ல இருபது வருஷம் வேண்டிக்கிடக்குது பாருங்கோ... அதுசரி யுத்தத்தை தோல்வியை நோக்கித் தள்ளிய அரசியல்வாதிக்குத் தானே சனாதிபதி சந்திரிகா ‘ஜெனரல்’ பதவி குடுத்து பாராட்டினவ... அப்பிடியெண்டால் அவரைத் திறமையில்லாத ‘மொக்கன்’ எண்டே நீங்கள் சொல்லுறியள்... உடல் ஊனமற்ற நிலையில் உங்களுக்கு எல்லாம் விளங்குது ஆனால் இன்னமும் பல படையினருக்கும் அதிகாரிகளுக்கும் இது விளங்கேல்லையே பாருங்கோ... அதுக்கு இன்னொரு இருபது வருஷம் தேவை போல... ◆◆

சிறுகதை

# என்ன வழி?

-சிவேந்திரன்-

> "சாத்தியப்படாது எண்டு ஒண்டுமில்ல. சாத்தியப்படாது எண்டு இருந்தா இப்பவும் சமையல் கூடத்தில் தான் இருந்திருப்பம். எங்கட தலைவர் எங்களை எப்படி தலை நிமிரப் பண்ணி இருக்கிறார் என்பதை நீ பாக்கிறாய் தானே.''



"ஏன் பிருதுவி அழுகிறாய், தனிய கதைக்க வேணும் எண்டு நீதானே கூட்டி வந்தனீ?"
"ஜானு, உன்னட்ட என்னெண்டு சொல்லுறது. ஏழு வருட இடைவெளியில என்ர வாழ்க்கையே மாறிப்போச்சு. நீ எனக்குப் பக்கத்தில இருந்து ஆலோசனை சொல்லியிருந்தா இப்படி வந்திருக்காது."
"என்னெண்டு விளங்கச் சொல்லன்.
"வீட்டில கல்யாணம் செய்யச் சொல்லி ஒரே கரச்சலாக இருக்கு. நான் மாட்டன் எண்டுட்டன். என்னோட கதைக்க எண்டு மாமா ஜேர்மனியில இருந்து அடுத்த மாதம் வாறார். என்ன செய்யிற தெண்டு குழப்பமாய் இருக்கு."
"ஏன் செய்யமாட்டன் என்கிறாய்."
"எனக்கு விருப்பமில்லை."
"அதுதான் ஏனெண்டு கேட்கிறன்."
"என்னைப் பேசிப்போடாத நான் சொல்லுறதைப் பொறுமையாய் கேள். நீயும் வந்திட்டாய். நான் தனியத்தான் கம்பசுக்குப் போனான். ஒருத்தரை சந்திச்சன். விரும்புறார்."
"அட, இந்த குட்நியூசை சொல்ல ஏன் தயங்கிறாய் கொடுத்து வைச்சவன் ஆரெண்டு சொல்."
பிருதுவி தலையைக் குனிந்தபடி இருந்தாள். மௌனமே அவளது பதிலாய் இருந்தது.
''என்ன பிருதுவி பேசாமல் இருக்கிறாய். வெட்கமாய் இருக்கா? நான் பெடியனாய் பிறந்திருந்தா உன்னைச் செய்திருப்பன்."
"ஜானு, பகிடிய விட்டிட்டு நான் சொல்லுறதக் கேள். வீட்டுக்காரருக்கு விருப்பம் இல்ல. அதால தொடர்பு இல்லாம போட்டுது."
"பிருதுவி, நீதானே வாழப்போறனீ. உனக்குப் பிடிச்சா சரிதானே பொருத்தமெண்டால் வீட்டுக்காரர் ஏற்பினம் தானே."
"அவையளுக்குப் பிடிக்கேல்ல."
"அப்ப என்ன செய்யப்போறாய்."
"செய்யாமல் இருக்கப் போறன்."
"என்ன சொல்லுறாய் வீட்டுக்கு ஏன் பிடிக்கேல்ல."
"அவர் வடிவில்லையாம்."
"உடல் அழகா? உள் அழகா?"
"ஆருக்குத் தெரியும்."
"வீட்டில மட்டும் இல்ல. அன்ரி, மாமாவைளுக்கும் பிடிக்கேல."
"என்ன பிடிக்கேலையாம்."
''அவர் வீட்ட வந்தவர். அம்மாவுக்கு முன்னால காலுக்கு மேல் கால் போட்டுக்கொண்டு இருந்தவர்."
''அம்மாவின்ர காலுக்கு மேலையோ?"
"என்னடி கேக்கிறாய்."
"பின்ன என்ன? அவன் அவன்ர காலுக்கு மேலதானே போட்டவன். அம்மாவுக்கு என்ன பிரச்சினையாம்."
"அவையளால புரிஞ்சு கொள்ள முடியேல்ல."
"சரி. இப்ப உன்ர முடிவு என்ன."
"வீட்டுக்காரருக்கு விருப்பம் இல்ல. இப்படியே இருக்கப் போறன்."
''பிருதுவி. பிரச்சனைகளை எதிர்கொண்டு தீர்வை காண் பின்வாங்காதே. நீ ஒரு ஆசிரியர். உன்னை நம்பி இந்தத் தேசத்தின்ர எதிர்கால பிரஜைகளை தந்திருக்கு. அப்துல் கலாம் மாணவர்களை சந்திச்சுக் கொண்டு இருக்கிறார். உன்ர முடிவில உறுதியாய் இல்லை. இந்த நாட்டின் தூண்களை என்னெண்டு தான் உருவாக்கப் போறாய்."
"இந்த முடிவைத் தவிர எனக்கு வேற தீர்வு சரிப்பட்டு வராது."
அது சரி உன்ர வீட்டுக்காரருக்கு ஏன் அவனை பிடிக்கேல்ல. வடிவுதானே."
''அவர் அக்காவை கூட்டிக் கொண்டு எங்கட வீட்ட வந்து என்னைச் செய்து தரச்சொல்லிக் கேட்டவர். அப்ப அவருக்கு வேலையில்ல. ஆள் ஓ.எல் ரெஸ்ட் கூட எடுக்கேல்ல. அதோட எங்கட வாழ்க்கையில இருந்து விலகிப் போன கும்பல்களோடு நட்பு, வீட்டுக்காரருக்கு பிடிக்கேல்ல."
"நீ பீ.ஏ பட்டதாரி, அவன் ஓ.எல் கூட எடுக்கேல்ல. நீ யோசிக்கேலையோ?"
"படிப்பில என்னடி இருக்கு?"
"எந்த பொருளிலையும் அழகை விரும்பிறனீ. இதில மட்டும்...."
"அழகில என்னடி இருக்கு, அது அழிஞ்சு போயிடும்."
"விலகி நிற்கிற கும்பலுடன் நட்பு எண்டு சொல்லுறாய்."
''வீட்டுக்குப் பக்கத்தில காம் இருக்கிறதால சாதாரண நட்புத்தான் பிரச்சினையில்ல."
"உனக்கும் அவனுக்கும் எப்படி நட்பு வந்தது."
"நான் இருந்த வீட்டுக்கு முன் வீடு. சதாரண நட்புத்தான்."
"நட்பு என்னண்டடி காதலா?"
"நீ கேட்கிற மாதிரி காதல் அல்ல. அது ஒரு விபத்து."
"என்னடி விளங்கச் சொல்லன்."
"நான் பாசவுட்டாகி வீட்ட போக வெளிக்கிடேக்க ரீப்பில கோல் வந்திருச்சுது, எடுத்தன் அவன்ர பிரண்ட், நீங்கள் போனால் வினோதன் தமரோன் குடிக்கப் போறன் என்கிறான். ஏனெண்டு கேட்டன் அவன் உங்களை விரும்புறான். நீங்கள் போகாதை யுங்கோ என்றான். நான் பயந்து போயிட்டன். ஓமெண்டு சொல்லிப் போட்டன்."
"உன்னை எப்பவாவது விருப்பம் கேட்டவனா?"
"இல்லை, ஆனா அவனுக்கு அப்படி ஒரு பிளான் இருக்கெண்டு ஓரளவு நினைச்சனான்."
"உன்னை நேசிக்கிறதெண்டால் உன்னை ஏன் நேர கேட்கேல."
"தெரியாது"
"தெரியாதோ"
"தெரியாது"
"தெரியாது எண்டு சொல்லாத, உன்ர தகுதிக்கு அவன் இல்லை. அதனால கேட்கப் பயந்திருப்பான். துணிவிருந்தால் நேரில கேட்டிருப்பான். என்ன பேசாமல் இருக்கிறாய்."
''வீட்ட வந்து அம்மாவை கேளுங்கோ எண்டிட்டு நான் ஊருக்கு வந்திட்டன். அக்காவோட வீட்ட வந்து கேட்டவர். இரண்டு வருசத்துக்கு காலம் கூடாது நாங்கள் இப்ப செய்து கொடுக்க மாட்டம். பிறகு இது தொடர்பாக கதைப்பம். நீங்கள் போட்டு வாங்கோ எண்டு அம்மா அனுப்பிப் போட்டா. அன்ரி, மாமா, தங்கச்சி எண்டு எல்லோரும் போர்க் கொடி தூக்கிச்சினம். நான் ஒண்டும் சொல்லேல்ல. அவையள் போட்டினம்."
"நீ அவனை விரும்பிறீயோ?"
"தெரியாது"
"என்ன சொல்லுறாய், அவனைப் பற்றி முழுமையாய் தெரியுமோ?"
"இல்லை"
"அவன்ர இயல்புகள் எப்படி"
"அவர் கடைசிப்பிள்ளை, அதால பிடிவாதக்காரன், நினைச்சத செய்வார்,யோலிரைப்."
"அவன்ர எந்தக் குணம் உனக்கு பிடிச்சது."
"தெரியாது"
''உன்னில எந்த விடயம் அவனுக்கு பிடிச்சதாம்"
"கேட்கேல்ல"
"எத்தனை லெட்டர் குடுத்தனீ"
"ஒண்டும் குடுக்கேல்லே"
''உன்ர ஆண் நண்பர்களை அவனுக்கு அறிமுகப்படுத்தினீயா?"
"இல்லை"
"ஏன்"
"அவருக்கு பிடிக்காது"
"எது பிடிக்காது"
"வேற போய்ஸ்சோட கதைக்கிறது எங்கட பஜ் காரரோட கதைக்கிறது அவருக்கு பிடிக்காது."
"அதுதான் ஏன்?"
"அவருக்கு தாழ்வு மனப்பான்மை."
"ஏன்"
"தான் படிக்கேல்ல, அதோட அவங்கள விட தான் வடிவு குறைவெண்டு"
''தாழ்வுமனப்பான்மை பிடிச்சவனுக்கு ஒரு பட்டதாரிப் பொம்பிளை மட்டும் தேவையோ"
"......................."
"உனக்கு எப்படித் தெரியும்? ஆண் நண்பர்களைப் பிடிக்காதெண்டு"
''அவர் சொன்னார் தனக்கு பிடிக்காதெண்டு. அதோட ஒருநாள் வீட்ட ரீ.பி எடுத்தவர். நான் இல்லை, அப்ப கேட்டவராம் எங்க எத்தனை மணிக்கு ஆரோட போனனான் எண்டு. இப்படி பல சந்தர்ப்பங்கள் நடந்திருக்கு. அவருக்கு நான் வேற போய்ஸ்சோட கதைக்கிறது பிடிக்கேல்ல."
"இது பற்றி என்ன நினைக்கிறாய்?"
"நான் என்ன செய்ய? அவற்ற இயல்பா போட்டுது."
''இந்த இயல்பை மாற்ற நீ முயற்சிக்கேல்லையா?"
"இல்லை"
"ஏன்"
"அவர் கோபக்காரன்"
"பிருதுவி, நாங்கள் வானம்பாடி போல பாடித்திரிந்தனாங்கள். எங்களுக்கு எவரும் எப்போதும் தடைவிதிக்கேல, இவனின்ர இயல்புகள் உனக்கு சரிப்பட்டு வருமோ?"
"அதாண்டி விசராய் இருக்கு."
"அப்ப உன்ர முடிவு என்ன."
"அவர் லண்டனுக்குப் போட்டார். அவற்ர அண்ணா ரீ.பி நம்பர் தந்தவர். கோல் எடுத்தனான். எடுத்தவர், நானெண்டு தெரிஞ்சதும் கட் பண்ணிட்டார்."
''அப்ப என்ன செய்யப்போறாய்."
"இனி எடுக்க தன் மானம் விடுதில்ல. அபிராமி சொன்னவள் எடுக்கச் சொல்லி. அது தான் என்ன செய்யிறது."
"உன்ர இயல்புக்கு அவன் எந்த விதத்தில் பொருத்த மானவன்."
"தெரியாது"
"உனக்கு ஒருபோதும் அவன்ர இயல்புகள் ஒத்துப் போகப் போறதில்லை. அவனை நீ தொடர்பெடுக்காதே."
"நீ சொல்லுறத கேட்கிறன். ஆனா அவரைத் தவிர வேறு ஒருவரையும் செய்ய மாட்டன்."
"அந்த சந்தேக பிராணியோட வாழலாமெண்டு நினைக்காத. அவனை இனி தொடர்பு எடுக்காத. வீட்டுக்காரர் பேசுறவனைச் செய்."
"சனத்திற்கு எல்லாம் தெரியும். ஊர் சிரிக்கும்."
"சனமா வாழப் போகுது. நீதானே வாழப் போறாய். நீ உண்மையாய் அவனை விரும்பேல்லையே. ஒரு விபத்தை தடுக்கத் தானே ஓமெண்டனீ. தெளிவாய் இரு. அவன் உன்ர வயதை விட இளையவன். நீ ரீன் ஏஜ் பிள்ளை போல நடக்காத. நீ ஒரு ரீச்சர் நினைவில வைச்சுக் கொள்."
"ஒருவரும் விரும்பேல. அவரும் கோபக்காரன். என்னால வேற யாரையும் செய்ய முடியும் என்று தோன்றல. நான் தங்கம்மா அப்பாக் குட்டி அம்மாட்ட போகப் போறன்."
"நீ நல்லா இருக்கத்தான் நாங்கள் விரும்புறம். குரங்கின்ர கையில பூமாலையைக் குடுக்க விரும்பேல. உங்களைப் போல ஆட்களை அம்மா எடுக்க மாட்டா. ஆன்ம விழிப்போட இருக்கிறவங்களுக்குத் தான் அந்த வழி. அவன் வேற ஒரு பிள்ளையை செய்தா என்ன செய்வாய்."
"அவர் செய்தால் செய்யட்டும். நான் செய்ய மாட்டன்."
"அவன் வாழ நீ அழிஞ்சு போகப் போறியோ?"
"அதுதான் விதி"
"விசர்க்கதை கதைக்காத. அவன் சந்தோசமா இருக்க நீ அவன்ர நினைவில கிடந்து சா."
''நான் கல்யாணம் செய்ய மாட்டன்.. ஆன்மீக வழியில போகப் போறன்."
"அப்படிச் சொல்லாத, வீட்டுக்காரர ஒருக்கா நினைச்சுப் பார்."
"நீ நினைச்சுப் பாத்தனீயோ? நீயும் தேசமெண்டு வெளிக்கிட்டுட்டா. அதுகள் படுகிற துன்பத்தை நீ அறிவியோ? எப்பாலும் இருந்திட்டு கடிதம் போடுவாய். நீயும் அபிராமியிட்ட சொன்னியாமே, திருமணம் எண்ட விடயத்தில எனக்கு நோக்கமும் இல்லை, சிந்தனையும் இல்ல எண்டு. உனக்கு மட்டும் ஆன்மிக வழி சரி. எனக்கு சரிப்பட்டு வராதோ?"
"அவனைச் செய்தால் இல்லறம். இல்லாட்டி துறவறமோ? துறவில உன்னைப் போல ஆட்களுக்கு துளியும் இடமில்ல. விரும்பி செய்யவேணும். எதுவும் கிடைக்காவிட்டால் அதில போய் சரணடையிறதா இருக்கக் கூடாது."
"அப்ப என்ன செய்யிறது?"
''அவனை தொடர்பெடுக்காத. அவன்ர தொடர்புகள் தேவையில்ல. அம்மா பாக்கிறவனாய் பாத்து செய்."
"நான் யாரையும் செய்தால் அவர் பழிவாங்குவார்."
"அதுதானா அவன் உன்னில் வைச்சிருக்கிற அன்பு."
''அதைவிட ஊரார் சிரிக்க மாட்டினமோ? நான் வேற யாரையும் செய்தால் பிறகு அவரோட பிரச்சினை வராதோ."
"ஊருக்குச் சொல்லு கதைச்சனான் பிடிக்கேல்ல விட்டுட்டன் எண்டு"
"என்னடி சொல்லுறாய்?"
"நீயும் நானும் நானும் நீயும்" எண்ட பிரபஞ்சன்ர கதையை வாசி, அதைவாசிச்சா தெளிவு பெறுவாய்."
"அது எங்கட சமுதாயத்துக்கு சாத்தியப்படாது."
''சாத்தியப்படாது எண்டு ஒண்டுமில்ல. சாத்தியப்படாது எண்டு இருந்தா இப்பவும் சமையல் கூடத்தில் தான் இருந்திருப்பம். எங்கட தலைவர் எங்களை எப்படி தலை நிமிரப் பண்ணி இருக்கிறார் என்பதை நீ பாக்கிறாய் தானே."
"அது சரிதான்ரி, என்னால அவரை மறக்கேலாம இருக்கு."
"என்ன இரண்டு மாதக்காரனை உன்னால் மறக்கேலாம இருக்கோ? உன்ன பத்து மாதம் சுமந்து பெத்து வளர்த்து 28 வயது வரைக்கும் ஒரு குறையும் தெரியாம வளர்த்த பெற்றோரை விட அவன்ர அன்பு அதுவும் அற்ப சிந்தனை கொண்டவன் உனக்கு பெரிசாய்த் தெரியுதோ?"
''உண்மையைச் செல்லுறன். எனக்குச் சங்கடமான உணர்வாய் இருக்கு, மறக்கேலாம இருக்கு."
"உனக்கு உன்மேல அவனில் முதல்ல விருப்பம். அவன் வெருட்டி விரும்பின தெண்டு சொல்லாத. அவன்ர வெருட்டலுக்கு பயந்து போனியோ?"
''அப்படிச் சொல்லாத, உண்மையில செத்துப் போடுவான் எண்டு பயந்து போட்டன்."
"உளராத உன்னட்ட விருப்பம் கேட்க துணிவில்லாதவன் உன்னோட பழகாதவன் சாகப் போறன் எண்டு சொன்னதை நம்பியிருக்கிறாய். நீ எப்படி இந்த தேசத்தின் சிற்பிகளை உருவாக்கப் போகிறாய்? நீ அவனை கட்டிப் போட்டாய் எண்டு வை. இன்னொருவன் வந்து உன்னை விரும்புறன், இல்லாட்டி சாவன் எண்டா இவனை விட்டிட்டு அவனிட்ட போவியோ?"
"ஐயோ, என்னைக் குதறாத."
''பின்ன என்ன அலட்டுராய், காதலெண்டா என்னெண்டு புரியாம அதுன்ர புனிதத்த கெடுக்காத. உன்ர உறவுகளைவிட அவன் உனக்குப் பெரிசாப்போட்டான். நல்ல நண்பன் தான் வாழ்வின்ர துணைவன். புரிஞ்சுகொள். எனக்கு நேரம் போகுது. நீ என்னவிட. கெட்டிக்காரி. நல்ல முடிவை எடுத்துக்கொள். என்ர கடமைக்கு அறிவுரை கூறிவிட்டன். முடிவெடுக்கிறது உன்ர கையில தான், வீட்ட போய் யோசிச்சு நல்ல முடிவை எடுத்தாப் பிறகு கடிதம் போடு."

⌘⌘

# ஸ்யாம்



சத்தியபாலன்

விளக்கொன்று
கைக்கொண்டு
புறப்படும் பயணம்..

இருளோடிக்
கிடக்கும் பெருவெளியிடையில்
தொடர்கிற தேடல்....
எதைக்காணவேண்டி?
நாமறியோம்!
ஆனாலும்
தேடும் தாகம்
தணிவதேயில்லை
இதுவோ
இதுவோ எனக்கேட்குமறிவு
இதுவன்று இதுவன்று
எனச் சொல்லும்
அனுபவம்
பெருவிருட்சமொன்றின்
ஆணி வேர் காணப்
புறப்படுபவனுக்கு
பக்கவேர்க் கீற்றுக்களோடே
பாடம் முடிகிறது.
ஆதிகால முதல்
உன்னையும் என்னையும்
வைத்துக்கொண்டு
சிதம்பர ரகசியம்
காட்டுகிற பயணத்தைச்
சாட்டாக வைத்து
உலகு செய்கிறது
இயற்கை....
தேடல்
தொடர்கிறது
தனது லயம்
பிறழாமல்!



# நீ

எங்கெங்கும் எதிலும்
ஒரு வியாபகமாய்
தெரிகிறாய்- உனக்கே நீ...

உனது சுகம்
உனது தெரிவு
உனது விருப்பு
உனது வெறுப்பு
என....
உனபிறலைகள்
மட்டுமே தெரியுமுன்
கண்ணுக்கு!
அடுத்தவர்.........?
உனக்கும் பூச்சிகள்...
ஊதி விலக்கிடை
முடியாதெனில்
உலக்கைபொல் கொண்டேனும்
வழி விலக்கி
மீண்டும் கொள்வாய்
உனதான உன்
தரிசனம்!
போதனைகோடி முத்தம்
உனது சிவப்புமைப்பேனா
வாகாய்..
உன் சுகங்காக்க
வழிசமைத்து......!
உனது விழிகளின்
அலட்சிய வெய்யில்
வார்த்தைகளின்
நிர்த்தாட்சண்யம்
செய்கைகளின்
கொடூரம்
இவை புரியும் அழிப்புகள்
உனதறிவில் உறைக்கா...
உன் மணமேடையில்
முடிசூடி...
சிம்மாசன மேறி
மறந்தாலும் புன்னகையோடு
வீற்றிருக்கும்
உன்னையே
பசித்தபடி "நீ"

★★

## உருவகக் கதைகள்



# படைப்பு

எம்.ஏ.ரஹ்மான்

அவன் ஒரு தேர்ந்த கலைஞன். நயமான கற்பனை: நுட்பமான கைவண்ணம். கற்கள் அவனுடைய கலையின் நேர்த்தியினாற் சிலைகளென உயிர்பெறும்

கல்லினை உளி செதுக்கிக் 'கலீர்கலீர்' என்னும் நாதத்தினைப் பிழியும். அஃது ஓய்ந்தநேரத்தில், தன் படைப்பில் மெய்மறந்து நிற்பான். வித்துவச் செருக்கில் அவன் தன்னையே மறப்பான்.

இன்னொருவன் மறை ஓதிய வேதியன். நான்கு மறையுங் கற்றுத் தேர்ந்தவன். சற்றுச் சோம்பேறி. கோயிலுக்குச் சென்று பூஜையைக் கிரமமாகச் செய்து, எல்லாவற்றையும் ஆண்டவனின் தலையிலே சுமத்திவிட்டு, சயனச் சுகம் அநுபவிப்பதிற் பிரிதீ.

கலைஞனின் தொழிலை வேதியன் விரும்பவில்லை.

வேதியனின் நம்பிக்கையை கலைஞன் இகழ்ந்தான்.

கலைஞன் பல நாள்களாக அரும்பாடுபட்டு, சலவைக் கல்லில் அழகிய ரதிச் சிலையொன்றினைப் படைத்தான். மதியின் தன்மையையும்,இசையின் அமைதியையும் அதிற்குழைந்தான். கமல வதனம்: கயல்விழி, செவ்விளநீர்க் கொங்கைகள்: மூங்கில் தோள்கள்: மின்னல் இடை: இத்தனை மனோரதிய உருவங்களையும் அச்சிலையிலேயே தேக்கினான்.

அச்சிலையைப் பார்த்து பார்த்துப் பசியை மறந்தான். செருக்கு உச்சந்தலைவரை ஏறிற்று! தன்னுடைய கற்பனை வளம் நான்முகனிடம் கூடக் கிடையாது என்கின்ற பெருமிதம்.

வேதியனைத் தன்அறைக்கு இழுத்து வந்தான்.

''இந்தச் சிலையைப் பார்த்தாயா? ஆண்டவனுக்குப் போட்டி போட்டு நான் சிருஷ்டித் தொழில் செய்கின்றேன். இதனைப் படைக்குஞ் சக்தி நீ சேவிக்கும் இறைவனுக்கும் ஏற்படாது.''

''இஃது ஒரு துகள்: ஒரு நகல்! இறைவன் கடல்...''

''புரியாதன பேசிப் பாமரனை ஏமாற்றி வயிறு வளர்க்கும் பிராமணியே! நீங்கள் பிரதிஸ்டை செய்து வணங்கும் தெய்வங்கள் என் போன்ற கலைஞனின் படைப்புகளே! கடவுள்களையே படைக்கும் பிரமாக்கள் நாங்கள்.''

''இறைவனை உன் உளிக்குள்ளே சிறைப்பிடிக்கும் அகம்பாவமா? உன் கலைஞானம் முழுவதும், இறைபணியில் ஈடுபட்டிருக்கும் என் மதியூகத்தின் முன் தோற்றுப் போம்''

''கலைஞன் தெய்வம்''

''நம்பிக்கைதான் தெய்வம்''

''இல்லை கலைதான் தெய்வம்''

''அஃது உன் எண்ணம்''

''பரீட்சித்து விடுவோம்''

''உன் விருப்பம்''

''பந்தயம்?... நான் வென்றால், கடவுள் கலைஞனின் கற்பனையே என்கிற நீரிஸ்வரவாதத்தை நீ நிலைநாட்டுவாய்!''

''நான் வென்றால், உன் கலை இறைவனின் திருப்பணிக்கு அர்ப்பணிக்கப்படும்''

''சம்மதம்''

சாலையோரத்து அரச மரத்தின் கீழ் நிழல் சுகித்துக் கொண்டிருந்த வேதியன் அயர்ந்து தூங்கிவிட்டான்.

விசித்திரமான கனவுகள் மூட்டமிட்டன.

விழித்தபொழுது கனவின் எழுச்சியில் அங்கும் இங்கும் பார்த்தான். சற்றுத் தூரத்தில், காளியின் உருவ அமைப்பினைக் கொண்ட கல்லொன்றைக் கண்டான். அகமும் முகமும் அலர்ந்தது.

அதனை எடுத்துச் சென்று அயற்கிராமத்தின் குளக்கரையில் பிரதிஷ்டை செய்யத் தொடங்கினான்.

அவனுடைய செயலில் ஆச்சரியங்கொண்டு, ஒரு கூட்டம் கூடியது.

''என்ன விசேடம்?'' என்று அவர்களுள் ஒரு முதியவர் கேட்டார்.

''நான் அடுத்த கிராமத்தில் ஆலயப்பணி செய்து கொண்டிருந்த புரோகிதன். தேவி பிரசன்னமானாள்...'' பேசும்பொழுது பயபக்தியுடன் கண்களை மூடினான். அவன் முகத்தில் நம்பிக்கையின் சுடர். அவனுடைய சொற்கள் ஒவ்வொன்றும் பாமர மக்களுடைய உள்ளங்களை அளைந்தது.

''மகனே! அடுத்த கிராமத்திலுள்ள மக்கள் அஞ்ஞானத்திலே துன்புறு கிறார்கள். அவர்களுக்கு விமோசன காலம் நெருங்கிவிட்டது. உன்னையே என் கருவியாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்.....நீ சாலையோரத்தில் காணும் ஒரு கல்லில் எனது உருவத்தைப்பார்ப்பாய். அதனை உன்னுடன் எடுத்துச் சென்று குளக்கரையிலுள்ள பன்னிச்சை மரத்தின் மருங்கில், பிரதிஷ்டை செய்து மூன்று வேளைகளும் ஒழுங்காக பூஜை செய்!'' எனப் பணித்து மறைந்தாள். ''நான் தேவியின் ஊழியன். அம்பாளின் கட்டளையை நிறைவேற்றுகின்றேன்''- பக்தியைப் பிழிந்தெடுக்கும் குரலில் விழிகளைத் திறக்காமலே பேசினான்.

கிராமத்தில் புத்துயிர் பிறந்தது. செல்வப் பெருக்கு மக்களைக் குளிர்வித்தது. ஆராதனை மணி மக்களுடைய மனங்களில் நிறைவினை ஊட்டியது. தேவியின் அருளிலே பின்னமற்ற பக்தி மக்களுக்குத் தோன்றியது.

மழையும், வெயிலும் தேவியைத்துன்புறுத்தாதவண்ணம் ஒரு பெரிய கோயிலைக் கட்டத் தொடங்கினார்கள். பல தேசத்துச் சிற்பிகள் ஒன்று கூடி, இரவு பகலாக, பெரிய கோபுரங்களுடன் கூடிய அற்புத ஆலயம் ஒன்றினை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள்.

வேதியன், கலைஞனை இந்தக் கிராமத்துக்கு அழைத்து வந்தான்.

கலைஞன் ஆலயத்தின் பிரமாண்டத்தையும், சிற்ப வேலைப்பாடுகளையுங் கண்டு திகைத்துப் போனான். அவற்றினை நிருமாணிக்கும் சிற்பிகளைக்காணவேண்டும் என்னும் ஆசை அவனுள் எழுந்தது.

சிற்பிகள் தங்கியிருந்த அறைப்பக்கஞ் சென்றார்கள்.

ஒரு கிழச்சிற்பி பேசுவது இவர்களுடைய காதுகளிலே தெளிவாக விழுந்தது.

''நேற்று நான் அடுத்த கிராமத்துக்குச் சென்றிருந்தேன். அங்கு ஒரு ரதிச் சிலையைக் கண்டேன். தேர்ந்த கை நுணுக்கத்தின் படைப்பு. ஆனால், அதில் அருளில்லை... நம்பிக்கையில் வேரூன்றாத அதீதக் கற்பனை அதன் குறைபாடு. இருபது வருடங்களிடையில் மார்பக பாரத்தைத்தாங்க மாட்டாது அச்சிலை இடுப்புடன் உடைந்து போகலாம்.''

கலைஞனுக்கு அங்கு நிற்கப் பிடிக்கவில்லை ....

கர்வ பங்கம்!

இருவரும்மூலஸ்தானத்துக்குச் சென்றார்கள்.

தீபாலங்காரத்தின் மத்தியில் ஒரு 'கல்'

''இஃது அரசமரத்தடியிற் கிடந்த கருங்கல். சிலை செய்ய உதவாத கல்லென்று இதனை ஒரு தடவை நான் ஒதுக்கிவிட்டதாக ஞாபகம்''- இரகசியமாகப் புரோகிதனின் செவிகளில் மட்டும் விழும் வண்ணம் சொன்னான்.

''இது கல்லல்ல. நம்பிக்கையுடன் பார் தேவி பிரசன்னமாகியிருக்கிறாள்.''

பிரமாண்டமான கருங்கல்லில் கலைஞன், காளி சிலையொன்றினைச் செதுக்கிக் கொண்டிருக்கிறான். 'கலீர் கலீர்!!' என்னும்நாதம் கோயிற் பிரகாரம் முழுவதிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது....

●●



# வற்றாத ஆறு

அது வற்றாத ஆறு. குளுகுளுவென, சல சலத்தோடிக் கொண்டிருந்தது.

வானம் மழை பொழியும் போதெல்லாம், அந்த மழை வெள்ளம் திரண்டு காடு, மேடு, பள்ளம், திட்டி என உருண்டு பிரண்டேறி தாவிக் குதித்து பல்வேறு வழிகளூடாக ஓடிவந்து பல இடங்களில் இணைந்து வற்றாமல் ஓடும் ஆற்றுடன் சங்கமித்தோடிக் கொண்டிருந்தது.

இதனைக் கண்ணுற்ற, சிறு சிறு குட்டைகளில் தேங்கி நின்ற வெள்ளம், நையாண்டி செய்து அண்டச் சிரிப்பு சிரித்தது.

இதனை செவி மடுத்த ஆறு கேட்டது. சிறு வெள்ளமே ஏன் சிரிக்கிறாயென்று. அதற்கு; புத்தியில்லாத அந்தச், சிறுவெள்ளம் என்னைப்போன்று தானும் தன்பாடும் என்று தனித்து நிற்காமல், உன்னோடு கலந்தோடுகிறதே அதை நினைத்துத்தான் சிரிக்கிறேனென்று கூறியது குட்டையில் தேங்கிய சிறு வெள்ளம்.

''இன்னும் சொற்ப நாட்களில் அதாவது மாரிகாலம் முடிஞ்சதும் நீ நின்ற சுவடே தெரியாமல் மறைந்து போவாயே!'' என காட்டமாய் பதில் இறுக்கியது வற்றாத ஆறு.

''ஆனால்... என்னோடு சேர்ந்தோடும் அந்த வெள்ளத்திற்கு இன்றைக்கும் பெருமை. நாளைய வரலாறு வரலாறகவும் பெருமைதான், ஏனெனில் என்றைக்குமே நான் வற்றாத ஆறல்லவா.''

என்று தற்புகழோடு உரைத்தது வற்றாத ஆறு.

ஆவரங்கால் சுதன்




## சிறுவர் கதை

# திருடியவன் ஒப்புக்கொள்வானா?

ஓர் ஊரில் மணி என்பவன் இருந்தான். பொருள் ஈட்டுவதற்காக அவன் வெளியூர் சென்றான். அங்கே நீண்ட காலம் உழைத்து நிறையப்பணம் சேர்த்தான். அந்தப்பணத்துடன் தன் ஊருக்குள் நுழைந்தான்.

அப்பொழுது அங்கேவந்த திருடன் ஒருவன் அவனை மடக்கினான். அவன் வைத்திருந்த பணத்தைப் பறித்துக்கொண்டு ஊருக்குள் ஓடி மறைந்தான்.

பொருளை பறிகொடுத்த மணி அழுது புலம்பியபடி நீதிபதி மரியாதை ராமனிடம் வந்தான். "திருட்டுப் போன என் பணத்தை நீங்கள்தான் மீட்டுத்தரவேண்டும்'' என்று வேண்டினான்.

"திருடன் எப்படி இருந்தான்?" என்று கேட்டார் நீதிபதி.

"கன்னங்கரேலென்ற நிறம், பெரிய கொடுவாள் மீசை,முகத்தில் பெரிய வெட்டுக்காயம், மொட்டைத் தலை, இவற்றோடு ஆறடி உயரம் இருந்தான் அவன்" என்றான் மணி.

"வீரர்களே! இவன் சொன்ன அடையாளங்களுடன் யார் இருந்தாலும் இங்கே இழுத்து வாருங்கள்'' என்று கட்டளை யிட்டார் நீதிபதி.

வீரர்கள் திருடனைக் கண்டுபிடித்து நீதிமன்றத்திற்கு இழுத்து வந்தார்கள்.

அவனைப்பார்த்த மணி இவன் தான் என்னிடம் பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடினான்'' என்றான்.

நீதிபதி அவனைப் பார்த்து, "நீ இவனிடம் திருடினாயா நீதிபதி அவனைப் பார்த்துக் கேட்டார்."நீ இவனிடம் திருடினியா?உண்மையைச் சொல்'' என்று கேட்டார்.

"ஐயா! என் பெயர் கருப்பன். நான் நல்லவன். இதற்கு முன் இவனைப் பார்த்ததே இல்லை" என்று சாதித்தான் திருடன்.

மணியைப் பார்த்து நீதிபதி ''இவன் உன்னிடம் பணத்தைப் பறித்த போது பார்த்த சாட்சிகள் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான் அவன்.



கருப்பனைப் பார்த்து அவர், "சாட்சிகள் யாரும் இல்லை என்பதால் உன்னை நிரபராதி என்று விடுதலை செய்கிறேன்" என்றார்.

மகிழ்ச்சியுடன் வீட்டிற்குப் புறப்பட்டான் கருப்பன்.

இரண்டு வீரர்களை அழைத்த அவர், "அவன் அறியாமல் நீங்கள் பின் தொடர்ந்து செல்லுங்கள். வீட்டில் அவன் என்ன பேசுகிறான் என்பதை மறைந்திருந்து கேளுங்கள் . என்னிடம் வந்து சொல்லுங்கள்" என்றார்.

அதன்படியே வீரர்கள் கருப்பனைப் பின்தொடர்ந்து சென்றார்கள். தன் வீட்டிற்குள் நுழைந்தான் கருப்பன்.

" நீதிமன்றத்தில் என்ன நடந்தது? " என்று பரபரப்புடன் கேட்டாள் அவன் மனைவி.

"நான் திருடினேனா என்று கேட்டார். நானா ஒப்புக் கொள்வேன்? இல்லவே இல்லை என்று அடித்துச் சொன்னேன். என் பேச்சை உண்மை என்று நம்பி என்னை விடுதலை செய்து விட்டார்''என்று பெருமையுடன் சொன்னான் அவன்.

"வீரர்கள் உங்களை இழுத்துச் சென்றதும் நீங்கள் சிக்கிக் கொண்டீர்கள். என்ன தண்டனை கிடைக்கப் போகிறதோ என்று நடுங்கி விட்டேன்" என்றாள் அவள்.

"இனி நாம் அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை. சில நாட்கள் போகட்டும். அந்தப் பணத்தை எடுத்து நாம் மகிழ்ச்சியாகச் செலவு செய்யலாம்" என்றான் அவன்.

எல்லாவற்றையும் மறைந்திருந்து கேட்ட வீரர்கள் நீதிபதி மரியாதைராமனிடம் வந்தார்கள். நடந்ததை அப்படியே சொன்னார்கள்.

"மீண்டும் அவனை இங்கே அழைத்து வாருங்கள்'' என்று வீரர்களுக்குக் கட்டளையிட்டார் அவர்.

நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டான் அவன்.

தன் மனைவியிடம் அவன் பேசியதை அப்படியே சொன்னார். நீதிபதி. "நீ திருடியதை இப்பொழுதாவது ஒப்புக் கொள்" என்று மிரட்டினார்.

ஆனால் அவனோ, நீதிபதி அவர்களே! நான் திருடவே இல்லை" என்று சாதித்தான்.

' அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும். நன்கு அடித்தால் தவிர இவன் உண்மையை ஒப்புக் கொள்ளமாட்டான்' என்று நினைத்தார் அவர்.

''வீரர்களே! இவன் உண்மையை ஒப்புக் கொள்ளும் வரை இவனை அடித்துத் துன்புறுத்துங்கள்" என்று கட்டளை யிட்டார்.

வீர்கள் அவனை அடித்துத் துன்புறுத்துங்கள். வலி தாங்க முடியாத அவன், "நான்தான் திருடினேன். அந்தப் பணத்தை என் வீட்டுத் தோட்டத்தில் புதைத்து வைத்திருக்கிறேன்" என்று அலறினான்.

அவனை அழைத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்ற வீரர்கள் பணத்துடன் திரும்பினார்கள்.

அந்தப் பணத்தை மணியிடம் தந்தர் நீதிபதி. கருப்பனுக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்புக் கூறினார்.

-மேனுசன்-

# வாரம் ஒரு குறள் அறிவோம்



பசித்திருப்பவரைப் பார்த்திருத்தலே பாவம் என்பார்கள் நமது முன்னோர்கள். பார்த்திருத்தலே பாவமென்றால் அவர்களுக்கு எம்மால் முடிந்ததைக் கொடுக்காமல் இருப்பது எவ்வளவு பாவமான காரியமாகும். ஆகையினால் இல்லாதவர்களுக்கு, எம்மிடத்தில் இருப்பதில் சிறிதளவையேனும் கொடுக்க வேண்டும். நாம் தேடிய சொத்துக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான பாதுகாப்பிடம் எதுவென்றால்-இல்லாதவர்களுக்கு- உணவுக்காக ஏங்குபவர்களுக்கு- நாம் அள்ளிக் கொடுப்பதே என்று வள்ளுவப் பெருந்தகை தமது அழகு குறளில் நயம்படச் சொல்லியுள்ளார். நீங்களும் அந்தக் குறளைத்தெரிந்து கொள்ளவேண்டாமா?

"அற்றார்அழிபசி தீர்த்தல் அ்.தொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"

வங்கியில் வைப்புச் செய்வதைவிட ஏழையின் வயிற்றுப்பசிதீர உதவுதலே எமது நியாயமான உழைப்பைச் சேமிப்பதற்கான சிறந்த வழியாகும் என்பது குறளின் கருத்தாகும். நாமெல்லோரும் இதனைக் கடைப்பிடிப்போமா?

# ரதனும் சுதனும்



ரதன்:பேப்பர் கிழிக்கும் போது ஒலி எழுவது ஏன்?

சுதன்:பொதுவாக பேப்பர்கள் மரக்கூழிலிருந்து பெறப்பட்ட இழைகளாலோ அல்லது செயற்கை இழைகளாலோ உருவாக்கப்படுகின்றன.

பேப்பரை உருவாக்கும் போது இவ்விழைகள் நெருக்கப்பட்டு ஒன்றின் மேல் ஒன்று வைக்கப்பட்டு ஹைட்ரஜன் இணைப்பினால் பிணைக்கப்பட்டுள்ளது. பேப்பரை பிடித்துக் கிழிக்கும் போது இழைகளைப்பற்றிக் கொண்டிருக்கும் ஹைட்ரஜன் பிணைப்பு துண்டாடப்படுகிறது. இதனால் இழைகள் அதிர்வடைந்து ஒலியை எழுப்புகின்றன.

ஆனால் நனைந்த பேப்பரை கிழிக்கும் போது ஒலி எழும்பாது. ஏனெனில் நீர்மமூலக்கூறுகளை இழைகள் உட்கவர்ந்து பெருக்கமடைந்து ஒட்டிக்கொள்கிறது. மூலக்கூறுகள் அதிர்வடைவதில்லை. ஆகவே ஒலி எழும்புவதில்லை.

# காலைப் பொழுது

காகா எனக்கத்தியே கண்விழிக்கச் செய்தது
இங்கு கன்னங்கரு காகம்
ஒன்று காலைப் பொழுதினிலே கண்
விழித்து மெல்ல கீழ்த்திசையை
நோக்க அங்கு .குன்றிடையே
மறைந்து வரும் கதிரவன் கண்
விழித்துத்தன் கரங்களைத்தான்
அசைக்கின்றான் நதியொன்று நடைபயில
தென்றலது தழுவிச் செல்ல
புள்ளினங்கள் கான மிசைக்க
கதிரவன்தான் கையசைக்க
விடிந்ததுவே இங்கு ஒரு காலைப் பொழுது.

தெ. மோகனதாசன்
கிளி/புன்னநீராவி வித்தியாலயம்

# சிரிக்கலாம் ஆனால் சிந்திக்கவும் வேண்டும்?

சிரிப்பு என்பது மனிதனுக்கு கிடைத்த கொடை என்பர்கள். சிரிக்கும் விலங்கே மனிதனும் என்பார்கள். உண்மைதான்.

ஆனாலும் அதற்கு ஓர் வரையறை எனும் அளவுண்டு.

இன்றைய நவீன உலகஆராய்ச்சி முடிவுகளின் படி மனிதனைத் தாக்கும் பற்பலநோய்கள் அவன் சிரிப்பதால் குணமாகுவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஆனாலும் இன்றைய சூழலில் சிரிப்பு என்பது அர்த்தமற்ற ஓர் அனர்த்தமாகவேயுள்ளது.

இன்றைய கல்லூரிகள் மற்றும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் இந்த சிரிப்பானது ஓர் வித்தியாசமான பொருளாகவே உணரப்படுகின்றது. அதாவது "பம்பல்" என்ற பதம் மூலம் அவர்கள் அதை தவறாக புரிந்து கொண்டுள்ளனர்.

சிரிப்பு என்பது புதிதாக அல்லது ஏற்கனவே அறிமுகமானவர்கள் சந்திக்கும் போது பரிமாறிக்கொள்ளும் ஓர் பரிசுப் பொருளாகவே உள்ளது. ஆனால் அது இப்போ மருவி ஒருவரை இழித்து வேறுசிலர் சிரிப்பது வழமையாகிவிட்டது.

"சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே'' என்பதை இவர்கள் புரியவில்லையோ அல்லது வேறு அர்த்தம் கொண்டு விளங்கி விட்டார்களோ என்னவோ இப்போதைய மாணவர்களும் மற்றயை



வர்களும் தாமும் சிரிக்க பிறரிடம் சிரிப்பை உண்டாக்க எந்த துஸ்ர வார்த்தையினையும் பேச கூச்சமோ அல்லது அச்சமோ இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

இது அவர்களின் மனப்பக்குவம், சுய பண்புகள் என்பவற்றை அவர்களை அறியாது விழுங்கும் விலங்காகவேயுள்ளது. எனவேதான் சிரிப்பு என்பது சீரழிக்கும் சிரிப்பா அமையாமல் சிந்திக்கும் சிரிப்பாக மாறினால் அது மானுடத்தை மேம்படுத்தும்

த. ஜெனிநெல்சன்
மல்லாவி

## கண்டுபிடிப்புகள்

01)சுருக்கெழுத்து ஜெஷக்பிக்மன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

02)குமிழ் முனைப்பேனா அமெரிக்கரான ஜோன்ரவலெட் என்பவரால் 1888 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

03)கடிகாரம் A.L பிரிக்கெட் என்பரால் கண்டுபிடிக்கப்பட்டது.

04)சலவை இயந்திரம் ஹல்லே ஹம்பனி என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

S.விதுஷா
சிவிக்சென்ரர்,
வட்டக்கட்சி,

# சூரியன்

பென்னம் பெரிய வானிலே
சின்னஞ் சிறிய சூரியன்
வண்ண வண்ண நிறங்களில்
காட்சி தரும் சூரியன்
காலை தனில் வந்திடும்
காட்சி தனை தந்திடும்
மாலை எப்ப வரும்என்று
மறைந்து ஓடிச் சென்றிடும்

சுப்பிரமணியம் லயாசினி
தரம்- 10
கிளி/கிளிநொச்சி
மகாவித்தியாலயம்.




# உங்கள் விதி உங்கள் கைகளில்தான்

"எண்ணங்களை மாற்றுங்கள்.
உங்கள் வாழ்க்கையிலும்
மாற்றிக்கொண்டு விடுவீர்கள்"-நார்மன் வின்சன்ட் பீல் சாதாரணமனிதரிடமிருந்து வெற்றி பெற்ற மனிதரை எது சிறப்பித்துக்காட்டுகிறது என்று நீங்கள் எப்போதாவது எண்ணிப்பார்த்தது உண்டா? இதற்கான விடையை கண்டுபிடிப்பதற்கு ஆயிரக்கணக்கான ஆராய்ச்சிகளை பல ஆண்டுகளாக நிகழ்த்தி வந்திருக்கிறார்கள்.

சிலர் மட்டும் வாழ்க்கையின் எல்லாத்துறைகளிலும் தொடர்ந்து வெற்றி பெறுவது எப்படி? சிலருக்கு விரும்பிய எல்லாமே கிடைத்துவிடுகிறது. நண்பர்கள் அதிகம் இருக்கிறார்கள். நல்ல ஆரோக்கியத்தை அனுபவிக்கிறார்கள். சிறப்பாகச் செயல்படுகிறார்கள். அதிகமாக சம்பாதிக்கிறார்கள். நல்ல உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு சந்தோஷமா வாழ்கிறார்கள். இதற்கான காரணத்தை கண்டறிய பல எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் தங்களுடைய முழு வாழ்க்கையினையும் செலவிட்டு இருக்கிறார்கள்.

பாரம்பரியம், குழந்தைப் பருவ சூழ்நிலை, அதிஸ்டம் அல்லது இவற்றின் சேர்க்கை ஆகியவற்றின் விளைவாகத்தான் வாழ்க்கையில் வெற்றி கிட்டுகிறது என்பது பலரிடமும் காணப்படுகின்ற பொதுவான நம்பிக்கையாகும். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இதில் ஏதோ ஒன்றாகும்.

வெற்றி பெற்ற மனிதர்கள் பிறப்பாலும் விதிவசத்தாலும் வெற்றிபெற்றார்கள் என்பதற்குத் தொடர்பான விசயங்கள் என்ன என்று முதலில் பார்க்கலாம்.

வெற்றி பெற்ற மனிதர்கள் பல்வேறு நாடுகளிலிருந்தும் இனங்களிலிருந்தும் வருகிறார்கள். வெற்றி பெற்ற அனைவருமே தோற்றத்திலும் மனம் சம்பந்தப்பட்ட விசயத்திலும் ஒன்றுபோல் இருப்பதில்லை. ஒரே பெற்றோர்களுக்குப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில். ஒன்று பெறுகின்ற வெற்றியை இன்னொன்று பெறுவதில்லை. ஒரு நபரே கூட குறிப்பிட்ட காலகட்டத்தில் வெற்றிபெற முடியாதவராக இருந்து இன்னொரு காலகட்டத்தில் அவரே பெரும் வெற்றிகளைக் குவிப்பதையும் பார்க்க முடிகிறது. ஆகவே பாரம்பரிய குணநலன் வெற்றிக்கு ஆதாரம் என்பதை ஏற்க இயலாது.

வளர்க்கும் முறையினால் குழந்தைகள் பெரியவர்களாகும் போது வெற்றிகளைப் பெறுகிறார்கள் என்பதை வேண்டுமானால் ஓரளவுக்கு ஏற்கலாம். சில சூழ்நிலைகள் சில வகையான நடவடிக்கைகளுக்கு காரணமாகின்றன என்பதை ஆராய்ச்சிகள் நிரூபிக்கின்றன. சேரிச் சூழ்நிலைகளில் வளரும் குழந்தைகளிடையே பள்ளிப் படிப்பில் தர்க்க நியாயம் இருப்பது போலத் தோன்றும். பார்க்கப் போனால் பெற்றோர்களை நீங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. பிறந்த ஊரையும், இடத்தையும் நீங்கள் தேர்வு செய்யவில்லை. ஒரு குறிப்பிட்ட நாட்டில் நீங்கள் பிறந்ததும் உங்கள் விருப்பப்படி நேர்ந்த சம்பவம் அல்ல. நீங்கள் என்ன மொழி பேசுகிறீர்கள், உங்கள் அண்டை வீட்டுக்காரர்கள் யார், உடன்பிறப்புக்கள் எத்தனைபேர் என்பதெல்லாம் உங்கள் விருப்பப்படி நீங்கள் ஏற்படுத்திக் கொண்டதும் அல்ல. உங்கள் பிறப்பும், சூழ்நிலையும் உங்கள் விருப்பம் இல்லாமலே நிகழந்துவிட்ட தோல்விகள் அதிகம். குற்றங்களும் அதிகம் புரிகிறார்கள். நல்ல சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட குழந்தைகளிடையே இதெல்லாம் குறைவு. அதே சமயம் ஏழ்மைச் சூழ்நிலைகளில் வளர்ந்தவர்கள் தோல்விகளையும் தழுவி இருக்கிறார்கள். ஆகவே சூழ்நிலை மட்டும் வெற்றிக்குக் காரணமாகி விடுவதில்ல.

இவற்றை எல்லாம் விட ஒருவன் பெறுகின்ற வெற்றிக்கு அவனுடைய மனோபாவங்களே காரணம் என்று நிரூபிக்க நிறைய சான்றுகள் இருக்கின்றன. மனோபாவம் என்பது நீங்கள் செய்கின்ற தேர்வுகளின் விளைவாக உருவாகின்றது. உதாரணமாக சிலர் நாணயம், வாய்மை, முயற்சி, பிறரை மதித்தல் ஆகியவற்றில் நம்பிக்கை வைக்கின்ற மனோபாவம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். வேறு சிலர் அப்படி இருப்பதில்லை. நீங்கள் பழகுகின்றவர்கள். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் எண்ணங்கள், நீங்கள் முன்மாதிரியாகத் கொண்டவர்கள் ஆகியோரிடமிருந்து உங்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களால் உங்களுடைய மனோபாவம் உருவாகியது. உங்கள் சூழ்நிலையில் தோன்றிய உந்துதல்கள் நீங்கள் உருவாக்கிக் கொள்ளும் மனோபாவத்திற்கு பெரும்பாலும் காரணமாகிவிடுகிறது.

ஆக்கபூர்வ மனோபாவமும், நம்பிக்கையும் எந்த ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கும் சொந்தமானதுஅல்ல. எல்லா சூழ்நிலைகளிலும், குறைவாகவோ, அதிகமாகவோ அது இருக்கவே செய்கிறது. அந்த ஆக்கபூர்வ மனோபாவத்தை உங்கள் வாழ்க்கையின் அம்சமாக ஆக்கிக் கொள்ளுவதும், ஆக்காமல் இருப்பதும் நீங்கள் செய்கின்ற தேர்வைப் பொறுத்த விசயம். நிச்சயமாக வெற்றியாளர்கள் பிறப்பது இல்லை. உருவாக்கப்படுகிறார்கள் - அவர்களின் பெரிய சாதனைக்கு அவர்களின் ஆதார நம்பிக்கையே காரணம்.

வெற்றிபெற்ற சாதனையாளர்களின் சில வாசகங்கள் அவர்களின் மனோபாவ நிலையினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளதைக் கவனியுங்கள்.

- எது நடக்குமோ அதுதான் நடக்கும். அதற்காக சும்மா இருக்காமல் அது குறித்து என்ன செய்ய முடியுமோ அதை நான் செய்யப் போகிறேன்.
- என்னுடைய விதி என் கையில்தான் இருக்கிறது என நான் நம்புகின்றேன். ஆகவே அது எப்படி அமையும் என்பது என்னைப் பொறுத்த விசயமே.
- அதிஷ்டம் என்னுடைய வாழ்க்கையில் சிறிய பங்கு வகிக்கலாம். ஆனால் எது நிகழவேண்டும் என்று நான் எப்போது முடிவு செய்கிறேனோ அப்போது அது நிகழும் படியாகப்பார்த்துக் கொள்கின்றேன்.

இப்படிப்பட்ட மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கையின் மீது தங்களுக்கு ஆதிக்கம் இருப்பதாக நம்புகிறார்கள். தங்களுடைய நடத்தைக்கும் அதன் விளைவுகளுக்கும் தாங்களே முழுப்பொறிப்பினையும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

அதிர்ஷ்டம் ஒரு முக்கிய அம்சம் என்று சொல்லுவதை மறுக்க பழைய சீனக் கதை ஒன்றை உங்களுக்குச்சொல்லப்போகிறேன். வாழ்க்கை வெற்றிக்கும் அதிஷ்டத்திற்கும் சம்பந்தம் இல்லை என்பதை இந்தக் கதை தெளிவுபடுத்துகிறது.

வயதான ஒருவன் எல்லா வசதிகளுடனும் வாழ்ந்து வந்தான். அன்பு செலுத்த ஒரு மகன் மதிப்பு வாய்ந்த ஒரு குதிரை. இப்படி பல சௌகரியங்களும் அவனுக்கு இருந்தன. ஒருநாள் விலை மதிப்பான அவனுடைய குதிரை லயத்திலிருந்து ஓடி அருகில் இருந்த மலைப் பகுதிக்குள் சென்றுவிட்டது. தான் நேசித்த மதிப்புள்ள குதிரையினை நொடிப்பொழுதில் அவன் இழந்துவிட்டான்.

இதைக் கேள்விப்பட்ட நண்பர்கள் அனுதாபம் தெரிவிக்க அவனைத் தேடிக்கொண்டு வந்தார்கள். ''உன்னுடைய குதிரை காணாமல் போனது எவ்வளவு பெரிய துரதிஷ்டம்'' என்று சொன்னார்கள். கவலையுடன் அவனுக்கு ஆறுதல் சொல்ல முயன்றார்கள்.அவன் திருப்பிக் கேட்டான். "குதிரை காணாமல் போனது துரதிஷ்டம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

சில நாட்கள் கழித்து குதிரை திரும்பி வந்துவிட்டது. வீட்டுக்குப் போனால் நிறையத்தீனி கிடைக்கும்என்று அதற்குத் தெரியும். அது மட்டும் திரும்பி வரவில்லை. காட்டில் இருந்து பன்னிரெண்டு அழகான ஆண்குதிரைகளையும் தன்னுடன் அழைத்து வந்தது. இந்தச் செய்தியை அறிந்த நண்பர்கள் மகிழ்ச்சியுடன் கிழவனைத் தேடிவந்தார்கள். "பதின்மூன்று குதிரைகளா, எவ்வளவு பெரிய அதிஷ்டம்!" என்று சொன்னார்கள். கிழவன் திருப்பிக் கேட்டான்: "அது அதிஷ்டம் என்று உங்களுக்கு எப்படித்தெரியும்?"

மறுநாள் கிழவனுடைய மகன் காட்டில் இருந்துவந்த குரை ஒன்றின் மீதேறி சவாரி செய்தான். குதிரை கீழே தள்ள அவனுடைய கால் முறிந்து போயிற்று விபத்துப் பற்றி கேள்விப்பட்டவர்கள் கிழவனிடம் வந்து சொன்னார்கள்: "பாவம் உன் மகன் வாழ்நாள் பூராவும் நொண்டியாகிவிட்டான். எவ்வளவு பெரிய துரதிஷ்டம் !" புத்திசாலிக் கிழவன் திரும்பிக் கேட்டான்: "அது துரதிஷ்டம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?"

சில தினங்களுக்குள்ளாகவே படைத்தளபதி ஒருவன் அந்த ஊருக்கு வந்தான். அரசு உத்தரவின் பேரில், அந்த ஊரில் உள்ள உடல் வலிமையுள்ள இளைஞர்கள் அனைவரையும் படையில் சேர்த்துக்கொண்டு போருக்குச் சென்றான். நொண்டியான கிழவனின் மகனை மட்டும் சேர்த்துக்கொள்ளவில்லை. போருக்குச் சென்ற இளைஞர்கள் அனைவரும் போரில் கொல்லப்பட்டார்கள். அந்த ஊரில் மிஞ்சிய இளைஞன் கிழவனின் ஒரே மகன்தான்.

**கதை உணர்த்துகின்ற நீதி இதுதான் ஒரு நிகழ்ச்சி அதிர்ஷடமா, துரதிர்ஷடமா என்று உனக்குத் தெரியாது. ஆகவே அதை மட்டும் வைத்து என்ன நடக்கும் என்பதை நீ முடிவு செய்யாதே.**

□□

# வெளிநாட்டு வேலைவாய்ப்பும் துயர் சுமக்கும் பெண்களும்



**ஆதிலட்சுமி சிவகுமார்**

குடும்பத்தில் நிலவும் வறுமையையும். பொருதாளதாரச்சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் பெண்கள் பலர். இவர்கள் அரபு நாடுகளுக்கு வீட்டுப்பணிப் பெண்களாகச் செல்கிறார்கள். இவ்வாறு செல்கின்ற பெண்கள் எதிர்கொள்ளும் துன்ப துயரங்கள் வார்த்தைகளுக்கும் வரிவடிவங்களுக்கும் அப்பாற்பட்டவை.

தொடர்ச்சியான இடப்பெயர்வுகளாலும். இராணுவ ஆக்கிரமிப்புகளாலும் தொழில் வாய்ப்புக்கள் அருகிவிட. பொருளாதாரப் பிரச்சினை பெரும் பூதமாய் இவர்கள் முன் எழுகிறது. இந்நேரமும் இவர்களின் ஓரே தீர்வாக, தெரிவாக அரபுநாட்டு வேலை வாய்ப்பு அமைகிறது.

பெற்றோரைப்பிரிந்து. கட்டிய கணவன்மாரைப் பிரிந்து. பெற்றெடுத்து பாலூட்டிய பிள்ளைகளைப்பிரிந்து இரண்டு வருடத்தில் தேவையான பணத்தை உழைத்து விடலாம் என்கிற நம்பிக்கையில் இப் பெண்கள் விமானம் ஏறுகிறார்கள்.

ஆனால் நடப்பதோ? கனவுகளுக்கும். எதிர்பார்ப்புகளுக்கும் அப்பாற்பட்டு வருகின்றன. நம்பிக்கையோடு வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவரிடம் பணத்தைக் கொடுத்து ஏமாந்து போவது ஒரு புறம். இதையும் கடந்து வெளிநாடு சென்று விட்டால் மொழி புரியாத தனிமை. வேலைப்பளு. சிலவேளைகளில் வீட்டு எஜமானர்களின் பாலியல் துன்புறுத்தல்கள். பாலியல் வல்லுறவுகள் என்கின்ற துயரங்கள்....

''என் துன்பங்கள் என்னோடு போகட்டும். என் குடும்பம் வாழட்டும். என் பிள்ளைகள் முன்னேற்றமடையட்டும்'' என்பதாக தன் துன்பங்களைத் தனக்குள்ளேயே விழுங்கி தன்னையே உருக்கி உழைத்து பெறும் பணத்தை வீட்டுக்கு அனுப்புகிறார்கள் இப்பெண்கள்.

ஆனால் பணம் மட்டும் குடும்பம் உயர்வதற்குப் போதுமானதாகி விடுகின்றதா?.. தாயன்பின்றி. அரவணைப்பின்றி ஏக்கத்துடன். வாழும் பிள்ளைகள் பாடசாலையால் வந்தவுடன் அன்பாக ஒரு வார்த்தைகூறி ஆகாரம் தருவதற்கு அம்மாக்கள் இல்லாததால் துவண்டு போகின்றன இவர்களின் பிள்ளைகள்.

மனைவி மாதம் மாதம் திகதி தவறாமல் பணம் அனுப்பிவிடுகிறாள். ஆனால். அன்பாக ஆதரவாகத் தாங்கிக்கொள்ள மனைவி அருகில் இல்லையே என ஏங்கும் கணவன் வேதனையும் விரக்தியுமாய் காலம் கழிய .... நாளடைவில் அவன் மதுவுக்கு அடிமையாகின்றான். வேறு பெண் மீது நாட்டம் கொள்கிறான். அம்மாக்கள் அரபு நாட்டில் ஆயாக்களாக. அப்பாக்களோ மதுபோதையில் குழந்தைகள் யாரிடம் ஆறுதல்பெறமுடியும்.?

ஒருவாறு எல்லாற்றையும் தாங்கி வேலைவாய்ப்பு ஒப்பந்தகாலத்தை நகர்த்திவிட்டு. கணவன் . குழந்தைகளுடன் நிம்மதியாக இனி வாழவேண்டும் என்கின்ற ஆவலோடு திரும்பி வரும்பெண் என்னவாகிறாள்?...

கணவன் குடிபோதையில் குழந்தைகள்



அநாதரவாக வீதியில். உளவேதனையோடு வரும் பெண். தான் உருகி உழைத்த பணம்.... எதற்கும் பயன்படாமல்-எங்கும் சேமிக்கப் படாமல் விரயமாகி விட்டதை அறியும்போது படும்பாடு இருக்கிறதே.....

இந்தத் துன்ப துயரமும் தோய்ந்த வாழ்வும் எல்லோர்க்கும் இல்லாவிடினும். பலருக்கு இருக்கத்தான் செய்கிறது. குடும்பசீரழிவால் ஏற்படும் தன்பம் ஒருபுறமிருக்க....

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கிடைத்து-வீட்டுப் பணிப்பெண்களாக இருந்து திரும்பி வரும் பெண்ளை சமூகம் எப்படிப் பார்க்கிறது ஏளனம். எள்ளல். சந்தேகம். பொறாமை எனப் பல கண்கள் வைத்துத் துளைத்தெடுக்கிறது....

இத்தனையையும் தாங்கிக்கொள்ள முடியாத சில பெண்கள் மனமுடைந்து தற்கொலை செய்துவிடுகிறார்கள். இன்னும் சிலர் புத்திபேதலித்துப் போய்விடுகிறார்கள்.

அரபுநாட்டில் சொல்லமுடியாத வேதனைகளுக்கு மத்தியில் தாக்குப்பிடித்து நின்று மனைவி உழைத்து அனுப்பும் பணத்தில். உல்லாசமாகவும்.சொகுசாகவும் வாழ்ந்து பழக்கப்படும் கணவர்களில் சிலர்-மீண்டும் மனைவியை ஒருமுறை வெளிநாட்டுப் பணிப்பெண்ணாக அனுப்ப முயல்கின்றனர். மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல்- அவளின் இதயத்திலிருக்கும் காயங்களை ஆறவிடாமல்-அவளைப் பணம் உற்பத்தி செய்யும்இயந்திரமாகவே எண்ணி வருகின்றனர். இத்தகைய நிலைமைகள் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படுகின்றது.

**மகளிர் மாநாட்டில் கலந்து கொண்ட இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசங்களில் இருந்து வருகைதந்த பெண் பிரதிநிதிகளுடன் கதைத்த போது கிடைத்த தகவல்கள்.**

இரகசியத்தைக் காப்பாறுங்கள் அது உங்கள் அடிமை. அதைவெளியிடுங்கள் அது உங்கள் எஜமான். - யாரோ



# தமிழில் மருத்துவ அறிவியல் நூல்கள்

ஈழத்து மருத்துவ அறிவியல் நூல்களின் மரபானது ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் எழுந்த செகராசசேகரம், பரராசசேகரம் ஆகிய இரு மருத்துவ நூல்களுடன் ஆரம்பமானது எனச் சொல்லப்படுகின்றது.

இவ்விரு நூல்களும் வட மொழியில் உள்ள ஆயுள்வேத நூல்களைத் தழுவியே இயற்றப் பட்டனவாதலால் இவை வெளியிடப்பட்ட காலத்தில் ஈழத்தில் சித்த மருத்துவம் பரவியிருக்கவில்லை எனத் தெரியவருகின்றது. ஆனால் ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தை அடுத்துள்ள போர்த்துக்கேயர் காலத்தில் சித்த மருத்துவம் இருந்தமைக்கு சான்றுகள் உள்ளன.

ஈழத்தில் எழுந்த இவ்விரு மருத்துவ நூல்களும் பெரும்பாலும் விருத்தப்பாக்களால் பாடப்பட்டிருப்பினும் பரராசசேகரத்தில் சில இடங்களில் ஆசிரியப்பாவும், கலி வெண்பாவும் இடம் பெற்றிருக்கின்றது. அதே போன்று செகராசசேகரம் என்ற மருத்துவ நூலில் சில பாடல்கள் வெண்பாவில் அமைந்துள்ளன.

இந்நூல்களில் குறிப்பிட்ட நோய்களுக்கும், அவற்றிற்கான சிகிச்சை முறைகளையும் பார்க்கும் போது, ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் பெரும்பாலான நோய்களுக்கும் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

பரராசசேகரம் என்ற மருத்துவ நூலில் சுரத்தில் 64 வகைக்கும், சன்னியில் 40 வகைக்கும், பித்த ரோகத்தில் 40 வகைக்கும், சிலேற்பன ரோகத்தில் 96 வகைக்கும், மேகரோகத்தில் 40 வகைக்கும், உதரரோகத்தில் 108 வகைக்கும், மூலரோகத்தில் 13 வகைக்கும், மருந்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றை விட நீரிழிவு, பிளவை, கரப்பன், கிரந்தி, குட்டம், வலி, விக்கல், கசம், வாந்தி ஆகிய நோய்களுக்கும் வைத்தியக் குறிப்புக்கள் உள்ளன. 1

அதே போன்று செகராச சேகரத்தில் சுரத்தில் 15 வகைக்கும், சன்னியில் 13 வகைக்கும், வாதத்தில் 85 வகைக்கும், மூலத்தில் 21 வகைக்கும், மருத்துவ குறிப்புக்கள் உள்ளன. 2

ஆயுள்வேத வைத்திய நூல்களைத் தழுவிய பரராச சேகரமும் செகராசசேகரமும் விஷ கடிக்கு எதுவும் கூறாதமையால் அதற்கான மருத்துவத்தைக் கூறும் நூல் ஒன்றின் தேவை 18 ஆம் நூற்றாண்டில் உணரப்பட்டது.

அதனாலேயே ஒல்லாந்தர் காலப்பகுதியில் சித்தர் ஆரூடத்தை முதனூலாகக் கொண்டு அதில் கூறப்பட்ட

"ஊரும் ஊரகஞ் சிலந்தி
தீண்டினால் வந்துறு குணப்பண்பு
உரைத்து அதனை
ஓர்ந்து தேர்ந்து நேரு மருந்துகள்".

என்று கூறும் விஷ கடி வைத்திய நூலாக எழுந்ததே "அமுதாகரம்" இந் நூலை அ. வரதபாண்டியர் இயற்றியதாக கூறப்படுகின்றது. இதனை அடுத்தே ஈழத்தமிழரிடம் சித்த மருத்துவம் பரவத் தொடங்கியது எனலாம்.

எனவே அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மருத்துவம் தொடர்பான தகவல்களை வழங்கும் ஊடகமாக அந்நூல்களே இருந்ததாக கூறப்படுகின்றது.

பிற்காலத்தில் ஈழத்தில் தமிழில் மருத்துவத்துறை சார்ந்த நூல்களின் தோற்றமானது அமெரிக்க மிஷனரிமாரின் வருகையுடன் உத்வேகம் கொண்டது எனலாம். 19 ஆம் நூற்றாண்டில் இலங்கைக்கு வந்து சேர்ந்த மிஷனரிமாரில் தமிழில் மருத்துவ அறிவியல் துறைக்கும் பெரும் பங்காற்றியவர் தான் டாக்டர் சாமுவேல் / பிஸ்க் கிறீன்(Fisk Green) என்பவர் ஆவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள "மானிப்பாய் கிறின் ஞாபகார்த்த வைத்தியசாலை"(Manipay Green Memorial) இருக்கும் வரை இவரது பெயரையும். மானிப்பாயையும் தமிழர்கள் எவரும் மறந்து விடமாட்டார்கள்.

இவர் 1822 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் மசாசுசெற்ஸ் மாநிலத்தில் உள்ள கிறீன் உறில் (Green Hill) என்னும் ஊரில் பிறந்தவராக இருந்தபோதும், யாழ்ப்பாணத்தைத் தன்பிறப்பிடம் போலவே கருதி உழைத்தவர். அமெரிக்கப் பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையில் பட்டம் பெற்று, சமயத் தொண்டுகள் செய்வதற்காக இலங்கைக்கு வந்து சேர்ந்தவர். இவரே முதன்முதலில் தமிழில் மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து 1850 இல் இருந்து இலங்கையில் மருத்துவ கலாநிதிகளை உருவாக்கியவர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார்.

அதே வேளை தமிழ் மொழியிலான மருத்துவ அறிவியல் நூல்களைப் படைத்தளித்த முதலாவது அறிஞர் என்ற சிறப்பையும் டாக்டர் கிறீன் அவர்களே பெற்றுள்ளார். அத்துடன் அறிவியல் சார்ந்த நூல்களையும் தமிழில் வெளியிடுவதற்கு அடியெடுத்து வைத்த முதல் நாடு இலங்கை என்ற பெருமையையும் அடைவதற்கு டாக்டர் சாமுவேல் கிறீன் அவர்களின் உழைப்பே காரணம் எனலாம்.

1872 - 1883 காலப்பகுதியில் மேலைத் தேய மருத்துவ அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், பொருத்தமான கலைச் சொற்களைத் தமிழில் ஆக்கியும் அரும்பணியாற்றிய டாக்டர் கிறீன் அவர்களின் முயற்சியே, இன்று தமிழில் மருத்துவ அறிவியல் கல்விக்கான அடித்தளமாக இருந்தது எனலாம். "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் "இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்." 4

**வல்வை ந.அனந்தராஜ்**

என்று பாடிய பாரதியாரின் பாட்டின் இலக்கணமாக டாக்டர் சாமுவேல் கிறீன் திகழ்கின்றார் என்றால் அது மிகையாகாது.

ஆம் ... அந்த வகையில் டாக்டர் கிறீன் அவர்கள் ஆங்கில மொழியில் இருந்து, மருத்துவ நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து புதியதொரு சகாப்தத்தைஆரம்பித்து வைத்தார் எனலாம்.

டாக்டர் கிறீன் அவர்கள் வைத்திய கலாநிதி கொல்வின் காட்டர் எழுதிய (Anatomy Physiology And Hygiene) என்னும் ஆங்கில நூலைத் தமிழில் "உடற்கூற்று உடல் நலத்துறை என்னும் பெயரில் முதன்முதலில் மொழி பெயர்க்கத் தொடங்கினார்." அதனைத் தொடர்ந்து டாக்டர் கிறீன் பல நூல்களைத் தமிழிலில் மொழி பெயர்த்து தமிழ் மருத்துவ உலகுக்கு வழங்கியுள்ளார். அவர் மொழி பெயர்த்த அறிவியல் நூல்களுள் குறிப்பிடக் கூடியவையாக.

இரண வைத்தியம் (SURGERY) (1867)
மனுஷ அங்காதிபாதம் (HUMAN ANATOMY) 1872
கெமிஸ்தம் (CHEMISTRY)
மனுஷ சுகரணம் - 1883
வைத்தியாகரம் - 1872
மருத்துவச் சரக்குகளின் பெயர் - 1875.

போன்ற மருத்துவ அறிவியல் நூல்களைக் குறிப்பிடலாம்.

1855 ஆம் ஆண்டில் இவர் மருத்துவத் துறை தொடர்பான ஆங்கில, தமிழ்ச் சொற்களைத் திரட்டி "தமிழில் மருத்துவ விஞ்ஞான அகராதியையும் (A DICTIONARY OF TAMIL MEDICAL SCIENCE) தொகுத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறு மருத்துவ அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்த அதே வேளையில் தனது சொந்த ஆராய்ச்சியின் மூலமும், வைத்தியப்பணியில் பெற்ற அனுபவங்களைக் கொண்டும் காதுகள், தோல், கரங்கள் என்று மனித உடலில் அங்கங்கள் தொடர்பாகப் பல மருத்துவக் கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார்.

டாக்டர் கிறீன் அவர்களின் இம் முயற்சிகளே தமிழிலும் மருத்துவக் கல்வியைப் போதிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது எனலாம்.

1865 இல் டாக்டர் கிறீன் அவர்கள் முன்னெடுத்து வைத்த முயற்சியின் பயனாகவே மெல்ல மெல்ல தமிழில் அறிவியல் சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் இலங்கையில் வெளிவரத் தொடங்கின.

> மேலைத் தேய மருத்துவ அறிவியல் நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தும், பொருத்தமான கலைச் சொற்களைத் தமிழில் ஆக்கியும் அரும்பணியாற்றிய டாக்டர் கிறீன் அவர்களின் முயற்சியே, இன்று தமிழில் மருத்துவ அறிவியல் கல்விக்கான அடித்தளமாக இருந்தது எனலாம்.

தொடரும்...



# சிந்திக்க வைத்த சந்திப்பு

இப்போது மழைகாலம்.....
வெய்யில்காலம் என்றாலும் எங்கள் தெருக்களில் பயணம் செய்வதென்பது பெரிய விடயம். வெயிற் காலத் தெருப்புழுதிகளுக்கு இந்த வன்னியில் நிறைய வரலாறுகள் உண்டு. இந்த மழைகாலத்தில் புழுதிப்படலம் எதற்கு....?

"சந்நதி முருகா....

"சூரன்போர்" பார்க்கவென வரும் பக்தன் நான்! மழையை மட்டுமிப்பவரவழகைகாதே! இரவிரவாய்க் கொட்டிய மழைக்குள் தெருக்கள் எல்லாம் சுரியும் சேறுமாயப் போய்விட்டது. அயன்பண்ணிய வெள்ளை வேட்டியுடனும் நஷ்னல் சேட்டுடனும் பஸ்சுக்காக கால்நடையாகச் செல்கின்றேன். என்னிடம் குடையில்லை. பஸ்சில் ஏறும் வரைக்கும் மழையை நிறுத்திவிடு.....

மழை நாட்டுக்கு வேணும்
மரங்கள் தழைக்க வேணும்
நிலங்கள் செழிக்க வேணும்"
மன்றாடிச்செல்கின்றேன்....

என்னை விலத்திச்சென்ற வாகனம் ஒன்று எனதுவெள்ளை வேட்டியில் பள்ளத் தண்ணியை அடித்துவிட்டுச் சென்றது.

வரிவரியாய் வேட்டி எங்கும்காவிகள். நெஞ்சு வெடித்துச் சிதிறயது. அவனுக்கென்ன கவலை? சனங்கள் பற்றிய அக்கறை அவர்களுக் கிருந்தால்த் தானே.. சனங்கள் மேல் அக்கறை இருந்தால் சனப்புழக்கமுள்ள தெருக்களில் இப்படி வாகனத்தை ஓட்டுவார்களா? என்ன வேலையென்றாலும் ஒரு அவதானம் வேணும். அதுவும் சாரதிகள் என்றால் மிக மிக அவதானம் தேவை.

தெருவால் செல்பவர்கள் எல்லாம் என்னைப் பார்த்துச் சிரித்தார்கள். இங்கே சிரிப்புத் தானே மலிந்துவிட்டது. சிரிப்போம்... சிந்திக்கும் விடயங்கள் அனைத்துக்கும் சிரிப்போம்...

சிரித்துக்கொண்டே இருப்போம்.....

+++

மழை லேசாய் தூறிக் கொண்டிருக்கிறது...

கரையில் நெடுக வளர்ந்து கிளைகள் பரப்பி நிற்கிறது பெரிய மரம் ஒன்று. அந்த அடிபெருத்த மரத்துக்குப் பக்கத்தில் ஒதுங்குவதற்காகச் சென்றேன். மரத்துக்குப் பக்கத்தில் சிறிய கடை. கடையிலிருந்து சினிமாப்பாடல் ஒன்று சும்மா...சும்மா... என்றபடி அந்தக் கடையிலிருந்து ஒரு ஐயா வருகிறார். கையில் ஒரு பெட்டி . நெற்றியில் விபூதிக் கோடுகள். ஐம்பது சதமளவில் வெள்ளைப் பொட்டு.

கையில்கொண்டு வந்த அந்தக் கழிவுளை அந்த மரத்துக்குப் பக்கத்தில் கொட்டினார். அந்தக் கழிவுகளில் ஒரு செத்த எலியும் வீங்கியிருந்தது. அது சனங்கள் புழங்கும் தெரு. அவரின் செயலைக்கண்டதும் எனக்குக் கோபம் வந்தது. நான் அந்தக் கோபத்தை அவருக்குக் காட்டிக் கொடுக்கவில்லை.

"ஐயா... இவைகளை இதில் ஏன் கொட்டுறியள்? இந்தக் கழிவுகளை வெட்டித்தாட்டால் என்ன?" என்றேன். அவர் விழிகளை மூடாமல் என்னையே பார்த்தார்.

"இல்லை ஐயா, நான் உங்கள் நன்மைக்காகத்தான் சொல்கிறேன். இந்தக் கழிவுகளை நீங்கள் இதில் கொட்டுவதால் சூழல் மாசடைகிறது" ஐயா பார்வையை இன்னும் என்னிலிருந்து முறிக்கவில்லை.

"இப்ப மாரிகாலம். சனங்களுக்கு அடிக்கடி வருத்தங்கள் வருகிற சீசன். நீங்கள் கொட்டிய இந்தக் கழிவுகளிலிருந்து எத்தனை நுளம்புகள் பெருகப்போகின்றன...."

இந்த நுளம்புகளால்தானய்யா மலேரியா பரவுகிறது. தனிய மலேரியா மட்டுமல்ல உயிரைக் குடிக்கிற டெங்குக் காய்ச்சலும் இந்த நுளம்புகளால் தான் பரவுகின்றன. நெருப்புக்காய்ச்சல், யானைக்கால் வருத்தம் எல்லாம் இந்த நுளம்புகளால்தான்.

பார்த்தீர்களே .... நீங்கள் இதில் கொட்டியது வெறும் குப்பைகளை மட்டுமல்ல: பெரும் நோய்களை உற்பத்திகளாக்கிகளையும் தான் என்றேன்" நான்.

என்னையே பார்த்த அவரின் முகத்தில் கோப நுளம்புகள் எதனையும் காணவில்லை.

"இல்லை பெரியவர்--- நான் இதில் இவ்வளவு நாட்களும் குப்பைகளை கொட்ட எவளவோ படிச்ச மனிதர் இதால் போகிறவர்கள். எவரும் இதைப் பற்றிக் கதைக்கவில்லை. நீங்கள் இவளவும் சொன்னாப் பின்புதான் என்தவறு புரிந்தது." என்றார் அந்தக் கடைக்காரர்.

"சொன்னாப் பிறகுதான்..."

ஓ! எவளவு விடயங்கள் நாங்கள் சொல்ல வேண்டியிருக்கின்றது. சிலர் தெரிந்தும் சில விடயங்களைச் சொல்கிறார்கள். "சூடடிக்கும் காலம்" போல் ஓர் கண்ணுக்குத்தெரியாத அரங்கு இங்கே நிறையத் தேவை.

அதோ... வாகனம் வருகுது- பள்ளிக் கூடப் பிள்ளைகள் போகுதுகள் மறிச்சுச் சொல்லிப் பார்ப்பம்.

**எரிசரன்**

சூழ்நிலைகளை வைத்தே சிந்தனையும் செயலும் இயங்குகின்றன. -டால்ஸ்டாய்

# ஒரு இளம் கவிஞனுக்கு சில ஆலோசனைகள்

உன் கவிதைகள் நன்றாக இருக்கின்றனவா என்று கேட்டெழுதியிருக்கிறாய் என்னிடம் கேட்கிறாய். வேறு பலரிடமும் கேட்டிருப்பாய். பத்திரிகைகளுக்கும் அவற்றினை அனுப்பியிருப்பாய் வேறு கவிதைகளோடு ஒப்பிட்டுப் பார்த்திருப்பாய். சில பத்திரிகையாசிரிடமிருந்து அவை திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாக நீ சஞ்சலமடைந்திருப்பாய். இப்போது (நீ என்னிடம் கேட்டிருப்பதால் சொல்லுகிறேன்) எல்லா அபிப்பிராயங்களையும் தூரத் தள்ளிவிடு என்றே நான் கேட்டுக் கொள்கிறேன். வெளியில் இருந்து வரும் அபிப்பிராயங்களை நீ எதிர்பார்த்திருக்கிறாய். உண்மையில் நீ செய்ய வேண்டியது அதுவல்ல. யாரும் ஆலோசனை தரவோ உதவி செய்யவோ முடியாது. ஒரேஒரு வழிதான் இருக்கிறது. உன்னுள் செல். எது உன்னை எழுதத் தூண்டுகிறது என்று ஆராய்ந்து பார். அது உன் இதயத்தின் ஆழத்தில் வேர்பாய்ச்சி பரவியிருக்கிறதா என்று அறிய முயற்சி செய். எழுத நீ அனுமதிக்கப்படவில்லை என்றால் அதைவிட இறந்துவிடுவதே மேல் என்று உணர்வாயா என்று உன்னையே கேட்டுக்கொள். எல்லாவற்றிக்கும் மேலாக இரவில் அமைதியான கணத்தில் உன்னையே கேட்டுக்கொள். "நான் கட்டாயம் எழுதத்தான் வேண்டுமா?" உனக்குள்ளேயே ஆழமான பதிலைத் தேடு. பதில் சாதகமானதெனில், அந்த நேர்மையான கேள்விக்கே "நான் கட்டாயம் எழுதத்தான் வேண்டும்" என்ற உறுதியான பதில் உனக்கு கிடைக்குமென்றால் அதற்கேற்ற வகையில் உன் வாழ்க்கையை அமைத்துக் கொள். உன் வாழ்வின் சாதாரண கணம் கூட இந்த வேட்கையின் அறிகுறியாகவும் அதன் சாட்சியாகவும் அமையவேண்டும். பின் இயற்கையோடு நெருங்கி நில். பின் முதல் மனிதனாக உன்னை நினைத்துக் கொண்டு நீ காண்பதையும் அனுபவித்தையும் நேசிப்பதையும் இழப்பதையும் சொல்ல முயற்சி செய். காதல் கவிதைகள் எழுதவேண்டாம். வழக்கத்தில் உள்ள அதிக புழக்கத்தில் உள்ள வடிவங்களைத் தவிர்த்துவிடு. இது உண்மையில் மிகக் கடினமானது. ஏனெனில் சிறந்த அற்புதமான பாரம்பரியங்களில் உன் மனது ஊறிப் போயிருக்கும் போது அவற்றை விலக்கி உனக்கு சுயமானதாக சிலவற்றை முன்வைப் பதற்கு பெரிய முதிர்ந்த சக்தி வேண்டியிருக்கின்றது. ஆக இத்தகைய பொதுவான கருப்பொருட்களை தவிர்த்து உன் அன் றாட வாழ்க்கை உனக்கு அளிப்பவற்றைத் தேடு. உன் சோகங்களை விருப்பங்களை தோன்றும் எண்ணங்களை அழகைப்பற்றிய உன் நம்பிக்கையை எல்லாவற்றையும் விவரி. இவையனைத்தையும் அன்பான அமைதியாக பணிவான அக்கறையோடு விவரி. உன்னை வெளிப்படுத்த உன்னை சுற்றியுள்ள பொருட்களையும்உன் கனவிலிருந்து பெற்ற சித்திரங்களையும் உன் ஞாபகங்கள் அளித்த விஷயங்களையும் பயன்படுத்திக் கொள். உன்அன்றாட வாழ்க்கை ஏழ்மையுற்றிருப்பதாக உனக்குத் தோன்றுமெனில் அதைக் குறை கூறாதே. உன்னைக் குறை கூறிக்கொள். அதன் செழுமைகளை உள்வாங்கும் அளவுக்கு நீ கவிஞனாகவில்லை என்று சொல்லிக்கொள். ஏனெனில் ஒரு படைப்பாளிக்கு விசய தரித்திரம் என்பதோ அக்கறைகாட்ட வேண்டாதவை என்பதோ ஒன்றுமில்லை. மேலும் வெளியுலகத்து ஓசைகள் உன்னை வந்தடையாதபடி சூழப்பட்ட சுவர்கள் நடுவில் நீ சிறையிடப் பட்டால் உன் குழந்தைப் பருவம் அந்த அருமை யான உயர்ந்த உலகம் அந்த ஞாபகக் களஞ்சியம் இல்லாமலா போய்விடும். அங்கே உன் கவனத்தைச் செலுத்து கடந்து போன அக்காலத்தில் அழிந்து போன உணர்வுகளைத் தட்டியெழுப்ப முயற்சி செய். உன் ஆளுமை உறுதிபெற்று வளரும். உன் தனிமை விகசித்து பிற மனிதர்களின் ஓசைகள் உன்னை வந்தடையாத ஒரு மங்கலான இருப் பிடமாகும். இத்தகைய உனக்குள்ளே செல்லுதல் மற்றும் உன் உலகத்திலேயே அமிழ்தல் இவற்றிலிருந்து கவிதைகள் கிளம்புமானால் அவை சிறந்தவையா என யாரிடமும் கேட்கத் தோன்றாது. உன் கவிதைகளால் பத்திரிகைகளை களிப்பூட்டவும் விரும்பமாட்டாய். ஏனெனில் அவற்றில் உன் இயல்பான பற்றுதலை உன் வாழ்வின் ஒரு பாகத்தை அதன் குரலை இனம் காண முடியும். ஒரு படைப்பு தேவை கருதி எழுமானால் அது நிச்சயம் சிறந்ததாக இருக்கும். இத் தோற்றத்தின் இயல்பிலேயே இதை மதிப்பிட வேண்டும். வேறு எவ்வகையிலுமில்லை. எனவே நான் உனக்கு சொல்லவிரும்புவது இதுதான்.உனக்குள்ளே செல். உன் வாழ்வு முளைவிடும் ஆழங்களை சோதி. நீ கட்டாயம் எழுதத்தான் வேண்டுமா? என்ற கேள்விக்கு பதில் இதன் ஊற்றில் தான் இருக்கிறது. அதனை விளக்க முற்படாமல் அப்படியே ஏற்றுக்கொள். ஒரு வேளை நீ கலைஞன் என்று அழைக்கப்பட வேண்டியவன் என அது கூறலாம்.பின்உனது முடிவை எற்றுக் கொள். அதன் உன்னதத் தையும், சுமைய்யயும் தாங்கிக்கொள். வெளியிலிருந்து என்ன கைமாறு அதற்குக் கிடைக்கிறது என்று எதிர்பார்க்காதே. ஏனெனில் ஒரு படைப்பாளிக்கு அவனேஒரு உலகம். அவன் எல்லாவற்றையும் தன்னுள்ளும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கும் இயற்கையிலும் கண்டு கொள்கிறான்.

(நன்றி காலச் சுவடு) ✦



எனவே நான் உனக்கு சொல்லவிரும்புவது இதுதான். உனக்குள்ளே செல். உன் வாழ்வு முளைவிடும் ஆழங்களை சோதி. நீ கட்டாயம் எழுதத்தான் வேண்டுமா? என்ற கேள்விக்கு பதில் இதன் ஊற்றில் தான் இருக்கிறது. அதனை விளக்க முற்படாமல் அப்படியே ஏற்றுக்கொள். ஒருவேளை நீ கலைஞன் என்று அழைக்கப்பட வேண்டியவன் என அது கூறலாம்.

## ஒரு படைப்பாளிக்கு அவனே ஒரு உலகம்


## எமது மக்களுக்கு

## தமிழீழ வைப்பகம் வழங்கும்
## துரித நகையடைவுக் கடன் சேவை

☐ குறைந்த வட்டி வீதம்

→மாதாந்தம் 2.17%வீத வட்டி மட்டுமே
தற்போது அறவிடப்படுகின்றது.
[ஆண்டுக்கு வட்டியாக 26 நூற்றுக்கூறு மட்டும்]

☐ கூடிய கடன் தொகை

→தற்போது கடன் தொகையாக ஒரு பவுணுக்கு
உரூபா 5550/= வரை வழங்கப்படுகின்றது.

☐ நீடித்த சேவை

→தமிழீழ வைப்பகத்தின் சகல கிளைகளிலும்
மாலை 3.00 மணிவரை நகையடைவுக் கடன் சேவையை
வழங்குகிறோம்.

உங்கள்
நம்பிக்கையின்
சின்னம்

- உங்களின் நிறைவே எங்களின் மகிழ்ச்சி.
- வாருங்கள். உங்களின் வழமான வாழ்வுக்கு வழிகாட்டுகிறோம்.

**தமிழீழ வைப்பகம்**

**தமிழீழ வைப்பகம்**
**தமிழரின் காப்பகம்**

(சி-7460)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ.இல:- 11/2002 சிவகுமார். சகுந்தலாதேவி
தன்மை :- மணநீக்கம் இல: 345, 5ம் யூனிற், இராமநாதபுரம். (வழக்காளி)

-எதிர்-

செல்லையா சிவகுமார்
மே/பா. தே.குலதேவி, இல: 348, 5ம் யூனிற், இராமநாதபுரம். (எதிராளி)

இடைக்காலத் தீர்வை

இந்த 2002ம் ஆண்டு 9ம் மாதம் 16ம் திகதி, இவ்வழக்கின் வழக்காளியும், அவரது சட்டத்தரணியும் சமுகமாயிருக்க இம்மன்றில் நீதியாளர் திரு.செ.மயூரன் அவர்கள் முன்னிலையில், மன்றின் திறந்த அமர்வில் வழங்கப்பட்ட தொடர் சட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்த ஒருமுகத் தீர்ப்பின்படி, எதிராளியானவர் 18-07-2002 அன்று ஈழநாதம் மக்கள் தினசரி இதழில், பகிரங்கமாகப் பிரசுரிக்கப்பட்ட பகிரங்க அறிவித்தலுக்கமைய "நான்" நேரடியாகவோ, அல்லது தனது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ, மன்றில் தோன்றி எவ்விதமான சட்ட நடவடிக்கைகளையும் உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளாமையினால், வழக்காளியின் கோரிக்கையை மன்று, ஒரு முக விளக்கத்தின் அடிப்படையில் ஏற்று, 1997-07-14 அன்று நடைபெற்ற திருமணப்பதிவையும், 05-05-2000 அன்றைய நாள் ஊரறிய நடைபெற்ற திருமண உறவையும் இரத்துச் செய்து வழக்காளியும், எதிராளியும் திருமணத்திற்கு முன்பிருந்த சட்டநிலையை அடைகின்றார்கள் என வெளிப்படுத்தி இவ் இடைக்காலத் தீர்வை பதியப்படுகின்றது.

இந்த 2002ம் ஆண்டு, ஐப்பசி மாதம், --நாள்.

வரைபு:- திரு.தா.இ.குலசங்கர்
வழக்காளியின் சட்டத்தரணி,
இரத்தினபுரம், கிளிநொச்சி. (சி.7458)

திரு.த. செந்தூரன்
மாவட்ட நீதியாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வழ.இல:- 11/2002 சிவகுமார். சகுந்தலாதேவி
தன்மை :- மணநீக்கம் இல: 345, 5ம் யூனிற், இராமநாதபுரம். (வழக்காளி)

-எதிர்-

செல்லையா சிவகுமார்
மே/பா. தே.குலதேவி, இல: 348, 5ம் யூனிற், இராமநாதபுரம். (எதிராளி)

பகிரங்க அறிவித்தல்
மேற்படி எதிராளிக்கு!

இவ்வழக்கில் வழக்காளியானவர், எதிராளியான உமக்கு எதிராக, தனக்கும், உமக்கும் இடையிலான திருமண உறவை இரத்துச் செய்யுமாறு கோரி மணநீக்க வழக்கை 11-06-2002 அன்று மன்றில் தோன்றி தாக்கல் செய்த போது, மன்று இவ்வழக்குத் தொடர்பான வழக்கறிக்கைப் பிரதியை உமக்கான அழைப்பாணையுடன் சேர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து 08-07-2002 அன்று இவ்வழக்கைக் கூப்பிட்டபோது, எதிராளியான நீர் மேற்படி முகவரியில் இல்லை என்று முறைநிறைவேற்றுநரின் அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டதால், மன்று, நீர் இவ்வழக்கில் தோன்றும் வகையில் பகிரங்க அறிவித்தல் பிறப்பித்து, அப்பகிரங்க அறிவித்தல் 18-07-2002 அன்றைய நாள் ஈழநாதம் மக்கள் தினசரி இதழில் பிரசுரமாகியும், குறிப்பிட்ட நாட்களுக்குள், நீர் நேரடியாகவோ அல்லது உமது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ, மன்றில் தோன்றி எவ்விதமான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமையினால், மன்று இவ்வழக்கை 22-07-2002 கூப்பிட்டு ஒருமுக விளக்கத்திற்கு தவணையிட்டு, 19-08-2002 அன்று ஒருமுக விளக்கம் இடம்பெற்றது. அதன் அடிப்படையில் 16-09-2002 மன்றினால் வழங்கப்பட்ட ஒருமுகத் தீர்ப்பின்படி வரையப்பட்ட இடைக்காலத் தீர்வையின் பிரதி இத்துடன் இணைத்து இப்பகிரங்க அறிவித்தலுடன் உமக்கு பகிரங்கப்படுத்தப்படுகின்றது. எனவே இவ் இடைக்காலத் தீர்வை தொடர்பில், உமக்கு ஏதும் ஆட்சேபனை இருப்பின் அல்லது இத்தீர்வை முற்றாக தீர்வையாக்க முடியாது என்பதற்கு காரணம் இருப்பின், இப்பகிரங்க அறிவித்தல், இடைக்காலத் தீர்வை என்பன வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் மன்றில் தோன்றித் தெரிவிக்குமாறு இவ்வழக்கின் தன்மையைக்கருதி, சட்டப்படி உமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது.

தவறின் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் ஊடாக அறியத்தரப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி

வரைபு:- திரு. தா.இ.குலசங்கர்,
வழக்காளியின் சட்டத்தரணி,
இரத்தினபுரம், கிளிநொச்சி.

த. கிருஸ்ணவேணி,
உபபதிவாளர்,
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி. (சி.7459)

## பளை, பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் (வ-து)

அங்கத்தவர்க்கு:

### அறிவித்தல்

மேற்படி சங்கம் வடமராட்சி கிழக்கு அங்கத்தவர்களின் நலன்கருதி கொடுக்கிளாய் றோட், ஆழியவளை என்ற முகவரியில் சங்கத்தின் உப அலுவலகம் ஒன்றை 09-11-2002 ம் திகதி முதல் ஆரம்பித்துள்ளது.

வடமராட்சி கிழக்கு அங்கத்தவர்கள் தங்கள் தொடர்புகளை உபஅலுவலகத்தின் மூலம் மேற்கொள்ள வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

**க.புவனேந்திரம்**
**தலைவர்.**

(2604)

## நன்றி தெரிவிக்கின்றோம்

10-11-2002 அன்று எம்மால் தவறவிடப்பட்ட முக்கிய ஆவணங்களுடன் ஒரு தொகை பணத்துடனான பையை எம்மிடம் மீளக்கிடைக்கச் செய்த மாணிக்கம் வாமதேவன் நிரந்தரமுகவரி சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தியையும், தற்காலிக முகவரியாக கரிதாஸ் குடியிருப்பு வள்ளிபுனம். இவருக்கு மனமாற நன்றி தெரிவிப்பதுடன் இதனை எம்மிடம் தந்துதவிய தமிழீழ காவல்துறையினரிற்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கின்றோம்.

ராஜன்,மாலினி,
குடும்பத்தினர்.

(2173)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 18-11-1973
இறப்பு 14-11-1998



அன்னியன் அழிப்பில்
**சா.அருட்செல்வன்**



பிறப்பு 17-08-1972
இறப்பு 15-11-1998

அன்பின் பிணைப்பில்
**சா.அருள் மொழி**

**ஆண்டுகள் நான்கு போனதையா**
**அழுத கண்ணீர் இன்றும் ஓயவில்லை**
**மாண்டவர் மீண்டும் வருவாரா என**
**மானிலத்தார் இங்கே கேட்டாலும்**
**மண்ணிலே நீங்கள் வரவேண்டும்**
**மகிழ்ந்து நாம் சிரிக்க வேண்டும்.**
**என்றும் உங்கள் நினைவுடன் அன்பு**

த.முகவரி
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு (சி-6792)

அப்பா,அம்மா, சகோதரர்கள்
இ.சாம்பசிவம் (தலைவர்)
தெல்.ப.நோ.கூ.சங்கம் தெல்லிப்பளை.

## ஜெய் பிரேமசாந்தி!

அருள்மிகு
**சுவாமி பிரேமானந்தா மகரிசி**



**51வது ஜெயந்திதினம்**
17-11-2002

அன்பால் எம்மை ஆரத்தழுவி இல்லிடம் தந்து ஈகையும் உவந்து உள்ளத்தில் கள்ளமில்லா ஊக்கமும் தந்து எண்ணிலாக்கனவுகளை ஏற்றமுடன் காத்து ஐயம்பட்டவரை ஒன்றாக இணைத்து ஓராது தர்மம் காத்து ஔடதம் தந்து நிற்கும் அஃதின்று காண்கின்ற அகவை ஐம்பத்தொன்றில்

அகிலமெல்லாம் பரவிப்படர்ந்து ஆன்மீக நெறி பரப்பி வரும் சுவாமி பிரேமானந்தா நிலையங்களில் குருதேவரின் ஜெயந்திதினம் கொண்டாடப்படும். 17-11-2002 ஞாயிறு சுன்னாகம் அருள்மிகு ஹரிகர புத்திரர்(ஐயனார்) தேவஸ்தானத்தில் சுவாமிகள் பெயரால் முற்பகல் விசேட அபிசேக ஆராதனைகள் நடைபெற்று நண்பகல் எமது ஆசிரமத்தில் மதிய போசனம் இடம்பெறும். தொடர்ந்து பிற்பகல் மூன்று மணியளவில் சுவாமிகள் பாதபூசை திருவூஞ்சல், பஜனை வழிபாடுகளும் நடைபெற குருதேவர் திருவுள ஆசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்திருநாளில் கடந்த கால அமங்கல சம்பவங்களைத் துறந்து நிரந்தர சமாதானம் அமைதி வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பூபாலகிருஷ்ண ஆசிரமம்,
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம் - வடஇலங்கை. (7472)

திருமதி. நடராசா பாக்கியலட்சுமி,
சுவாமி பிரேமானந்தா நிலைய,
இலங்கை வடமாநில ஒருங்கிணைப்பாளர்.

## 2002 மாவீரர் நாளையொட்டி ஈழநாதம் மக்கள் தினசரி நடாத்தும்

# சிறப்பு இலக்கியப் போட்டிகள்

- **கட்டுரை**
  ஆறு தட்டச்சுத் தாள்களிற்கு மேற்படால் இருத்தல் வேண்டும்.
- **சிறுகதை**
  ஐந்து தட்டச்சுத் தாள்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- **கவிதை**
  30 வரிகளுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்
- **பயணக்கட்டுரை**
- **அனுபவப் பகிர்வு**
  நான்கு தட்டச்சுத் தாள்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.
- **ஓவியங்கள்**

- போட்டிக்குரிய ஆக்கங்கள் எந்தப் பரப்பிலும் எழுதப்படலாம்.
- சகல ஆக்கங்களும் 27.11.2002க்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- போட்டிமுடிவுகள்01.01.2003இல் அறிவிக்கப்படும்
- சிறந்த ஆக்கங்களுக்கு பெறுமதி மிக்க பரிசில் வழங்கப்படும்.
- தரமான ஆக்கங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.
- எல்லா இடங்களிலும் இருந்தும் ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

*ஆக்கங்கள் அனுப்பி வைக்கவேண்டியது:*
*மாவீரர் நாள் சிறப்பு இலக்கியப்போட்டி*
*ஈழநாதம் மக்கள் தினசரி*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*

## நேர்நோக்கு

# பயனற்ற முயற்சி...

விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கக் கூடிய நடவடிக்கைகளில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக அரசாங்கம் மீது ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது. எதிர்வரும் 25ம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு இடமளிப்பதன் மூலம் இவ்வாறான நிலையொன்றை அரசாங்கம் உருவாக்கப் போவதாகவும் தமிழீழம் தனியான ஒரு நாடு என்ற கருத்தாக்கத்தை இது உருவாக்கும் என்றும் அது மேலும் கூறுகிறது.

இன்று நடைபெற்று வரும் சமாதான நடவடிக்கைகளை. வெளிப்படையாகவே முற்று முழுதாக எதிர்க்கும் கட்சிகளில் முதன்மையானது. ஜே.வி.பி அதனால் ஜே.வி.பி இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளமையையிட்டு ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆனால் இக்குற்றச் சாட்டுக்கள் எவ்வளவு தூரம் போலியானவை என்பதை ஜே.வி.பி புரிந்துகொள்ள வேண்டும்.

முதலாவதாக இன்றைய சமாதான நடவடிக்கைகள் தானாகவே தொடங்கி விட்ட ஒன்றல்ல. அதாவது தமிழ் மக்களின் குறைபாடுகளை தாமாகவே புரிந்துகொண்டு அதனைத் தீர்த்து விடுவது என முடிவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப் பட்டவையல்ல.

50 வருடகாலத்திற்கு முன்பிருந்தே படிப்படியாக உரிமைகள் பறிக்கப்பட்ட தமிழினம் தனது தாயகத்தையும் தனது தேசியத்தையும், தனது சுயநிர்ணய உரிமையையும் பாதுகாக்க அகிம்சை வழியில் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்த நிலையில், ஆயுதப் போராட்டம் மூலம் தமக்கென ஒரு தனியரசை உருவாக்கும் முடிவுக்கு வந்தனர். இந்த ஆயுதப் போராட்டத்தை முன்னின்று நடத்தும் சக்தியாக விடுதலைப் புலிகள் அமைப்பு உருவாகியது.

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக அவ்வமைப்பு உறுதியுடன் நடத்திய போராட்டம்-அவ் அமைப்புடன் தமிழ் மக்கள் பூரணமாக இணைந்து நடத்திய ஆயுதப் போராட்டம் பெற்ற வெற்றியே இன்றைய சமாதான நடவடிக்கைகளுக்குக் காரணமாகும்..

கடந்த ஆட்சிக்காலத்தில் "சமாதானத்துக்கான யுத்தம்" எனவும் தமிழ் மக்களுக்கு சமாதானம் புலிகளுக்கு யுத்தம் எனவும் கூறி நடத்திய தமிழ்மக்களுக்கு எதிரான கொடூர யுத்தத்தை முறியடிக்க அவர்கள் கொண்டிருந்த உறுதிப்பாடு தமிழ் மக்களுக்கு-அவர்களுடைய போராட்டத்திற்கு- உலக அங்கீகாரத்தைப் பெற வழி ஏற்படுத்தியது.

இந்த யுத்தத்தால் சிறிலங்கா சந்தித்த பொருண்மிய, அரசியல் நெருக்கடிகள், இந்நெருக்கடியில் இருந்து மீள விடுதலைப் புலிகளுடன் பேசுவதே ஒரே வழியென உலக நாடுகள் கொடுத்த அழுத்தங்கள் என்பனவே இன்றைய சமாதான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளக் காரணமாகின.

அத்துடன் சனாதிபதி சந்திரிகா நடத்திய போலியான யுத்தம் அவர் கூறியதுபோல "புலிகளை ஒளித்துக் கட்ட ஒருபோதும் உதவப் போவதில்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

இவற்றின் பெறுபேறாக நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகளுக்கு விடுதலைப் புலிகள் வழங்கி வரும் ஒத்துழைப்பானது உலகில் புலிகளுக்கு நன்மதிப்பை ஏற்படுத்தி வருகிறது.

இவ்வாறு மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளின் அங்கமாக தாய்லாந்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கண்டு கொள்ளப் பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே புலிகள் ஒஸ்லோ மாநாட்டில் பங்குபற்றக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான நிலையில் அரசாங்கம் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாக ஜே.வி.பி புலம்புவதில் அர்த்தம் எதுவுமில்லை.

இந்த சமாதான முயற்சிகளுக்கு இலங்கையில் வாழும் மக்களில் பெரும்பாலானோர் ஆதரவாகவே உள்ளனர் என்பது என்றோ வெளிப்படுத்தப்பட்டுவிட்டது. கடந்த தேர்தலின்போது சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து ஐக்கிய தேசிய முன்னணியினரால் தாபித்தபோது யானை- புலி கூட்டு என்றும் புலிகளுக்கு ஐ.தே.மு நாட்டைத் தாரைவார்க்கிறது என்றும் ஜே.வி.பி கூக்குரல் இட்டபோதும் சிங்கள மக்கள் அதற்குச் செவிமடுக்கவில்லை. அவர்கள் சமாதானத்திற்கு ஆதரவாகவே இருந்தனர்.

அப்படியான நிலையில் இந்தச் சமாதான முயற்சிகளைக் கொச்சைப் படுத்த முயல்வதும் அவற்றைக் குழுப்பிவிட முயல்வதும் ஜே.வி.பிக்கு வெற்றிதரப் போவதில்லை.

அண்மைக்காலத்தில் அதாவது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னான சில அசம்பாவிதங்களில் ஜே.வி.பி பின்னணியில் இருப்பதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன. இவ்வாறு வன்முறைகளைத் தூண்டிவிடுவதோ அல்லது வன்முறைகளை நடத்துவதோ மக்கள் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கி வரும் இவ் வேளையில் பெரிதும் பயன்தரப் போவதில்லை.

மாறாக ஜே.வி.பி தேவையற்ற சிக்கல்களில் மாட்டிக்கொள்ளும் மக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கவுமே இது வழி செய்வதாக இருக்கும். சனநாயக வழிமுறையான பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி இப்பொழுது மக்களின் கருத்துக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது. இனவாதக் கருத்துக்களைப் பரப்பி,சிங்கள இனத்துக்கு ஏதோ அழிவுகாலம் வந்துவிட்டதாகக் கூறிமிரட்டி சமாதான முயற்சிகளுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டுவதற்கு ஜே.வி.பி முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

விடுதலைப் புலிகளை யுத்தம் அழிக்க வேண்டும் என கூறிவரும் ஜே.வி.பி மீண்டும் இலங்கையில் யுத்தம் ஒன்று ஏற்படுவதையே விரும்புகிறது. ஆனால் அவ்வாறான யுத்தம் சிங்கள மக்களுக்கு எந்தவிதத்திலும் நன்மை தரப்போவதில்லை என மக்கள் புரிந்துகொண்டிருக்கும் நிலையில் ஜே.வி.பியின் இந்த முயற்சிகள் பயனற்றவையாகவே போகும்.

**வேலவன்**

### 2ம் பக்கத் தொடர்ச்சி

மேற்கொண்ட ஊழல்கள், மோசடிகள், சமூகவிரோதச் செயல்கள், கொலைகள், போன்றவை முற்றுப்புள்ளியற்ற பட்டியல் தொடர்ந்து இன்றைய ஆட்சிக்காரர்களால் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் இவர்களின் மீதான விசாரணைகள் எந்த அளவுக்கு துரிதப்படுத்தப்பட்டு இவர்களுக்குரிய தண்டனை எப்படி வழங்கப்படும் என்பது கேள்விக் குறியே. ஏனெனில் இதனைத் தீர்மானிப்பவர்களும் அந்தக் குற்றவாளி அரசியல்வாதிகளாகவே உள்ளனர். இதனை விசாரிக்க வேண்டியவர்களும் அவர்களின் அறிவுறுத்தல்களுக்கும் தலையசைத்து செயல்படவேண்டிய நிலையிலேயே இருக்கிறார்கள். பாதாள உலகக் கும்பல் நபர்களை தனது பாதுகாப்பு பிரிவில் வைத்து போஷித்து பாதுகாக்கும் சனாதிபதி- கொலைக்குற்றங்களுக்கு ஆளான குடும்பத்தைச்சேர்ந்த முன்னாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரை - ரத்தவத்தையை - இன்னும் தனது மாமன் என்பதற்காக கட்சியை விட்டு கலைக்கும் திராணியற்ற, சனாதிபதி, பெண்கள் தொடர்பான பாலியல் விவகாரங்களில் அமைச்சுக்குள்ளேயே மிக அசிங்கமான முறையில் அவமானப்பட்ட ஒருவரை இன்னமும் தனது கட்சியின் முக்கியஸ்தராக கௌரவிக்கும் சனாதிபதி ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப் பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகிவரும் பாதுகாப்புத் துறை உயர்அதிகாரிகளுக்கு சேவை நீடிப்பு வழங்கி பாராட்டும் சனாதிபதி நியமிக்கும் சிறிலங்காவின் நீதிபதிகள் எப்படி இருப்பார்கள் என்பதில் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல ஒட்டு மொத்தமாக சிறிலங்காவின் மக்களுக்குக் கூட சந்தேகங்கள் இருப்பதென்பது தவிர்க்க முடியாத விடயமே.

பல்வேறு குற்றச்செயல்களில் பிதாமகர்களாக இருக்கும் சிறிலங்காவின் அரசியல்வாதிகளின் அபிலாசைகளுக்கு இசைவாக நடக்கும் அறிவுறுத்தல்களை ஏற்றுத் தீர்ப்பு வழங்கும் நீதிமன்றங்கள் வழங்கும் தீர்ப்புகளின் நியாயத் தன்மை குறித்து நாம் சொல்ல வேண்டியதில்லை..... அதுவும் தமிழ்மக்களுக்கு அநீதியான தீர்ப்புகளை வழங்கியே பழக்கப்பட்டவர்களான சிறிலங்காவின் நீதிபதிகள் (இதற்கு விதிவிலக்கான நீதிபதிகள் சிலரும் இருக்கவே செய்கின்றனர். ஆனால் அவர்களையெல்லாம் முக்கியமான வழக்குகளில் கவனமாகத் தவிர்த்துவிடும் நுட்பம் சிறிலங்காவின் அதிகார பீடத்தவர்க்கு கைவந்த கலையாகும்) வழங்கியுள்ள எமது தேசியத் தலைவர் மீதான தீர்ப்பு சிங்கள பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தவும், அதிகார பீடத்தவரின் நலனுக்குகந்ததாகவும் வழங்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.

எனவே தான் தமிழ் மக்கள் அதனை முற்றுமுழுதாக எதிர்க்கிறார்கள், நிராகரிக்கிறார்கள்- கண்டிக்கிறார்கள் சிறிலங்கா நீதிமன்ற தீர்ப்பு தங்களின் உயிரான தலைவரை எந்தவிதத்திலும் அசைக்காது என்பதை அவர்கள் நன்கு உணர்வார்கள். ஆனாலும் இந்தச் சமாதான காலத்தில், சர்வதேச சமூகம் எமது தலைவர் மீது பெரும் மதிப்பையும் நம்பிக்கையையும் வளர்த்து வரும் சமயத்தில் இதுவரை காலம் அவர் பற்றியும் அவர் தலைமையிலான தமிழீழ விடுதலை போராட்டம் குறித்தும் சிறிலங்கா அரசு மேற்கொண்ட பொய்ப் பிரச்சாரங்களால் ஏற்பட்ட மாயைகள் சிதறுண்டு போகும் நிலையில் இதனைச்சகிக்க முடியாத சிங்கள அதிகார வர்க்கம் அவர் மீது களங்கம் கற்பிக்கும் நோக்குடனும், சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் திட்டத்துடனும் மேற்கொண்டுவரும் ஒரு சதியின் அங்கமே இந்த நீதிமன்ற தீர்ப்பு ஆகும்.

சிறிலங்கா நீதிமன்றம் வழங்கிய இந்தத்தீர்ப்பினை விடவும் தமிழீழ மக்கள் அந்தத்தீர்ப்பினை நிராகரித்து கண்டித்து வழங்கிவரும் தீர்ப்புத்தான் மிகவும் வலிமையானது.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு

# 115 வயது 'சாதனை மனிதர்'



சாதனைமனிதர் திரு-சங்கரப்பிள்ளை கணவதிப்பிள்ளை மூன்றாவது தலைமுறைப் பூட்டப்பிள்ளையுடன் அமர்ந்திருக்கின்றார்.

115 வயதிலும் தடம்புரளாத திடகாத்திரத்துடன் வாழும் சாதனை மனிதர் திரு. சங்கரப்பிள்ளை, கணபதிப்பிள்ளை.

சாதனைக்கும் இனம் ஒரு தடையா 'எனக் கேட்கவைத்துள்ளது. "சாதனைமனிதர்" சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை என்பவரைப் பொறுத்த அளவில் உண்மையாகி வருகின்றது.

இவர் தற்போது இலங்கையிலுள்ள வயோதிபர்களில் அதி உயர் வயதில் உள்ளவர் ஆகவும் இந்தியாவில் இருந்து வெளியாகும் "முத்தாரம்" சஞ்சிகை 18.10.2002 இதழின் படி உலகத்தில் அதிஉயர் வயதை உடையவர்களின் பெயர்பட்டியலும் புகைப்படங்களும் பிரசுரிக்கப்பட்டன. அதன்படி 115 வயது உடைய ஒருவரே அதி உயர் வயதுடையவராகக் கணிக்கப்பட்டுள்ளார். ஆனால் அவர்களைவிட திரு. சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் 1887-08-15 ல் பிறந்துள்ளார். ஆனால் இவர் சம்பந்தப்பட்ட தகவல்கள் கொழும்புப்பத்திரிகை முதல் வடபகுதிப் பத்திரிகைகளில் வெளிவந்தபோதும் அவைபற்றி "கின்னஸ்" உலக சாதனைப்பதிவேட்டுத்தகவல் பெறுபவர்களோ. அரசாங்க அதிபரோ, உதவி அரசாங்க அதிபரோ இன்றுவரை எவ்வித உதவிகளோ நடவடிக்கைகளோ மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்பதோடு வேதனைக்குரியது.

இவரது பிறப்பிடம் யாழ்மாவட்டம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ளது. இவருக்கு ஆறு பிள்ளைகளும் 25 பேரப் 'பிள்ளைகளும் 9 பூட்டப்பிள்ளைகளும் உள்ளனர். இந்த சாதனை மனிதரிடம் பல திறமைகளும் செயல்பாடுகளும் நிறைந்துள்ளன.

இவரது வாழ்க்கை டச்சுக்காரரின் காலத்தை ஒட்டி அமைந்தது அவர்களுடன் பழகியமையால் ஓரளவு டச்சு மொழியும் பேசுகின்றார்.

மேலும் அக்கால நாட்டுக்கூத்திலும் நடித்ததாகத் தெரிவிக்கும் திரு.ச.கணபதிப்பிள்ளை அவர்கள் நாட்டுப்பாடல்களை சரளமாகப்பாடுகின்றார்.

இவரிடம் இவரின் நீடித்த வயதின் ரகசியம் பற்றி கேட்டபோது இயற்கையான உணவு என்று ஒரே பதிலில் முற்றுப்புள்ளி வைக்கின்றார்.

மீனவ சமுதாயத்தவரான இவர் "சம்மாட்டி" பதவி வகித்து பலரை உதவிக்கு வைத்து தொழில் செய்வித்தவராவார்.

இவருக்குச் சொந்தமாக பனங்காணி தென்னம் தோட்டம், காய்கறித்தோட்டம், நெல்வயல் போன்றவையும் உண்டு. இவர் அவற்றில் இருந்து பெறப்படும் இயற்கை உணவான ஒடியல் பிட்டு, ஒடியல்கூழ், குரக்கன் பிட்டு, தினை அரிசிச் சோறு போன்றவையையும், மருந்து தெளிக்காத காய்கறிகளையும் தான் சமைத்து உண்டு வந்துள்ளார். இன்றும் தேனீருடன் பனம் வெல்லம் கடித்துத்தான் பருகி வருகின்றார்.

இதன் காரணமாகவே இவர் இன்றும் கண்ணாடி பயன்படுத்தாமல் கூரிய பார்வையுடனும் ஒரு பல்லுக்கூட விழாத நிலையிலும் நன்கு காது கேட்கும் நிலையுடனும் ஊன்று கோல் அற்ற திடகாத்திரமான நடையுடனும் வலம் வருகின்றார்.

இவரின் உயர் வயதினை மதித்து 2000 ஆண்டு வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற முதியோர் தினவிழாவில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்பிரிவினரும் பொதுமக்களும் இணைந்து "சாதனை ம்னிதர் " என்று பட்டமளித்துக் கௌரவித்துள்ளனர்.

இடம்பெயர்வுகளின் போது இவர் வன்னிப்பெருநிலப்பரப்பு வடமராட்சி என பல இடங்கள் மாறி அலைந்த பின் தற்போது மீண்டும் தனது சொந்த இடமான வடமராட்சி கிழக்கிற்கே திரும்பி தங்கியுள்ளார். இவர் ஒரு பேணிப்பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு சாதனைப் பொக்கிசமாகும் எனவே அரசாங்க அதிபரோ உதவி அரசாங்க அதிபரோ இவரைப் பேணிப்பாதுகாப்பதே இச் சாதனை மனிதருக்கும் தமிழ் இனமக்களுக்கும் செய்யும் பேருதவியாகும். ♦♦

-ஈழதீபன்-

ஏழு ஆண்டுகள் ஒரு பொருளை நீ வைத்திரு அதன் உபயோகத்தை நீ அறிவாய். - யாரோ




# படமும் தகவலும்





சர்வதேச பந்தயம் ஒன்றில் கனடாவை பிரதிநிதித்துவப் படுத்திய கோல்ஃப் (Golf) வீரன், கனடாவின் முக்கிய பத்திரிகை "ரொரண்டோ ஸ்ரார்" அலுவலகத்தில் இவனுக்காக 500க்கும் அதிகமான வாசகர் கடிதங்கள். எதிர்கால ரைகர் வூட்ஸ் (Tiger Woods) என நிபுணரால் கணிக்கப்படும் இச் சிறுவன் கஜன் சிவபாலசிங்கம் எட்டு வயதிலேயே கோல்ஃப் விளையாட்டில் அதிகம் சாதிக்கும் நம்மவர் ஆவான். கனடாவில் ரொரண்டோ வுக்கு வடக்கே மார்க்கம் நகரில் வசித்து வரும் கஜனின் பெற்றோர் 1990 இல் கனடாவிற்கு குடி பெயர்ந்தவர்கள்.

புதிய தலைக்கவசங்கள் மார்புக் கவசங்களுடன் காட்சியளிப்பவர்கள் வேறு யாரும் அல்ல. வன்னியில் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்களே. நித்தமும் ஆபத்தை எதிர் கொள்ளும் இவர்கள் உயிருக்கு சிறு உத்தரவாதம் வழங்கியுள்ளன உதவி வழங்கும் நாடுகள்.



உலகின் கோடீஸ்ரர்களில் முதன்மையானவர், அனைவரது வாய்களிலும் முணுமுணுக்கப்படும் இவர் பெயர் பில் கேற்ஸ். இவரே மைக்ரோசொப்ட் நிறுவன ஸ்தாபகர். அண்மையில் இவர் எயிட்ஸ் ஒழிப்பு தொடர்பான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக இந்தியாவிற்கு வந்திருந்தார்.

இந்தியாவிலே கணனி மென்பொருள் உற்பத்தி அதிகமானதும் தரமானதுமாக உலகில் வளர்ச்சியடைந்திருப்பது அனைவரது கவனத்தையும் ஈந்திருக்கிறது.



பிரான்ஸ் நாட்டின் எல்லையொன்றில் அகதியாக நுழைய முயன்ற ஒருவரை எல்லைக் காவலர்கள் தடுத்து வைத்திருக்கின்றனர். பிரான்ஸ் நாட்டுக்கு உள்ளே செல்லும் அகதிகள் கொள்கலன்களிலும், எண்ணைத் தாங்கிகளிலும் மறைந்திருந்து அந்நாட்டின் எல்லையை கடக்கின்றனர். அவ்வாறு வருவோர்களை கைது செய்யும் பிரான்ஸ் அரசு திருட்டுக் குடிவரவாளர்கள் என்று அழைக்கின்றது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2002ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.